# சுதந்திரப் போர்

## முதல் பாகம்

## இளமையின் நினைவுகள்

# சுதந்திரப் போர்

## (விந்தியா)

### 1

ஆயிரமாயிரம் உணர்ச்சிகளும் ஆசைகளும் உறைந்த உள்ளத்தினள் ராஜேசுவரி. சற்று முன்பு கூட சின்னத் தம்பியையும் தங்கையையும் கூட வைத்துக் கொண்டு வீசி வீசி தொட்டில் ஆடினாள். .ஊஞ்சலைப் போன்ற பெரிய மரத் தொட்டில் அது. வாய்க்கு வந்த வரிசையையும் நாவுக்கெட்டிய ராகத்தையும் நினைப்பிழுத்த பாட்டினையும் பாடி முழக்கினாள். கொஞ்ச நேரத்திலே எத்தனை மாறுதல்? பசுமையாக விளங்கும் வாசற்புறத்துச் சின்னஞ் சிறு தோட்டத்திலே ஓர் ஓரமாக சிமெண்டு மேடை மீது பதுமை போல நிலைத்துவிட்டாள். குதித்தோடும் அவளுடைய உடலையும் கூவிப்பாடிக் களித்துள்ளும் அவளுடைய உள்ளத்தையும் கட்டுப்படுத்திவிட்டது, அவள் கைப்பிடித்த காதற்கதைப் புத்தகம்.

வாழ்க்கையிலும் மாறுதலை விரும்பி ஏற்கும் நிலையில் தான் அவள் இருந்தாள். இளமையின் தலைவாசலை மிதித்துவிட்ட ராஜேசுவரி, உலகத்திலே எங்கும் புதுமையும் அழகும் இன்பமுமே இருக்கக் கண்டாள்; வயது பதினைந்து. பதினைந்து முடிய இன்னும் சில மாதங்கள் பாக்கி; சேலை உடுத்தும் பெண்டிரைப் போலிருக்க விரும்பி, நாலு முழ அங்கவஸ்திரத்தையும், திரைச் சீலையையும் உடம்பில் சுற்றிக் கொண்டு பெருமித நடை போட்ட சிறுமி தன் கனவுகள் நனவாகும் பருவம் வந்துவிட்டதை உணர்ந்திருந்தாள். மன மலர்ச்சியும் உள்ளக் கிளர்ச்சியும் அவளுக்கு வாழ்வில் இன்ப நுகர்ச்சிகளாயின.

'ஙண ஙண' வென சைக்கிள் மணியை ஒலித்தார் நடராஜன். எதிர்பார்த்த முகம் தென்பட்டதுமே குஷி பிறந்துவிட்டது அவருக்கு.

“ராஜா பாய்! ராணிஜி!"

“என்னப்பா? வரணுமா நான்?"

"உம்? படி, படி!" முகத்திலே முறுவல் மிளிர, பூட்ஸ் அணிந்த கால்கள் டக் டக் என்று நடைபோட, வீட்டுக்குள் சென்றார் நடராஜன்.

கல்லூரியில் ஒரு சிறு கூட்டங்கூட ஏற்பாடாகியிருந்ததால் சென்றிருந்தார் அவர். திரும்பி வரும்பொழுது எத்தனை உற்சாகமாயிருக்கிறார்! சுவையுள்ள விஷயம் ஏதோ இருக்கிறது, விளக்கப் போகிறார் என்று தோன்றிற்று ராஜேசுவரிக்கு. கேட்டுவிட்டு, நல்ல சினிமா வந்திருக்கும் விஷயத்தைச் சொல்லிவிட்டு வர வேண்டுமென்று எழுந்து வந்தாள்; புத்தகத்தைப் படித்துக் கொண்டே வந்தாள்.

வீட்டுள்ளே அம்மாவுடன் பேசும் அப்பாவின் குரல் . . . என்ன சொல்கிறது?

"அட சுவாதி என்று நினைவிருக்கிறதா? பெண்ணின் ஜாதகத்தைக் கையில் பார்த்திருக்கிறீர்கள்! தேவலை!

"ஆம், தேவையில்லை ஜாதகம்! சுவாதியில் பிறந்த பெண்ணா? நல் முத்து ஆச்சே என்று சொன்னார். ஜாதகத்திலே ரொம்பப் பற்றுண்டாம், ஆனால் அவரே சொல்லிவிட்டார், நட்சத்திர பொறுத்தமே போதுமே என்று! பையனுக்கு அனுஷமாம்; பார், எனக்கும் அனுஷம்! மனுஷனாகப் பிறந்தால் அனுஷத்திலே பிறக்கணும், ஹூம், தெரியுமா?"

"சரிதான், இந்த நட்சத்திர பொருத்தம் தானா? மாமனாருக்கும், மாப்பிள்ளைக்குமா? ஏதுடாப்பா, வரன் பார்க்க சிரத்தை வந்ததா என்று பைத்தியமாட்டம் நானும் மகிழ்ந்து போய்விட்டேன்!"

"நான் சொல்கிற பொருத்தம் இது! அவர் சொன்ன பொருத்தம் சுவாதிக்கும், அனுஷத்திற்கும்

தான்! வேடிக்கையில்லை, நிஜமாகத்தான் சொல்கிறேன்! எங்கே, கொண்டா சேண்டோவை!"

பையன் யார்? எப்படியிருப்பான்? வரன் பார்க்கிறார்களா? பார்க்கட்டும்! பெயர் என்னவோ? பெயர், உருவம் . . . ஏன் குணங் கூட அழகாய் அமைந்தவனா?

இத்தகைய எண்ணங்கள் சுழல நின்ற ராஜேசுவரி, தம்பியைத் தூக்கிக் கொண்டு தந்தை வாசலுக்கு வருகிறார் என்று உணர்ந்ததும், புத்தகத்தைக் கூர்ந்து படிப்பவள் போன்று நின்றாள். அகத்திலே உள்ளதை முகத்திலே புலப்படுத்தும் குழந்தைதான் ராஜேசுவரி. ராஜேசுவரியின் நிலை நடராஜனுக்குப் புரிந்திருக்கவே வேண்டும். பேச்சுக் கொடுக்காமல், அவளை கவனியாதவர் போன்று, குழந்தையைக் கொஞ்சிக் கொண்டே செடிகளுக்கிடையே புகுந்தார்.சிறு சிமெண்டு மேடைக் கருகு பூந்தொட்டியிலே சிரிக்கச் சிரிக்கப் பூத்திருந்த சாமந்திப் பூ, நடராஜனின் அணைப்பிலிருந்த குழந்தையைப் போல் இன்பமாக சிரித்தது. பேசும் சக்தி மட்டும் அதற்கு இருக்குமானால், "காதற் கட்டத்தில் எத்தனை சுவை ராஜேசுவரிக்கு! ஒரே பக்கத்தைப் திரும்பத் திரும்பப் படித்தாள்!" என்று அது சொல்லிவிடும்!

"குலுங்கச் சிரிக்கிறாயா? கிட, கண்ணில் படாமல்!" என்று தண்டனை விதிக்க விரும்பி ராஜேசுவரி அந்தப் பூந்தொட்டியை நோக்கி விரைந்தாள். குழந்தையை ஏந்தியபடியே தந்தை செடிகளை கூர்ந்து நோக்குவதைக் கண்டு "எப்படியிருக்கு இந்தச் சாமந்தி பார்!" என்று சொல்ல ஆசைப்பட்டாள். பூவைப் பறித்து கூந்தலில் செருகி, பூவின் செருக்கை அடக்கிவிட்டதாகப் பூரித்து, அப்பாவிடமிருந்து தம்பியை வாங்கிக் கொண்டாள்.

"குஞ்சுக் கண்ணு எழுந்துவிட்டதே! அரைமணிக்கு முந்தி, பாட்டுக் கேட்டுக் கொண்டே தூங்கிற்றே! மறுபடியும் தொட்டிலாடுவோமா ஜிலுக்கு!" என்று கொஞ்சியபடியே வந்துவிட்டாள்.

அவளுக்கு நினைவில்லை; அல்ல . . . தெரியாது! குழந்தை தன் குரலினிமையில் கண்ணயர்ந்துவிட்டது என்று கண்டு, ஆர்வமுடன் முத்தமிட்டுவிட்டு, வீசு வீசு என்று மீண்டும் ஆட்டிவிட்டு புத்தகம் படிக்க வந்துவிட்டபோது, தொட்டிலை ஆட்டிய முரட்டு வேகம் மகவின் துயிலைக் கலைத்துவிட்டதை ராஜேசுவரி கவனிக்கவில்லை!

தம்பிப் பாப்பாவை தொட்டிலில் கிடத்திவிட்டு, தொட்டிலின் விளிம்பில் அமர்ந்து, தரையில் காலை ஊன்றி உந்தினாள். குரலிசை கிளம்பிவிட்டது!

'கண்ணா வா! மணி வண்ணா வா!' என்று பாடுகிறாளே, அது யாரைக் குறித்து? அருகிலிருக்கும் குழந்தையையா? வரவிருக்கும் மணாளனையா?

"ராஜா பாய்ஜி! பாட்டு வாத்தியார்!"

சடாரென ராஜம் தொட்டிலை நிறுத்தினாள். ஐயையோ, பாடிக்கொண்டிருந்த பாட்டு சினிமாப் பாட்டு ஆயிற்றே! நல்ல வேளை தமிழில் காப்பியடிக்கப்பட்ட ஹிந்தி மெட்டு அல்ல!

பிடில்களை எடுத்துவைக்கும் பொழுதே உள்ளே வந்துவிடும் வழக்கமுள்ள வாத்தியார் ஏன் இன்று வரத் தாமதம்?

கேள்விக் குறியுடன் வாசலை எட்டிப் பார்த்த ராஜேசுவரியின் முகத்தில் வியப்புக் குறி பாய்ந்தது.

'உபசாரமு!' 'நகுமோமு' . . . அப்பாவிற்குத் தெரியுமா? இந்தப் பாட்டுக்கள் எனக்கு நன்றாக வரும் என்று அம்மா சொல்லியிருப்பாளோ?

'வந்துவிட்டேனம்மா!' என்று கூறியவாறே வரும் வாத்தியார் முகத்திலே இதென்ன பூரிப்புப் பொங்குகிறது!

அந்திப் பொழுதின் வருகைக்கு மங்கல ஆரத்தி போல, இரண்டு பிடில்களும் நாதம் முழங்கின. ஜாம் ஜாம் என்று காம்போதி அடதாள வர்ணம் இயங்கத் தொடங்கியதும், அங்கவஸ்திரத்தைத் தோளில் போட்டுக்கொண்டு நடராஜன் வெளியில் போனார். போகும் பொழுது அவர் தம் புதல்வியையும், சூழ்நிலையையும் ஒரு நோட்டம் பார்த்துவிட்டு போனார் என்பதை சர்மா கவனித்தார். அட தாள வர்ணம் முடிந்து கணேசர் துதி தொடங்கிய சமயம், நடராஜன் ஒரு

முதியவருடன் வீட்டுள் நுழைந்தார்.

வந்தவரை ஏற இறங்கப் பார்த்தார் சர்மா; பரிச்சயமானவர் போல கை கூப்பினார். ராஜேசுவரி சிறிது தயங்கிவிட்டு, பிறகு, நிறுத்தாமல் வாசித்துக் கொண்டு போனாள். வாத்தியார்தான், அவ்வப்பொழுது யாரையாவது அழைத்துவந்து தமது சிட்சைத் திறமைக்கு விளம்பரம் செய்விப்பார். தந்தைக்கு ஏன் இன்று இத்தகைய கவனம்? வாத்தியாருடன் வருபவர்கள், புதல்வியின் இசைத் திறமையைப் பற்றி புகழ்ந்துரைத்துவிட்டுச் செல்வதைக் கண்டு, அவரும் இசையார்வம் படைத்தவராகி வருகிறார் போலும்!

தந்தையை அபிமானமுடன் ஏறிட்டுப் பார்த்தாள் ராஜேசுவரி. "உம், ஜமாய்!" என்று ஊக்கமளிப்பவர் போல தலையை உற்சாகமாக ஆட்டிவிட்டு, நடராஜன் தம்முடன் வந்தவரை நாற்காலியில் அமரச் சொன்னார்.

"சங்கீதம் கேட்பதற்குத் தரையில் உட்காருவது அழகு" என்று கூறிவிட்டு வந்தவர் தரையில் உட்கார முற்பட்ட பொழுது, நடராஜன் மற்றொரு ஜமுக்காளத்தை விரித்தார்.

சங்கீதத்தை ரசித்துப் பழகியவர் வந்துள்ளார், என்று ராஜேசுவரி உணர்ந்து கொண்டாள். சங்கீதம் ரசிக்கத் தெரியும் என்று ஒப்புக்கொள்ளாத அப்பா, இன்று இந்த நண்பரால் ரசிகராகிவிட்டார் என்று இன்பப் புன்னகை பூத்தாள் புதல்வி.

தங்குத் தடையின்றி, மிரட்சியின்றி, எப்பொழுதும் போல் நேர்த்தியாக வாசித்துவிட்டாள் பிடில்; வாசித்த மூன்று கீர்த்தனங்களும், ராஜேசுவரியின் கை லாகவகம், தாளக் கட்டு, சிட்சைத் திறமை ஆகிய அம்சங்களை விளக்கி உயர்த்திவிட்டன.

"எத்தனை வருட சிட்சை? அனாயாசமாக வாசிக்கிறாளே!" என்று, மனமார மகிழ்ச்சி புலப்படுத்திப் பாராட்டினார் புதியவர்.

"ஆறு வருட சிட்சை! இவரேதான் ஆரம்ப குரு!" என்று நடராஜன் பதிலளித்தார்.

"எனக்கும் பெருமை!" என்று கூறுகிற பாவனையில் கை கூப்பினார் வாத்தியார் சர்மா.

"ஒரே ஒரு குருவிடம் சிட்சை பயின்றாலே அது விசேஷமாகத்தான் இருக்கிறது!" என்று பெரியவர் போற்றினார்.

நடராஜன் முறுவலோடு நிறுத்திக் கொள்ளவே, சர்மா வாத்தியார், தமக்கே உரிய உரிமையுடனும் தோரணையுடனும், "கற்றுக் கொள்கிறவர்களின் திறமையும் வேணத்தான் வேணும்! ஒரே குரு நிலைக்கணும் என்றால் சொல்லித்தரவும் ஆசை ஏற்படும்படி நமக்குத் தோண வேணும்!" என்று ஒரு உற்சாகமான பதிலை வீசினார்.

"பேஷாக வேணும்! . . . ஏது நீங்கள் தமிழ் பேசுகிறீர்களே! இந்த ஆந்திர தேசத்திலே!" என்று முதியவர் வியப்புடன் வினவினார்.

"நான் சங்கீதம் கற்றது தட்சிண தேசத்தில்தான்! ஆஹா, அங்கே முழங்குகிற சங்கீதமும், அங்கிருப்பவர்களின் சங்கீத ஞானமும், . . அங்கிருந்து வரவே மனசில்லை! என்ன செய்யலாம் . . . ஏதோ, இப்படி . . .

நடராஜன் குறுக்கிட்டார். "சர்மாகாரு பாதிக்கு மேல் தமிழர் தான். ஏதோ, எங்கள் அதிர்ஷ்டம்தான் ராஜத்திற்கு இவர் குருவானார். என் மனைவி கூட அடிக்கடி சொல்வாள்; ராஜத்திற்கு பாட்டுப் பயிற்சி கிடைக்கணுமென்று தான் கடவுள் இவரை தமிழ்நாட்டிலிருந்து இங்கு அனுப்பிவிட்டார் என்றுதான் எங்கள் நம்பிக்கை. இந்த ஊரில் இவருக்கு மிஞ்சின குரு கிடையாது" என்று நடராஜன் கூறி மகிழ்ந்தார்.

சர்மாவின் முகம் ஒளிவிட்டது. "நான் சொல்லித் தருகிறது ஒரு பங்கு; ஆனால் இந்தப் பெண் பழகிப் பதம் படுத்துவது ஒன்பது பங்கு; அவளுடைய சிரத்தைக்கு மேல் பத்துப் பங்கு இவளுடைய தாயாரின் சிரத்தை! அந்தம்மாள் பெண்ணை விட்டாளா? குளிர் நாளில் காலையில் நாலு மணிக்கு எழுப்பி, அகார சாதகம் செய்விப்பார். பிடிலில் த்ருஸ்தாயி வாசிப்பார், பெண்ணுடன் கூட உட்கார்ந்து! அந்த அம்மாளும் இவளைப் போலவே வாசிக்கிறார் இப்பொழுது! சாதகமில்லாமல்

வந்துவிடுமா இந்த மாதிரிக் கை?"

இவ்வாறு கம்பீரமாகக் கேட்டுவிட்டு, பிறகு லேசாகச் சிரித்து, மெல்லிய குரலில், "அப்பாவிற்கு சங்கீதத்தில் ருசியில்லாவிட்டாலும், ஆசையாகப் பெண்ணுக்கு சொல்லி வைக்கிறார். குறுக்கே நெடுக்கே கேள்விகள் கிடையாது. சங்கீதம், பெண்களுக்கு லட்சணம் என்று தெரிந்தவர்; தாயாரின் ஒத்துழைப்பும் தான் இந்தப் பெண்ணின் வித்தைக்கு உரம்" என்று அழகாக சொல்லி முடித்தார் சர்மா.

தொலைவில் நிற்கும் அன்னையின் முக விலாசத்தை ராஜேசுவரி பார்த்தாள்! அட, இதென்ன, விசேஷம் என்ன? அம்மா மடிசார் புடவையில் காட்சியளிக்கிறாளே! சாயங்காலம், அப்பா ஏதோ சொன்னாரே, அதற்கும், இந்தப் பெரியவருக்கும் இணைவு இருக்குமோ?

"சரஸ்வதியின் கடாட்சம் இப்படிப்பட்டச் சூழ்நிலையில் தான் சித்திக்கிறது!" என்று பெரியவர் மீண்டும் பாராட்டினார்.

ராஜேசுவரியின் குரலிசை துவங்கியது. 'நகுமோமு' கீர்த்தனையில் அனுபல்லவி பாடும்பொழுது ராஜேசுவரியின் வெண்கலக் குரல் எழுப்பிய நாதம் நடராஜனைக் கூட பரவசப்படுத்தியது.

"குரல் அழகாக அமைந்திருக்கும்பொழுது விரல் தேவையில்லையம்மா? அட்சர சுத்தமாய், வாக்குச் சுத்தமாய், பாவமுடன் பாடுகிறாயே . . . ஆந்திர தேசத்திலிருப்பதனால்தான்! நீ வாய்ப்பாட்டையே பிரதானமாக எடுத்துக் கொண்டு மேன்மேலும் சிறப்பாக பாடலாம்! ஞானமும் நன்றாக விருத்தியாகிவிட்டால் முதல்தர கச்சேரி செய்துவிடலாம்!" என்று முதியவர் நேரடியாகவே ராஜேசுவரியிடம் பேசிப் பாராட்டி விட்டார்.

"ஆந்திர தேசத்திலிருப்பதனால்தான்!" ராஜேசுவரியின் நினைப்பு இதிலே ஈடுபட்டது! "ஆந்திர தேசத்திலிருப்பதனால் இந்தப் பெண்ணிற்குத் தகுந்த சிட்சையில்லை; அவர்களுடைய ஊராகியிருக்கட்டும், இந்தப் பெண்ணின் திறமைகள் இன்னும் சோபிக்கும்!" என்று சொன்னவர்கள் பலரை அவள் பார்த்திருக்கிறாள். "ஆந்திர தேசத்திலிருப்பதனால், உன் சங்கீதம் அட்சர சுத்தமாய், பாவம் நிறைந்திருக்கிறது" என்று ஒருவர் புகழக் கேட்டது அவளுக்கு இதுதான் முதல் அனுபவம்!

முதியவரை வழியனுப்பிவிட்டு நடராஜன் வந்தார். "அவருக்கு வெகு சந்தோஷம்!" என்றார் சர்மாவிடம்.

"எல்லாம் கலைவாணி கிருபை!" என்று கைகளை அஞ்சலி செய்தார் சர்மா,

"எனக்கு என்ன வெட்கமாயிருக்கிறது, தெரியுமா சார், இவர் முகத்தைப் பார்க்க!" என்று நடராஜன் தம்மையை சுட்டிக் காட்டிக் கொண்டு, கைவிரல்களை விரித்து புருவங்களை உயர்த்தி, ஹாஸ்ய பாவமும், துக்க பாவமும் காட்டி அபிநயம் பிடித்தார்.

வாத்தியார் சர்மாவும், ராஜேசுவரியும், மெல்ல வந்து கொண்டிருந்த விசாலமும், விழித்தார்கள்.

"பின்னே! இவர், 'வேண்டாம். வேண்டவே வேண்டாம்' என்று உதறித் தள்ளின உத்தியோகத்தைத்தானே நான் கொண்டா, கொண்டா என்று ஏற்றுக் கொண்டேன்! எனக்கு வெட்கமாகயிராதா?"

யாருக்கும் விஷயம் புரியவில்லை.

"ஒத்துழையாமை இயக்கம் நடந்தபோது, இவர் வேலையை விட்டுவிட்டார், 1920ம் வருஷத்திலே! அந்த இடம் காலியானதும், வெளியான விளம்பரத்திற்குத்தான் நான் மனுப்போட்டு வந்தேன்! இருபது வருஷம், ஜம்பமாக வேலை பார்க்கிறேன், வெட்கக்கேடு!" என்று கூறி நடராஜன் உடலை வளைத்து, வாய் பொத்திக் குறுகினார்.

விசாலம் சிரித்தாள் மெல்ல! "அப்பாவைப் பார்த்தால் பாவமாகவும் இருக்கு! கோமாளியாட்டம் செய்கிறதைப் பார்த்தால் கோவமும் வரது! வெட்கப்படற அழகு

இதானாக்கும்," என்ற ராஜேசுவரிக்கும் சிரிப்பு வந்தது.

"இதிலே வெட்கப்பட என்ன இருக்கு சார்! உங்களுக்கிருக்கும் காந்தி பக்தி மட்டும் குறைச்சலா?" என்று கூறிவிட்டு வாத்தியார் கையிலே பிடிலை எடுத்தார். பிடிலை மூடி வைத்துவிட்டு வாத்தியார் எழுந்து விடுவாரோ என்று நடராஜனின் ஐயம் போலும். "உம், பாட்டைக் கெடுக்கிறேனே!" என்று சொல்லிக் கொண்டே நகர்ந்துவிட்டார்.

"நான் ஹரிகதை பணி பண்ணினேன், அப்பா!" என்று கூவிக் கொண்டே வந்தான் ஒன்பது வயதுப் பையன்.

"நான் டான்ஸ் ஆடினேன் அப்பா!" என்று குடுகுடுவென ஓடி வந்தாள் ஐந்து வயது சிறுமி.

"அம்மா கூட நாடகமாடினாள் . . . பார், கொசாப் புடவை வேஷம்!" என்று கூறியபடியே நடராஜன் அப்பால் போய்விட்டார்.

"புதுப் பாட்டு வாசித்துவிடு, இன்றைக்குப் போதும்," என்று வாத்தியார் கூறவே, ராஜேசுவரி வில்லும், பிடிலும் ஏந்தி அமர்ந்தாள்.

மாலையில் தந்தை சொன்ன விசேஷச் செய்திக்கும், சற்று முன்பு வந்து போன முதியவருக்கும் தொடர்பு உண்டு என்னும் எண்ணம் இப்போது அவளுக்கு இல்லை.

அதனால் அவளுக்கு ஏமாற்றமா? ஆறுதலா? அந்த முதியவர் பால் தந்தைக்குத் தோன்றிய பணிவும் மதிப்பும், அப்பாவின் வெட்கத்தின் பிரதிநிதிகள் என்று ராஜேசுவரிக்கு இப்பொழுது நன்றாக புலனாயிற்று. அதனால் ராஜேசுவரிக்கு ஏமாற்றம் தான் என்று எப்படிச் சொல்லிவிடலாம்? புதுப்பாட்டு வாசித்தால் தவறுகள் ஏற்படுவது இயற்கைதானே?

சிந்தனைகள் பல சூழ்ந்தன எனினும், ராஜேசுவரியின் நினைப்பிலே மேலோங்கிய நினைப்பு ஒன்றேதான். நல் முத்து எனத் தன்னைக் குறிப்பிட்டவர் ஒருவர். பாட்டும், பிடில் வாசிப்பும் கேட்டுப் பாராட்டிச் சென்றவர் இன்னொருவர். இரண்டு பேர் இரண்டு விதமாக அவளைப் புகழ்ந்துள்ளார்கள். எதற்கு மனக் குறை? பாட்டுக்குப் புகழ்ந்தவர் தான் பிறப்பு விசேஷத்தையும் பெருமையாகக் கூறி மணவிலைப் பேச்சிற்கு அடிகோலியவர் என்று எண்ணுவதிலே மட்டும் விசேஷ உயர்வு என்ன?

## 2

ஆறுதலும், ஆனந்தமும் அவளைக் கண் வளர்த்தின. அன்றிரவு ராஜம் சுகமான நித்திரை செய்தாள்.

அதிகாலை, நாலரை மணிக்கு எழுந்துவிட்டாள். அவள் தினமும் எழுப்பும் அன்னை கூட இன்னும் எழவில்லை. பாட்டுச் சாதகம் செய்ய அமர்ந்தாள். "என்ன ஆச்சு மணி? நீயே எழுந்துவிட்டாயா?" என்று கேட்டவாறே விசாலமும் எழுந்துவிட்டாள். இசை பயிலும் புதல்வியோடு விசாலம் கூட பிடில் வாசிப்பது வழக்கம். ஆனால் இன்று அவள் காய்கறிகளை ஆய்ந்து அரிக்க உட்கார்ந்தாள்.

"ஏம்மா, என்ன விசேஷம் இன்னிக்கு?" என்று ராஜேசுவரி கேட்டாள்.

"நேற்று வந்து பாட்டுக் கேட்டாரே, அந்த மாமா சாப்பிட வரப்போகிறார்,"

"ஓஹோ, அதுக்கா? அவர் ஒருத்தர் தானேம்மா வருவார்? பின்னே சிரார்த்தத்துக்கும், விருத்துக்கும் செய்கிற மாதிரி இத்தனை சீக்கிரம் கறி நறுக்குகிறாயே!"

"கண்டபடி சொல்லாதே! பாட்டைக் கவனி! ஒருத்தர்தான் என்றாலும் விருந்துச் சமையல்தானே! அப்புறம், கையொழியாமல் நான் திண்டாடினால் யார் ஒத்தாசை செய்வா? நீ வரயா? அதற்குத்தான் இப்பவே ஆரம்பிக்கிறேன்! இந்த அவரைக் காயை ஒரு நாழி ஆயணுமே!" என்று விசாலம் சற்று கடுமையாகவும், பிறகு நிதானமாகவும் கூறினாள். சிரார்த்தம் என்று ராஜம் போட்ட சொல் அவளுக்குக் கசந்தது!

ராஜேசுவரிக்குப் பல புது அனுபவங்கள் அன்று காத்திருந்தன. அவளுடைய தந்தை, அவள் பள்ளிப் பாடங்களைக் கவனித்து எழும் சமயம் வந்தார். "மாமா ஏதாவது பேசக் கூப்பிட்டால்

வெட்கப்படாமல் நிதானமாக பதில் சொல்லணும் தெரியுமா? ஹாங், ஹாங் என்று கோணங்கி பண்ணிக் கொண்டு ஓடி விடக்கூடாது!" என்று அவர் கூறியதும், ராஜம் ஒரு தினுசாக விழித்தாள்.

"அவர் நல்ல காந்தி பக்தர், நாமும் காந்தியிடம் பக்தியுள்ளவர் தாம், ஆனால் பார், நம் துணிகள் கதர் இல்லை. அவர் செயலிலே காந்தி பக்தி காட்டுகிறவர், வேலையை உதறினவர்; கதர் தான் கட்டுகிறார். அவர் தாம் வேலை பார்த்த காலேஜ் எப்படியிருக்கு என்று பார்க்க ஆசைப்பட்டு இந்த ஊருக்கு வந்திருக்கிறார். காலேஜை சுற்றிப் பார்க்க அவர் வந்தபொழுது தான் பரிச்சயம் ஆச்சு, முந்தா நாள்! ஆனால் எத்தனையோ நாள் பழக்கம் ஆனது போல் எனக்குத் தோன்றுகிறது!" என்று மகளிடம் கருத்துடன் மொழிந்தார் நடராஜன்.

தந்தையின் முகத்திலே நிலவிய பாவம், ராஜேசுவரிக்கு "பாவம், அப்பா" என்று தோன்றியது.

எத்தனை தடவை உருக்கமாக எத்தனை விஷயங்கள் சொல்லியிருக்கிறார்? அவர் இளம் வாலிபனாக இருந்தபொழுது அந்நியத் துணி பகிஷ்காரத்தில் கலந்து கொள்ள விரும்பினார். அவளுடைய பெற்றோர் அவருடன் ஒத்துழைக்கவில்லை! கோபித்தனர். சில பையன்கள் செயலில் தம் வீரத்தைக் காட்டியபொழுது, நடராஜன் கோழையாக ஒதுங்கி நிற்க வேண்டி நேர்ந்தது. இதை அவர் கூறிய போது எப்படி உணர்ச்சி வசப்பட்டுப் போனார்!

காந்திஜி அந்நிய நாட்டுத் துணிகளைக் கொளுத்தச் சொன்னார். "ஏழைகள் நிறைய இருக்கும்பொழுது அவர்களுக்கு அவற்றைத் தரக் கூடாதா?" என்று கவி தாகூர் கேட்டார். "எச்சிலை உண்ணக் கொடுப்பது எத்தகைய பாவச் செயலோ, அது போலவே இதுவும் ஈனச் செயல்," என்று காந்திஜி முழங்கினார். "குளிரில் ஏழைகள் நடுங்குகிறார்களே, கொடுத்தால் தவறில்லை!" என்று தாக்கியது மீண்டும் கேள்விக் குரல். "துணிகளைக் கொளுத்திவிட்டு, அந்தத் தீயருகு குளிர் காய்வது நன்று," என்று காந்திஜி விடை முழக்கினார். எத்தனை உருக்கமாக, ஆனந்தமாக அப்பா பேசினார் என்று ராஜம் நினைவு கூர்ந்தாள்.

"ராஜம், இங்கிலீஷ் வாயில், இங்கிலீஷ் சீட்டி என்று ஏன் சும்மாச் சும்மாச் சொல்கிறாய்? வாங்கிக் கொண்டு விடு, ஆனால் நா கூசாமல் அத்தனை தடவை சொல்கிறாயே, அது தான் எனக்கு வருத்தமளிக்கிறது!" என்று வருந்தினாரே ஒரு நாள்!

அவருக்கு ஏன் இத்தனை மனக்குறை, வெட்கம்? அவருடைய காந்தி பக்தி மட்டும் கொஞ்சமா? 'ஐயோ, அப்பாவே, உங்கள் மனக்குறையைக் குறைக்கட்டுமா?" என்று எண்ணிய ராஜேசுவரி, " பின்னே, அவர் விருந்து மட்டும் சாப்பிடலாமோ? எளிய உணவு சாப்பிடணும் என்று காந்தி சொல்கிறாரே!" என்று கேட்டாள்.

நடராஜன் மெல்ல நகைத்து, "காந்திஜி பெருமை வேண்டாம் என்றாலும், மற்றவர்களுக்கு அவரைப் பெருமைப்படுத்தத்தானே தோன்றுகிறது!" என்று பதிலளித்தார்.

'நீங்கள வெட்கப்படுவதற்கு அவசியமில்லை என்று சொல்வதற்காகத்தான் நான் அப்படிக் கேட்டேன். பெரியவரிடம் எனக்கும் மரியாதை தோன்றுகிறதப்பா, கவலை வேண்டாம்!' என்று மனதுள் நினைத்துக் கொண்டே ராஜேசுவரி, அப்பால் போய்விட்டாள்.

ராஜேசுவரியும் குழந்தைகளோடு குழந்தையாகச் சாப்பாடு முடித்துக் கொண்டு, தொட்டிலாடத் தொடங்கிவிட்டாள். அவளையே பிரதிபலிப்பது போன்று விளங்கும் பெரிய மரத்தொட்டில் அது. ஊஞ்சலைப் போன்ற நீளமும், வசதியும் தொட்டிலுக்குரிய சௌகரியமும், அதற்கு உண்டு.

சாப்பாட்டு உள்ளை மட்டும் பெருக்கி சுத்தம் செய்துவிட்டு ராஜேசுவரி போய்விட்டாள் என்று கோபமோ, சீற்றமோ கொள்ளவில்லை அந்த அன்னை; விருந்தினரான முதியவரும் நடராஜனும் சமையற்கட்டுக்கு வரும்பொழுது கூட ராஜேசுவரி தொட்டிலைவிட்டு இறங்கவில்லையே என்று தான் வருத்தப்பட்டாள்.

விசாலத்தைப் பார்த்து துரைசாமி அய்யர், "அப்பளம் பொறித்திருந்தால் போட்டுவிடுங்கள்; மறந்துவிட்டதாக அப்புறம் வருத்தப்படப் போகிறீர்கள்!" என்றார்; நடராஜனைப் பார்த்துச் சிரித்தார்.

விசாலம் தயக்கமுடன், "பொறிக்கவில்லையே அப்பளம்! அகத்தில் இல்லை.... கடையிலும்

இல்லையாம்!" என்று சொன்னாள்.

"எனக்குத் தேவையில்லையம்மா! அப்பளம் இல்லாமல் சாப்பிடுவது எனக்கு இஷ்டம். பொறித்துவிட்டீர்களோ என்னமோ, போடுவதற்கு மறந்துவிட்டீர்களோ, என்னமோ வருத்தப்படுவீர்களே என்று சொன்னேன். பச்சடி, கூட்டு, கறி, பாயாசம், வடை, பட்சணம் எல்லாம் சம்பிரதாயமாகச் செய்திருக்கிறீர்களே, அப்பளமும் பொறித்திருப்பீர்கள், மறந்திருக்கலாம் என்று சொன்னேன், "என்று துரைசாமி அய்யர் சமாதானம் கூறினார்.

"விருந்து என்றால் அப்பளம் முக்கியந்தானா? எனக்குத் தெரியாது, கேட்கிறேன்" என்று நடராஜன் கேட்டது விசாலத்திற்கு உவக்கவில்லை.

"விருந்து என்று நான் செய்யவில்லை. ஏதோ . . . " என்று இழுத்தாள் விசாலம்.

"விருந்தல்லாமல் இது வேறு என்ன? ஒரு அப்பளம் தவிர பாக்கி எல்லாம் இருக்கிறதே!" என்று துரைசாமி கேட்டதும் தான், விசாலத்திற்கு அப்பளம் இல்லாத குறை அதிகம் உரைத்தது.

"இது விருந்து என்று தான் எனக்குப்படுகிறது; அறுசுவை உண்டி; காரம், உப்பு, புளிப்பு, தித்திப்பு, கசப்பு, துவர்ப்பு.... " இல்லையா இதிலே?" என்று கேட்டார் நடராஜன்.

கணவரின் தர்க்கம் விசாலத்திற்குக் கஷ்டமாயிருந்தது. "போதுமே, நான் விருந்து என்று செய்யவில்லை இதை . . . " என்று மெல்ல பதிலளித்தாள்.

துரைசாமி விசாலத்தை ஏறிட்டுப் பார்த்து, "என் அகமுடையாள் ஒரு அப்பள அம்மாமி! கேட்டீர்களா? அப்பளம் இடுவது அவளுடைய 'ஹாப்பி'. அதிலே அவளுக்கு ரொம்ப பெருமை. அப்பளம் இல்லாமல் விருந்துண்டா என்று சொல்வது அவள் வழக்கம். எப்பொழுதும் வீட்டில் அப்பளம் ஸ்டாக் வைத்திருப்பாள் அவள் சொல்கிறதைத்தான் நான் சொல்கிறேன்!" என்று கூறிவிட்டுச் சிரித்தார். விசாலமும், ஆறுதலைடைந்தாள். கணவரைப் பார்த்தாள் புன்முறுவலுடன். சாப்பாடு இனிது நடந்து கொண்டிருந்தது.

அவர்கள் சாப்பிடும் சமயம் ராஜேசுவரி, சினிமாப் பாட்டு ஒன்றைப் பாடிக் கொண்டிருப்பதைக் கவனித்து அதிகம் கவலைப்பட்டாள் விசாலம். மெல்ல சமையலறையை விட்டு மகளின், முன்பு வந்து, "ஏதாவது வேறே பாட்டு தான் பாடேன்! சினிமாப் பாட்டு வேண்டாம்!" என்று கூறிவிட்டு விடுவிடுவென்று போய்விட்டாள்.

"இதேதடா கெடுபிடிகள்!" என்று வியந்தாள் ராஜேசுவரி. மடிசார் புடவை கட்டியிருக்கிறாள் அம்மா. காந்திபோல சினிமாவே போகாதவரோ இவர்!" என்று விருந்தாளியைப் பற்றி நினைத்தாள். "அம்மாவுக்கும் அப்பாவுக்கும், பயம் வெட்கம் என்றால் நானும் அப்படி இருக்கணுமோ!" என்று வீம்புடன், 'சினிமாப் பாட்டுத்தான் பாடுவேன்! அது ராகமாலிகையாக இருந்துவிட்டுப் போகட்டும்," என்று முடிவு செய்து, 'மனங்குளிர! என்று பாடத் தொடங்கிவிட்டாள்.

சகுந்தலை, கணவரின் ஆசிரம் விடுத்து கணவனை நாடிப் புறப்படும் சமயம், தன் சூழ்நிலையைப் பார்த்துப் பார்த்து விடைபெறும் காட்சியில் அந்தப் பாட்டுப்பாடுகிறாள், சினிமாவில். இப்பொழுது ராஜேசுவரி அந்தப் பாட்டுத் துவங்கியதும், விசாலம் இன்ப வேதனை கொண்டாள். பாட்டின் அழகு குன்றாமல் பெண் பாடியதும், பெருமைப்பட்டாள். இதை ராஜேசுவரி அறியவில்லை.

உணவு கொண்ட பின் வாசலுக்கு வந்த நடராஜனும், முதியவரும் சிறிது நேரம் பேசினார்கள். வாசற்புறம் செடிகளைப் பார்த்தார் பெரியவர்.

"அதென்ன, பருத்திச் செடியா?"

"ஆமாம், கொள்ளைப் பருத்திக் காய்க்கிறது!"

"நட்டுப் பயிராக்கினீர்களா? அதாகவே முளைத்தா?

"அதாகவேதான் முளைத்தது என்ற ஞாபகம். ராஜம், இங்கே வா!" ராஜேசுவரி வந்தாள்.

"பருத்திச் செடி யாராவது நட்டதா? அதாகவே முளைத்தா?"

"தலையணைக்குப் பருத்தியடைத்தபோது, கொட்டை ஆய்ந்த்தை அங்கே போட்டதே . . . "

"ஓஹோ, செடியாக நடவில்லை! அதாகவும் வெறுமனே முளைக்கவில்லை! கொட்டைகள் ஊன்றிப் போய் முளைத்துவிட்டது!" நடராஜன் சிரித்தார், ராஜேசுவரியை பார்த்து.

முதியவர் முறுவலித்து, "பருத்திச் செடி வீட்டில் இருப்பது விசேஷமில்லை என்று சொல்வார்கள் . . . அதற்காகக் கேட்டேன். வேணுமென்று நட்டீர்களோ...."

"ஏன், என்ன கெடுதல்? எத்தனைபேர் வீட்டிற்கு சுவாமி விளக்கு ஏற்றி இந்தப் பருத்தி போயிருக்கே சார்!"

"பருத்திக் காய், அத்திக்காய் . . . இதெல்லாம் வெடிக்கும் காய்கள். தொலை தூரம் போய் விழும். பணமும் அந்த மாதிரிப் போய்விடுமாம், என்னமோ சொல்வார்கள்."

நடராஜன் சிரித்தார். "அப்படியா? இருக்கலாம். பருத்தியை அள்ளி அள்ளி எல்லோருக்கும் கொடுக்கத் தோன்றுகிறது. ஊருக்கெல்லாங்கூட அனுப்பினோம்; சுவாமி விளக்கு ஏற்ற உதவும் என்று. இதே வழக்கம், கூசாமல் அள்ளிக் கொடுக்கும் வழக்கம் பண விஷயத்திலும் வந்துவிடுமோ என்னமோ!" என்று தந்தை விளக்குவதை ராஜேசுவரி வியந்தாள்! எத்தனை அழகாக அப்பா சொல்கிறார்! பெரியவர் கூட உற்சாகமாக தலையசைக்கிறாரே!

"ஆம், அப்படித்தான் ஏற்படுகிறது.... சரியான பொருத்தம் நீங்கள் சொன்னது."

இந்தச் சமயத்திலே விசாலம் வாசற்புறத்தின் கதவருகு ஒண்டி நின்றாள். ராஜேசுவரி, தந்தை பேசுவதைக் கேட்டபடி நின்றுவிட்டாள் வாசலிலே; அதனால் ராஜேசுவரியை சமிக்ஞை செய்து உள்ளே அழைத்தாள். பெண் உள்ளே வந்ததும், "அங்கேயே நின்று விட்டாயே என்று கூப்பிட்டேன்" என்றாள்.

"இதேதடா" என்று குழம்பிப் போய் பதில் பேசாது ராஜேசுவரி அப்பால் சென்றாள். தாயினருகு வந்துவிட்டாள்.

"பொருத்தம் என்றதும் நினைவு வருகிறது. நட்சத்திரப் பொருத்தம் போதும் என்று சொன்னீர்களே, என் பெண் ஜாதகம் நான் கொடுக்கட்டுமா, வேண்டாமா?" என்று கேட்டார் நடராஜன். 'ஜாதகம் கொடுங்கள்' என்று அவர் கேட்கவில்லை என்று விசாலம் அதிருப்திப்பட்டாள். ராஜம் திடுக்குற்றாள்.

"கொடுங்கள்; நான் போய் ரகுபதியின் ஜாதகம் அனுப்புகிறேன். உங்கள் பந்துக்கள் பொருத்தம் பார்க்க விரும்பலாம் அல்லவா?"

ராஜேசுவரி பிரமித்தாள். நல்முத்து என்று அவளைப் புகழ்ந்தவரும், தன் இசைத்திறமையை மெச்சியவரும் இவரேதானா? அவர் இவரேதானா? ஓஹோ, பையன், இவர் பிள்ளையா? எப்படி இருப்பான் பையன்?

அப்பொழுது ஏற்பட்ட பரபரப்பில் ராஜேசுவரி கூடத்திலே நிற்க கூசி பின்கட்டுக்குப் போய்விட்டாள்.

துரைசாமி அய்யரை வழியனுப்பிவிட்டு உள்ளே கணவர் வந்ததும், விசாலம், "பையன் எப்படி இருப்பானாம், கேட்கிறது தானே மெல்ல! மற்றதெல்லாம் பளிச்சுப் பளிச்சு என்று கேட்கிறீர்களே!" என்று வினவினாள்.

"எதற்குக் கேட்கிறது? அவர் பிள்ளை அவருக்கு அழகாயிருப்பான். நம் கண்களுக்கு ... அதுவும் பெண்ணின் கண்ணுக்கு எப்படித் தோன்றுவானோ?"

"பையன் இவர் மாதிரி இருந்தால் நன்றாகவே இருக்கலாம் . . ."

ராஜேசுவரியின் ஆவல், "அம்மா, கேள்வி கேள்!" என்று கூறியது. உள்ளம் சிறகடித்துக் கொண்டது. 'பையன்' 'பையன்,' என்று சொல்கிறார்கள், பெயர் கூட தெரிந்த பாடில்லையே என்று அவள் துடித்தாள்.

'தொட்டிலில் உட்கார்ந்துகொண்ட நடராஜன், "ஊகங்கள் எதற்கு? நேரிலேயே பார்ப்போம்.

அப்புறம் தான் எல்லாம் நடக்கும்" என்றார்.

"பையனின் பெயர் ரகுபதி என்றா சொன்னார்?" என்று மீண்டும் கேட்டாள் விசாலம். "ஆமாம் போலிருக்கு. ரகுபதியின் ஜாதகம் அனுப்புகிறேன் என்று சொன்னாரே. அது பையனின் பெயராகத்தானிருக்கும்."

'ரகுபதி! அழகிய பெயர்!'

"பெண் பேர் பவானியா? இவர் பேர் என்னவாம்?"

"துரைஸ்வாமி அய்யர்" என்றார் நடராஜன் சிரித்து. கணவரின் சிரிப்புக்கு விளக்கம் கண்டாள் விசாலம். "ஓஹோ, துரைகளை வெறுப்பவருக்கு துரைசுவாமியா பெயர்?"

"வெறுக்கிறது என்றால் மனுஷர்களை வெறுப்பதல்லவே! இந்தியர்கள் விஷயத்தில் அவர்கள் கொண்டிருக்கும் கொள்கைகளைத்தான் காந்தி மகாத்மா வெறுக்கிறார்!" என்று நடராஜன் விளக்கினார்.

'அப்பாவுக்கு எத்தனை தெரிகிறது!' என்று வியந்து நின்றாள் ராஜேசுவரி. அவளுடைய உள்ளத்திலே காந்தி பக்தி அதிகம் உண்டு. தந்தை ஊட்டிய அறிவமுது அது.

'பவானி, ரகுபதியின் தங்கை பெயர்! அழகிய பெயர்கள்.'

ராஜேசுவரி!.... பழங்காலப் பெயர் என்று அவர்கள் எண்ணிவிடுவார்களோ?

"ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம் நான்; போட்டோவை அனுப்பச் சொல்லியிருக்கலாம். ராஜேசுவரியின் போட்டோவைக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வரட்டுமா?" என்று தொட்டிலைவிட்டு குபீர் என்று எழுந்தார் நடராஜன்.

"எந்த போட்டோவை அப்பா கொடுப்பாரோ?" என்று ராஜம், ஆவல் கொண்டதில் வியப்பில்லை!

கவலையின் பிஞ்சு மகவுதான் ஆவல்!

தந்தையின் செல்வப் புதல்விதான் ராஜேசுவரி; ஆனால் தாயைப் போன்ற மகள் தானே?

## 3

விசாலத்தின் குரு, துணைவர், யஜமானர் எல்லாம் அவள் கணவர் நடராஜன் தான். கிராமத்துப் பெண்ணான விசாலம், பதினைந்து வயதில் தன்னந்தனியாக மனைவி ஸ்தானம் வகிக்க வந்தபோது அவர், விசால நோக்கும், விசால இருதயமும் படைத்த இல்லாளாக அவள் என்றென்றும் விளங்குவதற்கு வேண்டிய வசதிகளும், ஊக்கமும் அளித்து விட்டார். அவளுடைய ஆசைகளையறிந்து அனுசரிக்க அவளுக்கும் கசக்கவில்லை. ஆனால் கொஞ்ச காலமாக, ராஜேசுவரி திருமணவிஷயமாக விசாலம் கவலைப்படத் தொடங்கிவிட்டாள். உறவினர்களும், மற்றவர்களும், "பாருங்கடியம்மா வரன்! தொலைவில் இருக்கிறீர்களே? இங்கிருக்கிறவர்கள் பாடே சிங்கியடிக்கிறதே!" என்று கடிதங்களிலே கேட்டு பயமுறுத்தவே, விசாலம் திடீரென்று மாறிவிட்டாள். 'விசாரம்' என்ற பெயருக்குத் தகுந்தவளாகிவிட்டாள்.

விசாலம் பற்பல யோசித்தபடி வீட்டில் வளைய வந்தாள். இந்த வரன் விஷயமாக அவள் நினைத்துக் கொண்டே இருக்கிறாள் என்பது நடராஜனுக்குத் தெரிந்தது. திடுமெபென்று விசாலம் கேள்விகளைக் கேட்டாள். "பருத்திச் செடி இருந்தால், பணம் அதிகம் விரயமாகும் என்று சொன்னாரே! பணத்தில் கருத்து உண்டு போலிருக்கு; எத்தனை கேட்பாரோ?" என்றாள்.

"வரதட்சணை வாங்க மாட்டார் அவர். பெண்ணுக்குத் தரவில்லையாம்."

"பெண்ணுக்குத் தரவில்லை என்றால், பிள்ளைக்குக் கேட்க மாட்டார்கள் என்று நிச்சயமா?"

"பெண்ணுக்கு வரதட்சணை தரவில்லை என்று அவர் வலுவிலே சொன்னார் என்றால், பிள்ளைக்கு வரதட்சணை வாங்கும் உத்தேசம் இல்லை என்று தெரியவில்லையா?"

'ஆமாம், நிஜம்தான்' என்று விசாலம் சமாதானம் அடைந்தாள்.

சிறிது பொறுத்து, மீண்டும் கேள்வி!

"அவர் பருத்திச் செடியைப் பற்றி சொன்னதைப் பார்த்தால், நம்மிடம் பணமிராது, ஒன்றும் செய்ய மாட்டோம் என்று நினைத்திருப்பாரோ?"

"அவர் அப்படி நினைத்தால் சரிதான். நம்மிடம் ஏது ரொக்கமும் பணமும்! ஏதோ, முடிந்தவரையில்தான் செய்வோம். ராஜத்திற்காகத்தான் அவர்கள் பண்ணிக் கொள்ள வேண்டும். இவர் அப்படித்தான் நடப்பார். சீருக்குப் பார்க்க மாட்டார்."

"ஆம், வேலையை உதறினவராச்சே!" என்று விசாலம் பதிலளித்தாள். அவளுடைய முகம் காட்டும் ஆறுதலைக் கண்டு நடராஜன், அந்த ஆறுதலை நிலைக்கச் செய்ய விரும்பினார்.

"ஏன், வீண் கவலை? அவர் தான் சொல்லிவிட்டாரே, உங்கள் பெண் நாட்டுப் பெண் என்று! இன்றும் என்ன நாம் எதிர்பார்க்க முடியும்? அவர் எதுவும் கேளாத பொழுது, நாம் என்ன கேட்பது? பிள்ளை நமக்குச் சம்மதமானால், எல்லாம் ஆயிற்று. ராஜேசுவரியை அவர்கள் நிச்சயம் ஏற்பார்கள்."

விசாலத்தின் கவலை தாற்காலிகமாகக் குறைந்தது. ஆனால் அன்று மாலையே வேறுவித விசாரம் பிடித்துக் கொண்டது!

"வலுவிலே வருகிற பிள்ளையகத்துக்காரர் உண்டா, இவர் பெருந்தன்மை யாருக்கு வரும், என்று சொல்லி பெருமைப்பட்டுக் கொண்டேன், அடுத்தகத்து சீதம்மாவிடம். உடனே அவள் என்ன சொன்னாள் தெரியுமோ? 'ஏதாவது காரணம் குறை இருக்கப் போகிறது, அவசரப்பட்டு விடாதீர்கள்' என்று டக்கென்று சொல்லிவிட்டாள். நமக்குத் தோன்றவே இல்லை இந்த எண்ணம்! சீதம்மா என்னைவிட சின்னவள்தான், ஆனால் அவளுக்கு எத்தனை தெரிகிறது? பிறத்தியாரைப் பார்த்தாவது நாமும் தெரிந்து கொள்ள வேணும்! அவர் சொன்னாரே என்று தலை கால் தெரியாமல் மகிழ்ந்து விடக்கூடாது என்று இப்பொழுது தான் தெரிகிறது!" என்று விசாலம் சொன்னதும் நடராஜன் முறைத்தார்.

"அட! இன்றைக்கு நீ துளியாவது மகிழ்ந்து போனாயா என்ன? கவலைக் கேள்விகள் தானே கேட்டுக்கொண்டேயிருக்கிறாய்_! நான் போட்டோவைக் கொடுத்துவிட்டு வந்ததுமே, அதைப் பற்றி நினைப்பதை விட்டுவிட்டேன். நீ சதா, அதையே நினைத்த வண்ணமாயிருக்கிறாய்! இப்படியா ஒரு கவலை! நான் பிறரை நம்புவேன்! அவர்களுடைய நல்லதனத்திலே நம்பிக்கை வைப்பேன்! யாரை நம்பினாலும் நம்பாவிட்டாலும், இவரை நம்புவேன். ஒரு கால் பையனுக்கோ, பொண்ணுக்கோ ஆட்சேபனை என்றால், இஷ்டமில்லாக் கலியாணம் நடக்காது! பயந்து மாயாதே!" என்றுரைத்துவிட்டுப் போனார் அவர், வெளியில் கிளம்பிக் கொண்டே, வாசற்புறமிருக்கும் ஐந்து வயதுச் சிறுமியைப் பார்த்து, " நாம் சினிமாவுக்குப் போகப் போகிறோம், இன்றைக்கு! அக்கா கிட்டப்போய்ச் சொல்றயா? பத்மா வீட்டுக்கு போயிருக்கிறாளா அக்கா?" என்று கேட்டார்.

வாசற்புறத்துச் சின்னஞ் சிறு அறையில் கிடந்த பழம் பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டிருந்த ராஜேசுவரி வெளியே வருவதா வேண்டாமா என்று யோசித்தாள்.

"அக்கா அதோ" என்று தங்கை கூறிய பின்பும் ராஜேசுவரி நகரவில்லை. தங்கைமேல் கோபம் வந்தது. பெற்றோர் பேசியது தன் காதில் விழவில்லை என்று கூற விரும்புகிறவளாக ராஜேசுவரி அசையாமல் உள்ளேயே இருந்தாள். நடராஜன், அந்த அறையருகு வந்து எட்டிப் பார்த்ததும், "அப்பா, பழைய புத்தகங்களில் எத்தனை நல்ல கதைகள் இருக்கு! எடுத்துப் பிரித்து வைக்கலாமா?" என்று கேட்டாள்.

"கிறிஸ்துமஸ் லீவு வருகிறதே, எல்லோருமாக சேர்ந்து எடுத்து வைப்போம்! நீ பரிட்சைக்கு எல்லாம் படித்துத் தயாரா?"

"உம், இன்னும் படிக்கணும்."

"பின்னே பாடம் படிக்கத்தானே இது சமயம்! படி!"

"நாட்டுப்பெண் என்று அந்தப் பெரியவர் சொல்லிவிட்டாராமே!" என்று பெருமிதங்கொண்ட பேதை உள்ளம், காதலி போலவும், மனைவி போலவும், அன்னை போலவும் அபிநயங்கள்

பயின்றது! "எனக்கு இஷ்டமில்லாவிட்டால் நடக்காது! அப்பா சொல்லியாச்சு!" என்று மகிழ்ந்து குளிர்ந்தாள். பெரியவர்பால் மரியாதையும், தந்தைபால் நன்றியும், அன்னையின் பால் அனுதாபமும், முகங்காணாத ரகுபதியின்பால் சிந்தனையும் அந்த இளம் இதயத்திலே பெருகியோடின.

அன்று முதல் ராஜேசுவரி, தன் கவனத்தின் ஒரு பகுதியைப் பெற்றோரின் தினசரி சம்பாஷணைகளின் மேல் திருப்பிவிட்டாள். பெற்றோர் இந்த விஷயமாக நேரிடையாக அவளுடன் பேசாவிட்டாலும், ஜாடை மாடையாகப் பேசியதை அவள் அறிந்தாள். அறிந்தும், புரிந்து கொள்ளாதவள் போன்று தோற்றமளிக்க முயன்றாள்.

பாட்டு வாத்தியாரிடம் விசாலம் "'பக்கல நிலபடி' கற்றுத் தரச் சொல்லணும் என்று எனக்கு ரொம்ப நாளாக எண்ணம். அந்தப் பெரியவர் கூட அன்று கேட்டார், நினைவிருக்கிறதா? சொல்லித் தருகிறீர்களா?" என்று கேட்டாள் வாத்தியார் கற்றுத் தந்தார் ராஜேசுவரிக்கு. "சங்கீதத்திலே சிரத்தையுள்ளவர்கள் கிடைக்க வேண்டுமே என்று கவலைப்பட்டேனம்மா! தட்சிண தேசத்திலே சங்கீதப் பற்று இல்லாதவர்கள் கிடையாது என்று தெரிந்தும் கவலைப்பட்டேனம்மா!" என்று வாத்தியார் அடிக்கடி சொன்னார், சந்தோஷப்பட்டார்.

ராஜேசுவரிக்கு மலைப்பு தட்டியது. நிச்சயமாகிவிட்டது போலப் பேசுகிறார்களே என்று கவன்றாள். ஜாதகம் கூட பொருந்திவிட்டது என்று உறவினர் எழுதிவிட்டதனாலா இந்த நிலைமை? அவளுக்கு வேண்டிய தகவல் சிறிதுமில்லையே! பையன் எப்படியிருப்பானோ? அவளைப் பற்றி யாரும் அப்பழுக்கு சொன்னதில்லை. அவளுக்கு பிடித்த மணாளன் ரகுபதி என்பது நிச்சயமாக வேண்டாமா?

புதல்வி பவானியின் அழைப்புக் கண்டு, மனைவியோடு கல்கத்தா சென்றிருந்தார், துரைசாமி அய்யர். மனைவியை அங்கே தங்கச் சொல்லிவிட்டு ஊர் திரும்பும் வழியில்தான் அவர் "நான் வேலை பார்த்த ஊர்!" என்று இறங்கினார். நண்பரும், உறவினருமான சாம்பசிவ அய்யரின் வீட்டில் தங்கினார். ஆனால் நடராஜனுடன் சம்பந்தம் செய்து கொள்ளும் பேச்சில் ஈடுபட்டுவிட்டார். இந்த விஷயம் அவர் மனைவி சாரதாம்பாளுக்கு எப்படித் தெரியும்? ஊர் போய்ச் சேர்ந்ததும் துரைசாமி அய்யர், "நம் பெண் பவானி புக்ககம் போய்விட்டாள்; நம்மகத்திற்கு மாற்றுப் பெண் வர வேண்டியதுதானே! தயாராக இருக்கிறாள்!" என்று எழுதியதைக் கண்டு சாரதாம்பாள். "பெண்ணைப் பிரிந்திருக்கும் வேதனையோ" என்று தான் நினைத்தாள். இரண்டு மாதங்கள் கழித்து கணவருக்குக் கடிதம் எழுதியபோது, " ரகுபதியை துணை அனுப்புங்கள்; பவானியுடன் வந்து சேருகிறேன்; பெண் இன்னும் ஏழெட்டு மாதங்கள் நம்முடன் இருக்கப் போகிறாளாதலால், நீங்கள் நாட்டுப் பெண்ணுக்காகக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை! பவானியின் விஷயம் தெளிவாகிவிட்டது. நாம் தாத்தா பாட்டியாகப் போகிறோம்; சீமந்தம், பூச்சூட்டல் எல்லாம் நடக்க வேண்டியிருப்பதால் புறப்பட்டுவிடுகிறோம். மாப்பிள்ளை துணை வர முடியாதாம்; அதனால் ரகுபதியை அனுப்பினால் அடுத்த வாரம் வந்து சேருகிறோம்" என்று சாரதாம்பாள் எழுதினாள்.

இந்தக் கடிதத்திற்குக் கணவர் அளித்த மறுமொழிதான் சாரதாம்பாளைத் துணுக்குறச் செய்துவிட்டது. "ரகுபதியை அனுப்புகிறேன். நீங்கள் மூவருமாக வரும் வழியில், அங்கே இறங்கிவிட்டு வரவேண்டும். இறங்குவது கஷ்டம் என்றால், ரகுபதியை போகும் வழியிலே இறங்கிவிட்டுப் போகச் சொல்லுகிறேன். நீயும், பவானியுங் கூட அவர்களைப் பார்த்தால் நல்லது தானே என்று திரும்பும் வழியில் இறங்கும்படி சொல்லுகிறேன். மூன்று பேராகப் போகிறதா என்று யோசனை வேண்டாம். பவானியின் வயிற்றில் குழந்தை இருக்கிறதல்லவா?" கணவர் தன்னை மடக்கிவிட்டதாக மனம் மருகினாள் சாரதாம்பாள். "இவருக்குப் பெண் பிடித்துவிட்டதாம்; பிள்ளைக்கு என்ன உத்தேசம் என்ற நினைப்பே இல்லை? அவன் ஆண் பிள்ளை; அவர் சொன்னபடி அவன் கேட்கணும் என்ற சாஸ்திரமா?" என்று பெண்ணிடம் குறையுடன் பேசிவிட்டு சாரதாம்பாள் கணவருக்குக் கடிதம் எழுத உட்கார்ந்தாள்.

"ஏம்மா, இத்தனை கோபமாக சொல்லிவிட்டு, கடைசியில் நீ, 'பிராணநாதருக்கு' என்று

கடிதத்தில் எழுதுகிறாயே என்று சிரிப்பாக வருகிறது:" என்று பவானி சிரித்துவிட்டு, கடிதத்தைப் படித்தாள்.

படித்துவிட்டு, கணவனிடம் ஓடினாள். "கடைசியில் பாருங்கோளேன், அம்மா என்ன எழுதியிருக்கிறாள் என்று! போகிறபோது மூன்று பேருமாகவே இறங்கிப் போகிறதாம். அண்ணாவை இறங்காமல் வரச்சொல்லிவிட்டாள்! இப்படித்தான் இந்த அம்மா, அப்பாவுடன் ஒத்துப்போய் விடுவாள்!" என்று கணவனிடம் சொல்லிவிட்டு பெருமைப்பட்டுக் கொண்டாள். அவள் கணவன் மென்னகை பூத்தான். "பலே மாமியார்!" என்றான்.

"ஒத்துப் போகவுமில்லை ஒன்றுமில்லை; போகிறபோது இறங்குகிறதும் உத்தேசமில்லை எனக்கு. வெறும் உடம்பா உனக்கு?" என்று சாரதாம்பாள் தன் உண்மை உத்தேசத்தை வெளியிட்டபோது, பவானியின் கணவன் "சரியான மாமியார்" என்றான்!

ரகுபதி வந்தான். "அம்மா, பெண் பார்க்கிற உத்தேசத்துடன் போகிறதனால், இறங்க ஒப்ப மாட்டேன் என்று சொல்லிவிட்டேன். சிநேக பாவத்தில் ஒரு நாள் தங்குகிறோம் என்று சொல்லிவிட்டேன்! அப்படியே எழுதிவிட்டார் அப்பா! புதன் கிழமை ராத்திரி அங்கே இறங்குகிறோம் என்று அவர்களுக்குத் தெரிவித்துவிட்டார். உன்னிடம் சொல்லி வைக்கிறேன்! கலியாணப் பேச்சு என்று ஒன்றும் பேசவேண்டிய அவசியமில்லை!" என்று ரகுபதி சொன்னபோது, சத்யம் "பாவம், மாமியார்" என்று சொல்லிக் கொண்டான்.

## 4

"உங்களுக்கும், அவர்களுக்கும் பரிச்சயம் ஏற்படட்டும் என்று இந்த ஏற்பாடு செய்கிறேன்" என்று துரைசாமி கடிதம் எழுதினார்.

"பெண் பார்க்க வருகிறார்கள் என்று எழுதவில்லை.... எத்தனை இங்கிதமாக எழுதியுள்ளார் பார்!" என்று வியந்தார் நடராஜன்.

"பெண் பார்க்கவென்று எழுதவில்லையே, ஒரு வேளை இந்த இடம் இஷ்டப்படவில்லையோ என்னமோ? என்று ஐயமுற்றாள் விசாலம்.

"எப்படிச் சொன்னாலும் நீ கவலைப்படுவது ஒழியாதே! இஷ்டப்படாவிட்டால் இறங்க மாட்டார்கள். போட்டோவைப் பார்த்துவிட்டுத்தான் வருகிறார்கள்!" என்று ஊக்கமூட்டி உறுதி கூறினார் நடராஜன். அதற்கும் கவலைப்பட்டாள் விசாலம்.

"அனாவசியமான ஆடம்பர உபசாரம் செய்ய வேண்டாம்! அவர்கள் சிநேக பாவத்திலே வருகிறார்கள்! நீ உபசாரம் செய்தால்தான் வெளிவேஷம் என்று அவர்களுக்குத் தோன்றிவிடும், ஜாக்கிரதை! அரைமணி நாடகமாய் நடக்கிற 'பெண் பார்க்கும்' நிகழ்ச்சியில்லை இது, நினைவிருக்கட்டும். நீ நிதானமாய் நடந்து கொண்டால் தான், மிடுக்கும், பிகுவும் பாராட்டாத அவர்களுக்குப் பொருத்தமாக இருக்கும்! நீ உன் 'கவலைப் பல்லவி'யை மூட்டை கட்டி விடு!" என்று நடராஜன் மனைவியை கண்டித்தார். விசாலத்தின் முகம் சுருங்கிவிட்டது, "இதுதான் எனக்குப் பொறுக்கவில்லை, நான் வெளி வேஷமா போடுகிறேன், கவலைப்படுகிறேன்? போலி உபசாரம் செய்பவளா நான்? நிஜமாகவே எனக்கு மலைப்பாயிருக்கிறதே? எனக்கு யாரும் வழிகாட்ட இல்லையே! தமிழ் நாட்டு பழக்க வழக்கம் தெரியாதே?" என்று விசாலம் மனம் நொந்து கொண்டுதான் இருந்தாள்!

"இந்த அம்மா எல்லாரிடமும் பறையறைவாள் போலிருக்கு! அப்பாதான் வழி காட்டுகிறாரே! ஏன் அடுத்தகத்து மாமியிடம் முறையிடுகிறாள்? ஊர் முழுதும் பரவி விடும் வரன் பார்க்கிற விஷயம்!" என ராஜேசுவரிக்கும் கவலைதான்! "உன் நாத்தனாரும், மாமியாரும், அவரும் வரப்போகிறார்களாமே?" என்று ஏற்கெனவே ஒரு கேள்வி அவளைத் தாக்கிவிட்டது! ரகுபதி, ரகுபதி! பெயர், புதுமையாகவும், இனிமையாகவும் ஒலிக்கிறது; ஆனால் தோற்றம் எத்தகையதோ?

நடராஜன் ராஜத்தை கவனித்து வந்தார். அவள் வீட்டில் படங்களைத் துடைத்து வேறுவிதமாக மாற்றி மாட்டியதைக் கண்டு புன்னகைப் பூத்தார். "அம்மா, பால் ஆடை எடுத்து வைக்கச் சொன்னேனே! ஒரே பருவாய் இருக்கு முகம். பள்ளிக்கூடம் போகவே வெட்கமாயிருக்கு எனக்கு!"

என்று ராஜேசுவரி வேதனைப்பட்டதைக் கண்டு அனுதாபப்பட்டார். "எலுமிச்சைப் பழச் சாறும் கொஞ்சம் அந்த பாலாடையோடு சேர்!" என்று கூறினார் பரிவுடன். மகளின் நாணக் குழப்பத்தைக் கவனித்துக் கொண்டே, குழந்தை போன்ற அவளுடைய தன்மையின் புது மாறுதலை வியந்து கொண்டே இருந்தார். நடுநடுவே மனைவியிடமும், "வாயாலும், நாவினாலும் வரும் வார்த்தைகளை விட, கண்களாலும், செய்கைகளாலும் புலனாகும் விஷயத்தை ஆராய்வது நன்று," என்று கூறினார். "அவர்கள் உன்னைப் பார்க்க வரவில்லையே? நீ ஏன் மலைக்கிறாய்? வரப் போகிறவர் மூன்றே பேர். இப்பேர்ப்பட்ட நல்லவர்கள் பொருட்டு நீ கவலைப்பட்டால் அப்புறம் விமோசனம் இல்லை! விசாலம், தைரியமாயிரு!" என புத்திமதியும் கூறினார்.

"தாயைப் போல பெண் என்று சொல்வார்கள், தெரியாதா? என்னையும் அவர்கள் கவனித்துப் பார்ப்பார்கள்!" என்று விசாலங் கூட கவலை மறந்து முகம் மலர்ந்து மொழிந்தாள்.

"ராஜத்தைப் பற்றி எனக்கு ஒரே ஒரு கவலைதான். காரியம் தெரியுமா என்று கேட்பார்களானால், என்ன சொல்லுவேன்? ராஜத்திற்கு அடுப்பங்கரை என்றால் துளி கூட அக்கரை ஆசை கிடையாது! அவள் பாட்டுக்கு ஊஞ்சலாடிக் கொண்டிருந்தால் அவர்கள் என்ன நினைப்பார்கள்?" என்று பயப்பட்டாள்.

"அவர்கள் கேட்கவும் மாட்டார்கள். நீ பயப்படவும் வேண்டாம்! அப்பப்பா, வீண் விசாரப்படுவதில் உன்னைப் போல் கெட்டிக்காரி யாருமே கிடையாது, விசாலம்! ஆகா, என்ன கற்பனைத் திறன்!" இது நடராஜனின் கடைசி அஸ்திரம்!

"ஐயோ, அசட்டு அம்மாவே! அப்பாவே! உங்களிடம் அகப்பட்டுக் கொண்டு அவர்களுடைய நல்லதனம் நல்ல அவதிப்படுகிறது! அவர்கள் நல்லவர்களாய் இருப்பது கூட கஷ்டம் தானா?" என்று ராஜேசுவரி, பெற்றோர் சண்டையைக் கண்டு சிரித்தாள். ஆனால் அவளையும் கவலையாட்கொண்டு விட்டது!

'இங்கேயே இறங்குவார்களா? அடக் கஷ்டமே? சுயேச்சையாக வீட்டில் நடமாட முடியுமா? ஆடிப் பாட முடியுமா? இரண்டு நாளும் அடங்கி ஒடுங்கி முடங்கிக் கிடக்க வேண்டியது தானா? பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்பார்களோ? அது முடியாது! வருஷாந்திர நாடகத்திலே முக்கியமான வேஷம் போட்டு ராஜம் நடிக்கப் போகிறாள்! அதுவும் கூட முக்கியமில்லை! சாரணியர் வகுப்பு நடக்கப் போகிறது, முக்கியமாக சில 'பாண்டேஜ்'கள் கற்றுத் தருவார்கள்! போட்டி நடக்கும்! பள்ளிக்கூடம் போக வேண்டியது தான்!'

பிறகு, "வீட்டிலிருக்கும் கொஞ்ச நேரம் சற்று முடங்கியிருந்தால் போகிறது! ஆம், பின்னே அடக்கமில்லாமல் கும்மாள மடிப்பதும் அழகல்லவே? ரகுபதி . . . அவர், அந்தப் பையன், வீட்டிலிருக்கும் பொழுது .... கடவுளே!.... காப்பாற்று!" என்றது அவள் மனம்.

விருந்தினர் வந்து சேரும் நாள் புலர்ந்தது. துயில் எழும்பொழுதே அந்த நினைவு தான் உண்டாயிற்று.

பாட்டு வாத்தியார் வந்ததும் நடராஜன் அவரை __ணுகினார். "நாளைக்கும், நாளன்றைக்கும் வருவீர்களா, சார்?" என வினவினார் தமாஷாக.

"ஏன், வருவேனே?"

"அன்று வந்தாரே பெரியவர், அவருடைய பையன், அவர் பெண், மனைவி எல்லோரும் வருகிறார்கள் சார், இன்றிரவு! அந்தப் பெரியவர் மெச்சினதற்கு மேலே இவர்கள் மெச்சவேண்டும், ராஜாபாய் சங்கீதத் திறமையை! ஏன் சார், அடாணா என்பது ஒரு ராகமா? . . . இல்லை ஏதாவது பாட்டா?"

சிரித்துவிட்டு, "ஏன், ராகம்தான்! என பதில் அளித்தார் சர்மா.

"அதைப்பாடுவாளா ராஜம்? பேச்சு வாக்கிலே அவர் சொன்னார்... பிள்ளைக்கு அடாணா ராகம் என்றால் உயிர் என்று! பாடச் சொல்லுங்கள் ராஜத்தை. தெரியுமா அந்த ராகம்?" என்று சிறிது சிரித்தபடியே வினவினார் நடராஜன்; ஆனால் சிரிப்பினூடே சிரத்தையும் மிளிர்ந்தது.

"ராகம் பாடும் நல்ல தேர்ச்சியில்லை. சினிமாப் பாட்டு தான் பாடத் தோன்றுகிறது அவளுக்கு!

வெறுமனே இருக்கும் பொழுது சற்று ஏதாவது ஒரு ராகத்தை மெதுவாக முணமுணத்துப் பார்ப்பது கூட இல்லை! இருக்கட்டும், அடாணா ராகத்தில் கீர்த்தனைகள் பேஷாகப் பாடுவாள்! பாடச் செய்கிறேன்!" என்றார். ராஜம், சிறிது தொலைவில் நின்றபடியே இதைக் கவனித்தாள்.

'இதேது? அவர்கள் எதிரில் பாடச் சொல்வார்களா? இருக்காது, அவர்கள்தான் 'பெண் பார்க்க வரவில்லையாமே? பையன் உட்காரமாட்டான் என் எதிரில். மற்றவர்கள் உட்கார்ந்தால் பரவாயில்லை. ரேடியோப் பாட்டு கேட்பது போல அந்தப் பையன் கேட்பான் என குரலிசையை! அதுபோதும், என் தைரியம் குலையாது!'

இவ்வாறு சிந்தித்தவாறு நின்ற ராஜத்தை நோக்கி சர்மா மகிழ்ச்சியுடன் வந்தார். "நீ இன்னும் சங்கீதத்திலே முன்னேற வேண்டும் என்ற என் பிரார்த்தனை கடவுள் செவியில் எட்டிவிட்டது என்று எண்ணுகிறேனம்மா ராஜம்! இந்த ஊர் குட்டி மேடைகள் மீது நீ அடைந்துள்ள பெருமை, தமிழ்நாட்டுப் புகழ் மேடைகள் மீதும் உனக்குக் கிட்டட்டும்!" என்று மனதுள் ஆசீர்வதித்தபடியே, விரித்திருந்த பாயில் அமர்ந்தார்.

"உட்காரம்மா! 'பக்கல நிலபடி' சரணம் நிரடலில்லாமல் இரண்டு நிரவல் சங்கதிகளோட பாட நன்றாக வருமல்லவா? அதை இன்று பாடு!" என்று கூறினார்.

"பிள்ளையின் அப்பாவிற்குப் பிடித்த பாட்டு எதற்கு? அடாணாவில் எந்தக் கீர்த்தனை நன்றாக வரும் என்று பார்க்க வேண்டாமா?" என்று சிறிது கவலைப்பட்டு விட்டு, "கடைசியில் எனக்குப் பையனைப் பிடிக்கவில்லை என்று ஏற்படுமானால் இந்தக் கவலைகள் பித்துக்குள்ளித்தனமாகுமோ!" என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டாள் ராஜேசுவரி. அந்தக் கட்டத்தில், ஆசிரியர், "அடாணாவில்' வாசாமகோசருண்டனி" பாடுகிறாயாம்மா?" என்று அவளை வினவினார்.

மாலை முதலே உள்ளக் கிளர்ச்சியுடன் விளங்கிய ராஜேசுவரி, தந்தை இரவு ரயிலடிக்குச் சென்றதுமே இனந்தெரியாத பீதியும் கலவரமும் கொண்டாள். குழந்தைகள் தூங்கிவிட்டனர். ராஜேசுவரிக்கும் தூக்கம் கண்களைச் சுழற்றியது எனினும் அவள் விழித்திருந்தாள்; சுறுசுறுப்பாகப் பாடப் புத்தகங்களைத் தட்டி அடுக்கி வைத்தாள். மேஜை மேல் சிறு பூங்கொத்து வைத்தாள். பிறகு ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள். படித்தால் தூக்கம் அதிகமாகுமென்று தெரியும். ஆனால் அவளுக்கு வேறு ஒன்றும் செய்ய ஓடவில்லை. தாயும் வீட்டில் சாமான்களைத் தட்டித் துடைத்துத் துப்புறவாக்கிக் கொண்டு இருந்தாள். ஆனால் அம்மாவுடன் என்ன பேசுவது? எப்படி 'சாதாரண'மாகப்' பேசுவது? ஒன்றுமறியாதவள் போல இருக்கவும் கஷ்டமாகத் தோன்றவே, ராஜம் புத்தகத்தையே புகலடைந்தாள். படித்துக் கொண்டிருக்கும் பொழுதே கண்கள் குவிந்தன. புதல்வியை விசாலம் உற்றுப் பார்த்தாள். "பாவம், குழந்தை!" என்ற கழிவிரக்கம் சுரந்தது. அணைத்து மகளை உச்சி முகர வேணும் என்ற ஒரு ஆசை அந்தத் தாயுள்ளத்தில் ஒரு கணம் தோன்றி மறைந்தது. விருந்தினர் வருவதைப் பற்றி மகளிடம் விசாலம் சொன்னது எப்படி? "நம்மகத்திற்குப் புது சிநேகிதர்கள் வருகிறார்கள் என்று தெரியுமோல்லியோ?" என்று கேட்கும் பாவனையில் தான்! "எல்லாம் தெரிஞ்சுதானிருக்குப்போ!" என்று கோபித்துக் கொண்டு விட்டு அங்கே நிற்கக் கூசி நழுவிவிட்ட மகளை எண்ணி விசாலம் மெல்ல நகைத்துக் கொண்டாள். அதரங்களிலே புன்னகை படர்ந்த பொழுதே, கண்களிலே கனிவும் தவழ்ந்தது. புதல்வியின் உள்ளத்திலே தூங்கும் ஆவற் கனவுகளையும், அவளுடைய கை புத்தகம் தாங்கிய கோலத்தையும், அந்தக் குமுதக் கண்களின் துஞ்சிய நிலையையும் பரிவுடன் பார்த்தாள். மெள்ள தோள்களைத் தீண்டினாள்.

"ராஜம், போய் மெத்தையிலே படுத்துக்கோம்மா! இங்கேயே தூங்கிவிட்டாயே!" என்றாள்.

ராஜேசுவரி கண் விழித்து மலர நோக்கினாள். சுகமான நித்திரை கலைபட்டது ரொம்பவும் கஷ்டமாயிருந்தது. நித்திரையின் போதையில் எல்லாம் மறந்தாள். வரப்போகும் விருந்தினர் நினைவு இல்லை. விருந்தினருள் ஒருவனான பையனைப் பற்றியும் நினைவு இல்லை. சாயும் உடலைத் தாங்கிக் கொண்டு விடுவிடென்று அடுத்த அறைக்குள் போனாள். பல படுக்கைகளில், ஒன்றில், தங்கையின் மேல் ஒரு கையைப் போட்டு அணைத்துக் கொண்டு மீண்டும்

துயிலிலாழ்ந்து போனாள்.

அவளுடைய மெத்தையும் விரித்துத்தான் கிடந்தது. ஆனால் அவள் அதிலே படுக்கவில்லை! ஏன்? "கொஞ்ச நேரத்தில் எழணும்!" என்ற உள்ளுணர்வு கூறிவிட்டதனால்தான்! சொந்தப் படுக்கையிலே படுத்துவிட்டால் விடிந்தால்தான் எழவேண்டும் என்று அர்த்தம்! ஆம், ராஜேசுவரியைப் பொறுத்தமட்டில்!

விருந்தினருடன் வீடு மீண்ட நடராஜன், உள்ளே நுழையும் பொழுதே நாற்புறமும் கண்ணோட்டினார். விசாலம், மடிசார்ப்புடவை உடுத்து, இழுத்துப் போர்த்திய புடவைத்தலைப்பு அடக்கத்தை விளக்க, மெல்லிய குரலில் "வாருங்கள் மாமி!" என்று வரவேற்றாள். ராஜம் எங்கே! எங்கானும் ஒளிந்துள்ளாளோ?

விருந்தினருக்கு உபசாரமும் சௌகரியமும் செய்து கொண்டே விசாலம், தன் மகளுக்கு மணாளனாக ரகுபதி ஏற்றவன் தான் என்று ரகுபதியின் தோற்றத்தைக் கண்டு முடிவு கட்டினாள். தந்தையைப் போல பிள்ளை வெளுப்பு அல்ல; ஆனால் சிவந்த நிறம்தான். தாயாரைப் போல் உயரமும் இல்லை... ஆனால் குள்ளமும் அல்ல. முக்கண்ணாடி பளபளக்கும் விசாலமான முகம், நல்ல தோற்றம்; "பிள்ளை 'சிறுகு முறுகு' என்று நன்றாகத்தான் இருக்கிறான்!" என்று அபிப்பிராயப்பட்டாள். ராஜத்தின் மனதிற்கு இசைந்தவன் ஆவான் என்று நம்பினாள்.

நடராஜன் அப்படியெல்லாம் சிந்தனைகள் செய்யவில்லை. பெண்ணும் பையனும் நேர் எதிரே பார்த்துக் கொள்ளும் முதற் சந்திப்புத்தான் கூர்ந்து பார்க்க வேண்டிய கட்டம் என்று காத்திருந்தார் அவர்!

கால், கை கழுவ ரகுபதி புழக்கடைக்குச் சென்றபோது, நடராஜன் வீட்டின் மற்ற அறைகளுள் சென்றார். ரகுபதி குழாயடியினின்று வந்ததுமே, "ரகுபதி, இந்த அறையிலே உங்கள் சூட்கேஸ், கூடை, எல்லாம் வைச்சுடறேனே!" என்று சொல்லிக் கொண்டே கூடையையும் படுக்கையையும் கையில் எடுத்துவிட்டார்.

"ஓ எஸ், வைச்சால் போச்சு!" என்று சொல்லிக் கொண்டே ரகுபதி பெட்டியை எடுத்துக் கொண்டு அவர் பின்னால் சென்றான்.

விடிவிளக்குக் கொடுத்த மங்கலான பொன்னொளியில், இருவரும் புகுந்தனர். அறை முழுவதும் படுக்கைகள் விரிக்கப்பட்டுக் குழந்தைகள் சில உறங்குவதையும், சேலை உடுத்திய ஓர் உருவம் துயில்வதையும் ரகுபதி கண்டு, தயங்கிக் கொண்டே நடராஜனைப் பின் தொடர்ந்து, அவர் சென்ற மூலைக்கு வந்து சேர்ந்தான். சாமான்களை வைக்க அந்த வெளிச்சம் போதுமானது. வைத்துவிட்டு வந்துவிடலாம் என்று எண்ணினான் ரகுபதி. படுத்திருக்கும் கோல உருவம் 'அந்தப் பெண்' தான் என்று அவன் ஊகித்துவிட்டதால் அவனுக்குக் கூச்சமும் படபடப்பும் உண்டாகிவிட்டன.

சாமான்களை வைத்து விட்டு நடராஜன் நின்றார். "அவள் தான் ராஜேசுவரி!" என்றார், மகளைச் சுட்டிக் காட்டி.

தயக்கமுடன் அந்தப் புறம் பார்த்தான் ரகுபதி. தங்கையை ஆதரவுடன், அணைத்துப் படுத்திருக்கும் அந்த உருவம், களைமிகுந்த முகமுள்ள பெண்ணின் உருவம் என்று கண்ட கண்கள், நிலை பெயர சிறிது தயங்கின. எத்தனை நேரம் ஊன்றிப் பார்ப்பது? அழகல்லவே! ஆனால் படுத்திருந்த மற்ற குழந்தைகளின் மீதும் பார்வையைச் செலுத்தினான்.

நடராஜன் மின்சார வெளிச்சத்தைப் போட்டுவிட்டார் கணம். எழவேண்டும் என்னும் எண்ணத்துடனே படுக்கையில் சாய்ந்திருந்த ராஜத்திற்கு, மின்சார ஒளியும் பேச்சரவமும் விழிப்பளித்துவிட்டன.

திடுக்கிட்டு தலையைத் தூக்கினாள். தந்தையின் அருகிலிருக்கும் இளைஞனைப் பார்த்துவிட்டாள். வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். கூந்தலும் அலங்கிவிட்டதோ என்று அஞ்சி இடது கையால் தலையைத் தடவிக் கொண்டே ஓட்டமாய் ஓடிவிட்டாள்!

ரகுபதியின் முகத்திலே மகிழ்ச்சியும் வியப்பும் நிலவுவதை நடராஜன் பார்த்து விட்டார்.

"சாப்பிடப் போகலாமா?" என்று நடராஜன் கேட்ட கேள்விக்கு ஊங் கொட்டினான் ரகுபதி.

விருந்தினருக்கும், கணவருக்கும் உணவு படைக்கும் பணியை விசாலம் ஒருவளாகவே செய்தாள். ராஜம் இது போன்ற வேலைகளில் பங்கு எடுத்துக் கொள்ளும் வழக்கமில்லை. சாரதாம்பாளையும் வற்புறுத்தி, அந்தப் பந்தியிலேயே அமர்த்திவிட்டு, விசாலம் ஓடி ஓடி அன்னம் பரிமாறினாள்.

அவர்கள் சாப்பிட்டு எழுந்தபின் தான் ராஜம் சமையற்கட்டிற்குள் வந்தாள். விசாலமான சமையல் அறையிலே ஒரு புறம் அமர்ந்திருந்த சாரதாம்பாளும், பவானியும், தன்னையே உற்று நோக்குவதைக் கண்டதும், அவர்களை நெருங்கியிருக்கக் கூசினாள். சடாரென திரும்பி, எச்சில் இலைகளை எடுத்து, இடத்தைச் சுத்தி செய்யத் தொடங்கிவிட்டாள்.

"நீங்கள் சாப்பிடுங்கள், நாழியாகிறது!" என்றாள் சாரதாம்பாள் விசாலத்தினிடம்.

"இதோ ஆச்சு, உட்கார வேண்டியது தான்! இன்னும் கொஞ்சம் கொஞ்சம் வெற்றிலை தரட்டுமா? என்னமோ சுமாரான வெற்றிலை தான்; பட்டணம் வெற்றிலை மாதிரி இங்கு கிடைப்பதில்லை, நன்றாயிருக்கா?" என்று கேட்டு உபசரித்துவிட்டு, அவர்கள் "நன்றாயிருக்கிறதே, துனி வெற்றிலைதான் போலிருக்கே! நல்ல ராசியாச்சே!" என்று சமாதானம் கூறியதைக் கேட்டு திருப்தியடைந்த பிறகு, இலையைப் போட்டுக் கொண்டு சாப்பிட ஆயத்தமானாள்.

குழம்பும் ரசமும் சிறு சிறு கிண்ணங்களில் எடுத்துக் கொண்டு உட்கார விசாலம் அடுப்படியில் குனிந்த பொழுது ராஜேசுவரிக்கு ஒரு அருமையான யோசனை தோன்றியது.

அவளும் பச்சடி, அப்பளம் எடுத்து வந்து அன்னையின் இலையில் பரிமாறினாள். புது மனிதர்களுடன் பேசவும் முடியாமல், நடுக்கூடத்திற்கும் போக முடியாமல் சிரமப்பட்டு அவள், அம்மாவை வளைய வருவதிலே துணி_வு கண்டாள்.

தூக்கம் கலைந்து எழுந்த புதல்வி காட்டும் சுறுசுறுப்பு விசாலத்திற்கு மகிழ்ச்சியும் வியப்பும் அளித்தது. அவளுக்கும் ஒரு யோசனை தோன்றியது! இலையருகில் குழம்பு, ரசம், மோர், ஊறுகாய் சகிதம் உட்காருவானேன்? ராஜத்தைப் பரிமாறச் சொன்னால்? காரியம் செய்வதிலே வெறுப்பு உள்ளவள் அல்லள் ராஜம் என்று அவர்கள் சந்தோஷிப்பார்கள்; இன்று ராஜம் இருக்கும் ரீதியைப் பார்த்தால் காரியத்தில் வெறுப்புள்ளவளாகத் தோன்றவில்லை. 'மாட்டேன்' என மாட்டாள்.

"பரிமாறுகிறாயா, நான் உட்காருகிறேன்!" என்று கேட்டாள் விசாலம், உட்கார்ந்து கொண்டே.

"ஓ!" என்று விடை உற்சாகமாகப் பாய்ந்து வந்தது. தாயின் கேள்வி ஒரு பெரும் ஆறுதலளித்தது! ஆம், சாப்பாடு முழுவதும் பரிமாறலாமே! முன்னமேயே தோன்றவில்லையே! இடைஇடையே சாரதாம்பாளுடன் பேசிக் கொண்டே விசாலம் சாப்பிட்டாள். இடைஇடையே பவானியைப் பார்த்துக் கொண்டே ராஜமும் பரிமாறினாள். பெரியவர்களின் பேச்சிலே சேராது, இயந்திரம்போல கைகள் கம்பளி நூல் சட்டை பின்ன, பவானி ராஜத்தைக் கூர்ந்து பார்ப்பாள் அடிக்கடி; ஆனால் ராஜம் அதற்காக அதிகம் கூசிவிடாமல், தோழமையுடன் அந்தக் கண்களைச் சந்தித்தாள்.

விசாலம் உச்சி குளிர்ந்துவிட்டாள். புது தென்புடன், சாரதாம்பாளையும் பவானியையும் அணுகி, "படுக்க நாழியாச்சே! நாளைக்கு இரவும் தூக்கம் கெடப் போகிறதே! இதே வண்டியில் தான் நாளைக்குப் போயாகணுமா, மாமி? நாளன்னிக்குப் போகலாமே, ஒரு நாள் ஓய்வுக்குப் பிறகு?" என்று மனம் நிறைந்த அக்கறையுடன் கேட்டாள்.

"மாற்றுவதற்கில்லை. போட்ட திட்டம் மாறினால் எங்கள் அகத்துக்காரருக்குப் பிடிக்காது; இங்கே வழியில் ஏகப்பட்ட சாமான்களுடன் இறங்கி ஏறுவது கஷ்டம், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தான் நான் புறப்படும் பொழுது நினைத்தேன்; கடுதாசி எழுதியாச்சு, மாற்றக்கூடாது என்று எழுதிவிட்டார். என்ன செய்வது, எத்தனை வயசானாலும், புருஷனுக்குப் பயந்து தானாக வேண்டும்!" என்று சாரதாம்பாள் பிகுவுடன் ஆரம்பித்த பேச்சை தளர்வுடன் முடித்தபொழுது விசாலம் மனம் நெகிழ்ந்துவிட்டாள்.

"திடீரென்று வேலையை உதறினார் அல்லவா, இவர் கணவர்? இந்த அம்மாளுக்கு எப்படியிருந்திருக்கும் மனசு? பாவம், கஷ்டம் தான்," என்று எண்ணினாள். சாரதாம்பாளின் மீது மதிப்பு உயர்ந்தது.

## 5

யாவரும் படுக்கச் சென்றபொழுது மணி பன்னிரண்டு; ஆனால் படுத்த பின்னும் ஒவ்வொருவரும் தத்தம் யோசனைகளிலே ஆழ்ந்தனர். படுத்தவுடன் நித்திரை செய்யவில்லை. சிந்தனையும் படுத்தபின் தான் உறக்கம் வந்தது.

நாடகத்தனமான தமது செய்கைகளையும், ராஜத்தின் மருட்சியையும், ரகுபதியின் முகவிலாசத்தினிடை புலனான மகிழ்ச்சியையும் நடராஜன் ரசித்தார்.

விசாலத்தின் யோசனைகள் எத்தகையன என்று ஆராய வேண்டிய அவசியமில்லை. ‘இந்த மட்டும் இறங்கினார்களே! ஏதோ, சீக்கிரமே நல்ல முடிவு தெரிய வேண்டும்!" என்று கவலைப்பட்டாள். கவலையினூடே, "அந்தப் பெரியவரின் பிடிவாதத்தினால்தான் இது நிச்சயமாகும் போலிருக்கு. இந்த அம்மாளிற்கு அத்தனை ஆர்வம் காணோம்! ஆனால் மனிதயத்தினத்தில் இல்லை இதெல்லாம்!" என்று பலவாறு நினைத்தாள். மனதில் மட்டும் தென்பு கூடியே இருந்தது. அப்பாடா, இன்னும் ஒரு நாள் நல்லபடி இப்படியே போகட்டும்; பெண்ணுக்கு விட்டு வேலையில் ஆர்வமும் திறனும் ஊட்ட முடியவில்லையே என்று இத்தனை நாள் கவன்றது வீண் தானா? ராஜம் இந்த சமயத்தில் தன் வளர்ப்புக் குற்றத்தை அம்பலப்படுத்தாமல் சுறுசுறுப்பு காட்டுகிறாள். பிழைத்துக் கிடந்தால், கல்யாணமாகி புக்ககம் அனுப்புவதற்குள், நிஜமாகவே அவளை நன்றாகத் தயாரித்துவிடலாம். ராஜம் மனசு வைத்தால் போதும். கடவுள் அருள்.’

வந்திருக்கும் பையனிடம் குறை காண முடியாதவளாக, ராஜம், தன்னைப் பற்றிக் கவலைப்பட்டாள். பையனும், மற்றவர்களும், 'பெண் பார்க்க' என்று வராததனால், ‘தன் எதிரில் உட்காரமாட்டார்கள்; பாட்டு வாத்தியார் வந்து, அவரிடம் சிட்சை பயிலும் சாக்கிலே பாடிக் காட்டும்பொழுது, ரேடியோவில் பாடுவதாக எண்ணிக் கொண்டு பாடவேண்டும். தயக்கமின்றி, உயர்வாகப் பாட முடியும்,’ என்று நம்பிக்கையுடன் துயின்றாள். இனிமேல் தன் சங்கீதத் திறமை உயரத்தான் போகிறது. சங்கீத ரசிகர்களின் வீட்டில் புகுந்த பிறகு, அதுவும் தமிழ்நாட்டில் வசிக்கத் தொடங்கிய பிறகு, ஞானமும் புகழும் பெருகத்தான் போகின்றன... மேடைகளிலே ஏறிப் பாடாவிட்டாலும், ரேடியோவில் பாடலாம்; அதற்கு ஒத்திகை போல நாளைக்கு!" இவ்விதம் கற்பனை இன்பம் நிறைந்த மனதுடன் அயர்ந்துறங்கிவிட்டாள்.

ரகுபதி ராஜேசுவரியைப் பார்த்த பிறகு, தந்தையின் வார்த்தைகள் முற்றும் உண்மை என்று உணர்ந்தான். குழந்தைத்தனம் கலந்த பார்வை; ஆனால் அதிலே காதலுக்கிடமிருந்தது என்று உணர்ந்தான். இருபத்துமூன்று வயதுக் காளையான அவன் ராஜேசுவரியின் களையான முகம் தூக்கத்திலே காட்டிய கவர்ச்சியை மறக்கவில்லை. இதுவரை எந்த பெண்ணையும் பெண் பார்க்கவென்று அவன் வந்து பார்த்ததில்லை. இப்பொழுதும் அப்படி வரவில்லை. ஆனால், தந்தையின் நோக்கம் திருமணம் தான்.

கவர்ச்சியும், அழகுமுள்ள பெண்தான் . . . ஆனால் சங்கீதம் கரேபுரே வென்றிருக்குமோ? தெலுங்குத் தேசத்துக்குச் சங்கீதம் என்ன தெரியும்! ஆனால், இந்தப் பெண்ணின் பாட்டும் பிடில் வாசிப்பும் ரம்மியமாயிருந்தனவென்று அப்பா சொன்னாரே . . .

முன்னாள் ரகுபதி ஒரு தாரம் கொண்டு வாழ்ந்தான். அதுபோல, ஒரே பெண்ணைக் கண்டு, அவளையே மணந்து, அவளுடனேயே நீடுழி வாழ்வது பெருமைதான். பல பெண்களைப் போய்ப் பார்க்கும் வழக்கம் தன் விஷயத்தில் ஏற்படவே வேண்டாம். இந்தப் பெண்ணுடனே வாழ்வைப் பிணைத்துக் கொள்வது விரும்பத் தக்கதுதான். ராமாயண ரகுபதிபோல தன்னை உத்தமோத்தமனாக ஆக்குகிறவள் ராஜேசுவரியாகவே இருக்கட்டும்; ராஜேசுவரி தனக்கு ஏற்றவளாகவே விளங்கட்டும்! ஏன் ராஜேஸ்வரிதான் தகுந்தவள்!

ரகுபதியின் மனம் கடவுளை நினைத்தது. "அம்மாவிற்கும் சம்மதமாகட்டும்; நான் ஒரு தடையும் கூறவே மாட்டேன்" என்று உறுதி பூண்டது. ஊரிலிருந்து புறப்பட்டு வரும்பொழுது,

சாரதாம்பாள் கணவரிடம், "இவள்தான் நாட்டுப் பெண் என நானல்லவா சொல்ல வேண்டும்! நீங்கள் சொன்னால் போதாது!" என்று சிறிது சிரிப்பைப் பூசி மனத்தாங்களுடன் சொன்னதை அவன் மறக்கவில்லையே!

சாரதாம்பாளுக்குத் தான் நெடுநேரம் தூக்கங் கொள்ளவில்லை. அவளுக்கு ராஜேசுவரியினிடமும், விசாலத்தினிடமும் குறை தெரியவில்லை. ஆனால், தன் கணவர் மீதுதான் மனத்தாங்கல் ஏற்பட்டது.

'நாட்டுப் பெண்' என்று அவர் ஒருவராகவே இந்தப் பெண்ணை முடிவு கட்டிவிட்டுப் பிறகு ரொம்பத் தாராளமாக, "போய்ப் பார்!" என்று சொன்னாரே! அவளுடைய அபிப்பிராயத்தை ஒப்புக்குக் கேட்பவராகத்தானே நடந்து கொண்டார். 'இந்தப் பெண் வேண்டாம்!' என்று சொன்னால் என்ன? எப்பொழுதுமே அவர் இஷ்டம்தானா வெற்றி பெற வேண்டும்? என் வார்த்தைக்கு என்ன செல்வாக்கு என்று பார்க்கிறேன்!' என்று உள்ளம் நைந்தாள் சாரதாம்பாள்.

மனதில் நல்ல எண்ணங்களை தோற்றுவிக்கும் அமைதிதான், சாந்தி. உயர்ந்த சாந்தி. ஆனால், பிடிவாதங் காரணமாகவோ சஞ்சலங் காரணமாகவோ தோன்றும் மன உறுதிக்கு சாந்தி ஏது? மனம் உள்ளூர வேதனை தான் கொள்ளும். சாரதாம்பாளுக்கு நித்திரை எளிதிலே வரவில்லை. கணவர் தேர்ந்தெடுத்துவிட்டப் பெண்ணிடம் குறைகளைக் காணோம். எப்படி வீம்புக்காகக் குறைகள் கூறுவது? கூறலாம். ஆனால் அது அழகா? வீம்பு அவசியந்தானா? வாழ்க்கைத் துணைவர், எப்பொழுதோ கடமை மறந்தார் என்பதற்காக, இப்பொழுது கோபிப்பதில் பயன் என்ன? எத்தனையோ விஷயங்களில் அவருக்கு அடங்கிப் போயாச்சு! எஞ்சி நிற்கும் இந்த ஒரு விஷயத்தில், கணவர் விருப்பத்தை மீறிய பாபத்திற்குள்ளாவானேன்?

இந்தியப் பெண்ணினத்திற்குரிய இந்த அடக்கப் பண்பிற்கு, இடமளித்தப் பிறகுதான், சாரதாம்பாளின் புரட்சி மனம் அமைதியுற்றது.

'அவன் என்ன சொல்கிறானோ பார்ப்போம்! அவனுக்கு இஷ்டம் என்றால் நான் வீணே குறுக்கிடுவானேன்?' என்று தீர்மானித்த பிறகு தான் சாரதாம்பாள் கண்ணயர்ந்தாள்.

பவானிக்கு கல்கத்தா நினைவுதான் அதிகம் இருந்தது. ராஜேசுவரியை ரகுபதி மணக்கச் சம்மதிப்பான் என்று தோன்றியது; சம்மதிக்காவிட்டால் வற்புறுத்திச் சொல்லவேண்டும் என்ற எண்ணம் இல்லை. கணவனைப் பிரிந்து வந்தக் கவலையுடன் அவள் துஞ்சினாள்.

மறுநாள் காலை முதன் முதலில் கண்விழித்தவள் விசாலம். பாட்டுச் சாதகம் செய்யப் பெண்ணை எழுப்பவில்லை. ராஜேசுவரி தூங்கி எழும்பொழுது நன்றாகப் பொழுது புலர்ந்துவிட்டது. பரபரப்புடன் எழுந்தாள். பக்கத்துப் படுக்கைகளில் யாருமில்லையே! எல்லோரும் எழுந்தப்புறமா எழுவது! வெட்கக்கேடு! படுக்கையைச் சுருட்டிவிட்டு, அங்கேயே இருந்த கண்ணாடியில் பார்த்துத் தலையைக் கோதிக் கொண்டு நடுக் கூடத்தைத் தாண்டும் பொழுது, வாசற்புறத்து அறையில் படுத்திருந்த உருவத்தைக் கண்டாள். ரகுபதி ஒருவனாவது, எழாமல் தன் மானத்தைக் காக்கிறானே என்று திருப்திப்பட்டாள்.

பவானி குழாயடியில் பல் விளக்குவதைக் கண்டு ஆறுதலடைந்தாள். அன்று கோக்கோ ருசிக் குறைவாயிருந்ததைப் பொருட்படுத்தாமல், முகஞ் சுணங்காமல், குடித்து விட்டாள். நேரங் கழித்து எழுந்ததற்கு ஈடு செய்பவள் போன்று சுறுசுறுப்புடன் சீக்கிரம் குளித்துவிட்டாள். தங்கையை இழுத்து வைத்துக் குளிப்பாட்டினாள். தலை வாரினாள். தம்பிப் பாப்பாவிற்கு பால் புகட்டினாள். ரகுபதி புழக்கடைக்கு வந்தபோது ராஜேசுவரி வாசலுக்குப் போனாள். அவன் வாசற்புறமிருந்தபோது அவள் பின் கட்டிலேயே தங்கினாள்.

சுமார் ஒன்பது மணிக்கு பவானி, ராஜேசுவரியிடம் பேச்சுக் கொடுத்தாள், பாடப் புத்தகங்களைப் பார்த்தாள். பாட்டுப் புத்தகத்தைப் பார்த்தாள். "மொட்டை மாடிக்குப் போய் பார்க்கலாம்!" என்று ராஜம் அழைத்தாள்.

"மொட்டை மாடிகூட இருக்கிறதா? தேவலையே, பிரும்மாண்டமான வீடாக இருக்கிறது! வாடகை கொள்ளையாயிருக்குமே!" என்று சாரதாம்பாள் ஆச்சரியமுடன் சொன்னாள்.

ராஜேசுவரி பதிலளிக்கவில்லை. ஆனால் பதிலளிக்க விரும்பினாள். சாரதாம்பாளின்

பேச்சைக் கவனியாதது போல இருப்பது அழகல்ல என்று விசாலம், கைக்காரியத்தை விட்டுவிட்டு, வந்து "பதினாறு வருஷமாய் இதே வீடு, அதனால் வாடகை மலுவுதான்; மெள்ள மெள்ள உயர்ந்தும் இருபது தான்" என்று சொன்னாள்.

"இரண்டு குழாய், எலக்டிரிக் லைட்டு . . . பேஷான வீடு," என்று சாரதாம்பாள் கூறியபோது விசாலம் வெகுவாக சந்தோஷமடைந்தாள்.

"உங்கள் வீடு எப்படி?" என்று கேட்கலாமோ கூடாதோ" என்று தயங்கியபோது, சாரதாம்பாள், "எங்கள் கிராமத்து வீடு அரண்மனை மாதிரி தான்; அதை விற்றுவிட்டு, இப்பொழுது சிறு வீடு வாங்கியிருக்கிறார். எனக்கு இஷ்டமில்லை, ஆனால் அவர் பிடித்தால் பிடிதான் . . . சொன்னேனே; பெரிய விட்டில் நடமாடிவிட்டு இப்பொழுது கஷ்டமாக இருக்கிறது! என்றாள் சாரதாம்பாள்.

அந்த அம்மாளைத் தேற்றும் வகையில் விசாலம், "ஆமாம், இந்த வீட்டிற்கு வந்த புதிதில் எதற்கு இத்தனை பெரிது என்று தோன்றியது. இப்பொழுது இன்னும் இரண்டு அறைகளிருந்தாலும் போதும், ஆனால் இத்தனை பெரிது இருந்தாலும் வாடகை வீடுதானே! நம்முடையது என்று சிறு வீடு இருந்தாலும் அது உயர்த்திதான்! இத்தனை வருடமாய் வாடகை கொடுத்த பணத்திற்கு இரண்டு வீடு கூட வாங்கியிருக்கலாம் முன்னமேயே என்று எங்கள் அடுத்தகத்து மாமிதான் சொன்னார்; அப்படியா என்று எனக்கும் இப்பொழுது தோன்றுகிறது!"

சாரதாம்பாள் வர மறுத்ததால் பவானி மட்டும் ராஜேசுவரியுடன் மொட்டை மச்சுக்குப் போனாள். அங்கே கிடந்த ஒரு காலிச் சோப்புப் பெட்டியைப் பார்த்துவிட்டு பவானி, "நீ இந்தச் சோப்புதான் தேய்ப்பாயா? நான் சந்தன சோப்புதான் உபயோகிப்பது வழக்கம்; அண்ணாவுக்குப் பலவித சோப்புகளை பிடிக்கும்," என்றாள்.

"எங்கப்பா கூட அப்பப்போ மாற்றுவார் சோப்பு; என்னுடைய முகபருவுக்கு சில சோப்புக்கள் ஒத்துக் கொள்கிறதேயில்லை என்று தோன்றுகிறது; ஐயோ, எத்தனை அசிங்கமாகிவிட்டது என் முகம்; போன வருடம் போல இல்லவே இல்லை!"

பவானி மெல்ல சிரித்தாள். "எங்கப்பா முன்பு சோப்பே வாங்க மாட்டாராம். அண்ணா பன்னிரண்டு வயசுவரை சோப்புத் தேய்த்துக் கொண்டதே இல்லை. அப்புறம் ஒரு நாள் அழுதான். அப்பாவும் அப்புறம்தான், நம்ம தேசத்திலே சோப்புத் தொழில் விருத்தியாயிருக்கு என்று, சோப்பு வாங்க அனுமதித்தாராம். அதனாலே அண்ணாவுக்குச் சோப்பு பைத்தியம் அதிகம்! எனக்கு, அவனாலே, ஏழு வயதிலிருந்து சோப்பு பழக்கம்!"

ராஜேசுவரியும் பவானியுடன் கூட சிரித்தாள் மெல்ல; "பிறந்தது முதலே எனக்கு வழக்கம்" என்று சொல்ல ஆசைப்பட்டாலும், நா எழவில்லை.

"பருவுக்குச் சோப்பு கெடுதலாமே! ஆனால் சோப்பு இல்லாமல் முகம் அலம்பினால் இன்னும் மோசமாயிருக்கும் போல் தோன்றுகிறது!" என்று தன்னிடமுள்ள குறையை அடக்கமுடன் சொன்னாள்.

பிறகு பேச்சுப் போக்_கில் பவானி தன் கணவர் டில்லியிலிருந்து வாங்கி வந்த புடவையைப் பற்றிச் சொன்னாள். ராஜேசுவரி பவானி முகத்தைக் கூர்ந்து நோக்கினாள். கணவனைப் பற்றி பேசும் ஒரு இளம் பெண் சிறிதும் கூச்சம் புலப்படுத்தாமல் இருக்க முடியுமா என்று வியப்புண்டாயிற்று. ஒருக்கால் ரகுபதி கணவனானால்? . . . "ஐயையோ, என்னால் இப்படிப் பேச முடியாது" என்று எண்ணினாள். பவானி மூக்குக் கண்ணாடியைத் துடைத்து அணிவதையும், பேசிக் கொண்டிருக்கும் பொழுது அவள் கைவிரல்கள் கம்பளிச் சட்டை பின்னுவதையும் சுவாரஸ்யமுடன் கவனித்தாள்.

"ஊரிலிருந்து புறப்பட்ட பொழுது ஆரம்பித்தேன்; போய்ச் சேருவதற்குள் முடிக்க வேண்டும் என்று எண்ணம்" என்று பவானி சொன்னாள். அப்பொழுது தான் ராஜேசுவரி, "அதனால் தானா நேற்று ராத்திரி, இன்று காலை, கையோடேயே வைத்துக் கொண்டு போடுகிறீர்கள்? என்று கேட்டாள்.

"பொழுது வீணாகாமல் எத்தனை சௌகரியம்! எங்கே மீட்டிங்கு, பாட்டுக் கச்சேரி என்று போனாலும் கையோடு கொண்டு போவேன். இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் என்று

உட்காரும்பொழுது - ..ஒரு கல்லில் இரண்டு காய்!"

ராஜேசுவரியின் கண்கள் காட்டும் பாராட்டு பவானிக்குப் புலனாகவே, பவானி மனங் குளிர்ந்தாள்.

"தையல் வேலை கற்றுக்கொள்ளச் சொல்கிறாள் அம்மா . . . எனக்குத் தான் . . . ."

ராஜேசுவரி, இவ்வாறு கூறுகையிலே, நடராஜனின் குரல் கேட்டது. பாட்டுவாத்தியார் சர்மா வந்துவிட்டார். பதட்டமுடன் இறங்கி வந்த ராஜேசுவரி கூடத்து நடு மத்தியிலே பாயை விரித்துக் கொண்டிருந்த தந்தையை கண்டதும் நடுங்கினாள். எல்லோரும் எதிரிலேயே உட்காருவார்களா, பாட்டுக் கேட்க?

"ஏம்பா, தினமும் போடுகிற மாதிரி அந்த ஓரமாகவே இருக்கட்டுமே" என்று குரல் கம்மக் கேட்டுவிட்டாள்.

"வேண்டாம், இங்கே சௌகரியமாயிருக்கும்".

ஆத்திரம் பொங்கிற்று ராஜேசுவரிக்கு. 'நல்லதற்குத் தானா இப்படிச் செய்கிறார்? அவர்களும் உட்கார்ந்தால், பாட்டை உளறிக் கொட்டினால் நன்றாயிருக்குமோ! இதுதானா பெண் பார்க்க வராத லட்சணம்? கணீர் என்ற குரல் வாசற் கோடியிலே உட்கார்ந்தால் கூட, மூன்றாம் வீட்டு வரைக்கும் கூட கேட்கிறது என்று சொல்வார்களே? எதிரில் உட்கார்ந்தால்தானா? பாட்டுக் குட்டிச் சுவர்தான்!'

அழுகை வந்துவிடும் போல் இருந்தது.

"நான் இன்னிக்குப் பாட்டுச் சொல்லிக்கல்லை!" என்றாள் ராஜம்.

நடராஜன் புரிந்து கொண்டார். செய்ய வேண்டியது என்னவென்பதை அறிந்தார்.

"சரி, உன் இஷ்டம்," என்று கூறி, தினமும் போடுமிடத்திலேயே பாயைப் போட்டார். வாசலில் ரகுபதியுடன் உட்கார்ந்திருந்த சர்மா வாத்தியாரைக் கண்டு, "நாங்கள் இங்கிருந்தே கேட்கிறோம்! அவள் வெட்கப்படுகிறாள்" என்று தெரிவித்தார். வெட்கப்படுகிறாள் என்று கூறும்பொழுது ரகுபதியைப் பார்த்து அவர் முறுவலித்ததும், ரகுபதியின் முகமும் சிவந்தது. பெண் பார்க்கப் போன அனுபவமில்லாதவன் அல்லவா?

பவானி ராஜேசுவரியினருகு உட்காராமல் தொலைவிலிருப்பதைக் கண்ட நடராஜன், "நீ உட்கார்ந்தால் ராஜேசுவரி ஆட்சேபிக்கமாட்டாள், உட்காரம்மா!" என்றார் சிரித்து. பவானி, "பரவாயில்லை" என்றாள்.

நடராஜன் ராஜேசுவரியைப் பார்த்தார். பார்த்துவிட்டு, "நீயே கூப்பிடு" என்றார். "வரட்டுமே" என்று மெல்லச் சொல்லி, பலமாக தலையசைத்து ராஜேசுவரி அழைத்தாள், பவானியை.

சாரதாம்பாள் கூடத்திற்குள் வராமல், சமையலறையையொட்டியபடியே அமர்ந்திருக்க விரும்பினாள். விசாலம் அடுப்படியில் வேலையில் ஆழ்ந்ததால், "வாருங்கள் கூடத்திற்கு" என்று கூட்டி வரவும் இயலவில்லை. சாப்பாடு தயாராக வேண்டாமா? குழந்தைகள் ஏற்கெனவே சமையலறையை முற்றுகையிட்டுவிட்டனவே!

சர்மா வாத்தியார் பிடிலை வாசிக்க, ராஜேசுவரி நான்கைந்து பாட்டுக்களை பாடிவிட்டாள். புத்தகத்தைப் புரட்டி பவானி பாடச் சொன்ன பாட்டுக்களைப் பாடினாள். வாசலில் அமர்ந்திருந்த நடராஜன் ரகுபதியை உள்ளே அழைத்து வர விரும்பினார். இனிமேல் போனால் ராஜேசுவரி எழுந்துவிடமாட்டாள் அல்லவா?

"வேண்டாமே! சங்கோசப்படும்போது? . . . " என்றான் ரகுபதி.

ஆனால் நடராஜன் அழைத்து வந்துவிட்டார்; பாடிக்கொண்டிருந்த ராஜேசுவரி துணுக்குற்றாள். 'எழுந்துவிட்டால் நல்லதா? பயந்து போய் பாட்டைக் கெடுத்துக் கொள்வதா? கூடாது, பாட்டும் கெடக்கூடாது; எழவும் கூடாது. பெண் பார்க்கவென்று அவர்கள் வந்ததாக தனக்குத் தெரியும் என்று காட்டிக்கொள்ளவும் கூடாது. அவர்கள் யாரோ என்று கவனியாமல் பாடி முடிக்க வேண்டும். பதட்டப்பட்டால் பாட்டுக்கொட்டது!

ரகுபதியை தனக்கு நேர் எதிர் உட்கார வைக்கும் தந்தையை அலட்சியமாகப் பார்த்தாள். சமாளித்துக் கொண்டுவிட்டாள். மறுகணம் அவள் பீதி மறைந்தது.

கையோடு கொண்டு வந்திருந்த தினசரி தாளை பிரித்து முகத்துக்கெதிரில் வைத்துக் கொண்டு ரகுபதி படிக்கத் தொடங்கிவிட்டான்.

நடராஜன் தடுக்குற்றார்!

அடுத்த கீர்த்தனையைப் பாடும் பொழுது, நாக்கு உலர்ந்துவிடவே, எச்சிலை கடக்கென்று விழுங்கிக் கொண்ட ராஜேசுவரி, அந்தச் சங்கதியில் அழகில்லாதபடி விரிசல் விழுந்துவிட்டதை உணர்ந்தாள். அவள் பார்வை ரகுபதியை நோக்கிச் சென்றது.

"பயப்படாமல் பாடம்மா!" என்று சர்மா சொன்னார். நன்றி பெருகியது அவள் உள்ளத்திலே. "சங்கீதத்துக்கும் சங்கோஜத்திற்கும் ஆயிரங்காத தூரம் பகை!" என்று வாத்தியார் படித்துப் படித்துச் சொல்லியும் புத்தியில்லையே என்று ராஜேசுவரி தன்னையே கடிந்துகொண்டாள். பாட்டு முடிந்ததும், படபடப்பு அதிகமாயிற்று. "சோடையாகாவிட்டாலும், சோபையாக அமையவில்லையே இந்தப் பாட்டு!" என்று ராஜேசுவரி நினைக்கையிலே வாத்தியார் ரகுபதியைப் பார்த்து, "அடாணாவில் பாடினாளே முதலில், அந்த பாட்டு போனவாரம் தான் கற்று முடித்தாள்; உங்களுக்கு அடாணா பிடிக்குமாமே!" என்று சொல்லி புன்னகைத்தார்.

"ஏன், ஆரபி, ரீதிகௌளை எல்லாங்கூட அருமையான ராகங்கள்!" என்று பதிலளித்துவிட்டு ரகுபதி மீண்டும் பத்திரிகையில் பார்வை செலுத்தினான்.

ரகுபதிக்கு சங்கீதத்தைப் பற்றி இத்தனை தெரிகிறதா என்று ராஜேசுவரி வியந்தாள். "பிடில் வாசித்துவிடு, வாய்ப்பாட்டு போதும்" என்று வாத்தியார் கூறவே, ராஜேசுவரி, வாத்தியாரோடு பிடிலை வாசிக்கத் தொடங்கினாள். அந்தச் சமயத்தில் பவானி எழுந்து சென்றாள். பெட்டி படுக்கைகள் வைத்திருந்த அறைக்குள் போனாள். ராஜேசுவரி ஒரு பாட்டு வாசித்து முடிக்கும் சமயம் திரும்பி வந்தாள்.

"நன்றாக வாசிக்கிறாளே பிடில்! எப்படியிருக்குமோ என்று நினைத்து தான் எழுந்து போனேன். சில பேர் வாசிக்கும் பொழுது எதிரில் சிரிக்காமல் உட்காருவது ரொம்ப சிரமம்! நிஜமாகவேச் சொல்கிறேன், இத்தனை சுத்தமாயிருக்கும் வாசிப்பு என்று நான் நினைக்கவில்லை!" என்றாள் பவானி ஆவேசமுடன்.

சர்மாவும், நடராஜனும், ராஜேசுவரியும் அடைந்த பெருமிதத்திற்கும் அளவுண்டோ?

ஆனால் வாத்தியார் சர்மா, "இதைவிட நன்றாக வாசித்தாள் உங்கள் தகப்பனார் கேட்ட தினம்!" என்று கூறினார். அப்பொழுது ரகுபதியின் கண்களும் ராஜேசுவரியின் விழிகளும் சந்தித்துவிட்டன!

அடுத்த கீர்த்தனையை வெகு இனிமையாக வாசித்து முடித்துவிட்டாள் ராஜேசுவரி. விசாலம் பரபரக்க வந்தாள். சாரதாம்பாளைப் பார்த்து, "உங்கள் பெண் இரண்டு பாட்டு பாடிக் கேட்க வேண்டும் மாமி!" என்றுரைத்துவிட்டு, "பாடுகிறாயா?" என்று பவானியைக் கேட்டாள்.

பவானியும் அவள் தாயாரும் பார்த்துக் கொண்டார்கள். பவானித் தொண்டையை லேசாகக் கனைத்துக் கொண்டதும் ராஜேசுவரி வியப்புற்றாள்.

"என்ன பாட்டுப் பாடட்டும்?" என்று அம்மாவைக் கேட்காமல் பவானி பாடத் தொடங்கிவிட்டாளே, இப்படி இருக்க வேண்டும் என்று தான் ராஜேசுவரிக்கு வாத்தியார் புத்தி சொல்லியிருக்கிறார். தாயாருடன் பஞ்சக் குங்குமத்திற்குப் போகுமிடங்களிலே ஒரு சின்னப் பாட்டுப் பாட ராஜேசுவரிக்கு எத்தனை கூச்சம்? இதோ, பவானி, குரல் கட்டையாயிருந்தாலும் துணிவுடன் பாடுவதால் எடுப்பாக இருக்கிறது! இதே பாட்டு, பல சங்கதிகளுடன் இன்னும் நன்றாகவே தனக்குக் கற்றுத் தந்திருக்கிறாரே வாத்தியார்! ஆனால் பயந்து கொண்டே பாடினால் ரசிக்குமா?

கண்ணிமையால் வியப்புடன் பவானியைப் பார்த்தாள் அவள். பவானி அந்தக் கீர்த்தனம் பாடி முடித்ததும், சர்மா ராஜேசுவரியைப் பார்த்து, "பார்த்துத் தெரிந்து கொள்; டாண்ணு இப்படி பாடி

வேண்டாமோ நீ!" என்றார். அவருக்கும் பவானியின் பாட்டும் தைரியமும் பிடித்துவிட்டது. "இன்னொன்று பாடு அம்மா, நன்றாகப் பாடுகிறாய்_! ராஜம் சுருதியில்லாமல், நான் கூட கூட வாசிக்காமலேயே பாட பழக மாட்டேனென்கிறாள். உன்னைப் பார்த்துத் தெரிந்து கொள்ளட்டும், பாடு அம்மா!" என்றார் சர்மா, பவானியிடம்.

பவானி நன்றிப் புன்னகை பூத்தாள். இத்தனை நேரமும் பேசாதிருந்த ரகுபதி, தலையை பத்திரிகைக்குப் பின்னாடி வைத்துக் கொண்டே, "காணக் கண் கோடி" பாடு என்று சொன்னான்.

பவானி உடனே அந்தப் பாட்டைப் பாடத் தொடங்கிவிட்டாள்! ராஜேசுவரிக்கு பவானி லட்சியப் பெண்ணாகத் தோன்றினாள். "இன்ன பாட்டுப் பாடு" என்று யாராவது கேட்டுவிட்டால் உடனே அதைப் பாடி முடிக்கும் துணிவு ராஜேசுவரிக்கு ஏது? ஆங்காங்கு பள்ளி விழாக்களிலும், உதவிநிதி விழாக்களிலும் பங்கு கொண்டு பாடியிருப்பவள் தான். ஆனால், ஒத்திகை, பல நாள் உருப்போட்ட நெஞ்சுரம், வாத்தியாரின் பக்க பலம், தாயின் பரிவு மொழிகள், இவையின்றி ராஜேசுவரி மேடையேறியது கிடையாதே! மேடை மீதேறியதும், குரலினிமை, பலநாள் பழக்கம் முதலிய நல்ல அம்சங்களால் தென்புடன் பாடிவிடுவாள். ஆனால் மேடை மீதேறுகிறவரை அவள் நெஞ்சம் படும்பாடு யாருக்குத் தெரியும்?

இதோ, இந்த பவானி போல இருந்தால், எத்தனை வேதனைக் குறைவு? 'காணக் கண் கோடி' பாடிவிட்டு பவானி, "தொண்டை சரியில்லை" என்றாள். ராஜேசுவரி எப்பொழுதும் பாடு முன் சொல்வாளே!

"தமிழ்ப் பாட்டுக் கேட்கவே ஆனந்தமாயிருக்கிறது, ராஜேசுவரிக்கு. ஒரு தமிழ்க் கீர்த்தனைக்கூடத் தெரியாது!" என்று விசாலம் கூறியது சர்மா வாத்தியாருக்கு ரோசமாக இருந்தது போலும்! "நான் தட்சிண தேசத்தில் இருந்தபோது தமிழ்க் கீர்த்தனங்கள் பெருகவில்லை. இப்பொழுது தான் அதிகம் பெருகிவிட்டன" என்றார்.

ரகுபதி பத்திரிகையைச் சிறிது தாழ்த்திவிட்டு, வாத்தியாரைப் பார்த்து, "பெருகுகிறதா? தமிழிசைக்குத் தான் ஆதரவு இப்போது! தியாகராஜ கீர்த்தனைகளின் மதிப்பே போய்விட்டது!" என்றான்.

அவனுடைய குரலில்தான் எத்தனை ஆவேசம்! வாத்தியார் நிதானமுடன், "மதிப்புப் போகாது! தியாகராஜரின் கீர்த்தனங்களின் அமைப்பில் தானே தமிழ்க் கீர்த்தனங்கள் செய்யப்பட்டுள்ளன?" என்றார்.

"இல்லாவிட்டால், தமிழில் கீர்த்தனைகள் கட்ட ஒருவருக்கும் தெரிந்திருக்காதாக்கும்! தமிழிசைக்குத் தான் இனிமேல் தமிழ்நாட்டில் இடம்! ஆந்திரர்கள் தியாகராஜர் கீர்த்தனங்களை உரிமை கொண்டாடிக் கொண்டு அவற்றைக் குட்டிச் சுவராக்கிவிடுவார்கள் இனிமேல்!" என்று ரகுபதி சொன்னதும், சர்மா வாத்தியாரின் முக விலாசம் குன்றிவிட்டது. ராஜேசுவரி ரகுபதியைப் பார்த்தபோது, அவன் கண்களிலே புலனான வெற்றிப் பெருமிதத்தைக் கண்டு "ஒளி வீசும் கண்கள்" என்று போற்றினாள். பெண்ணிற்கு ஆணின் வீரமும் மிடுக்கும் தான் கவர்ச்சியளிக்கின்றன.

சூழ்நிலையில் இன்பம் கூட்ட விரும்பி நடராஜன், "இரண்டு பாஷைகளும் தெரிந்தவர் சர்மா காரு; அவர் தமிழிசையையும் போற்றுவார்; தமிழ்நாட்டிலேயே இருப்பவர்க்கு தமிழிசை மீது ஆர்வமிருப்பது நியாயந்தானே!" என்று கூறினார். பத்திரிகைகளிலே படித்து, தமிழிசை இயக்கம் பற்றி சர்ச்சைகள் நடப்பதை அவர் அறிந்திருந்தார்!

ராஜேசுவரியின் யோசனை மறுநாளைப் பற்றிச் சென்றது. மறுநாளும் அவர்களும் இருப்பார்கள்; வாத்தியாரும் வரப்போகிறார், அப்போது அச்சமே சிறிதுமின்றி பாட வேண்டும் என்று தீர்மானித்தாள்.

அன்று முழுதும் பல அனுபவங்கள் ஏற்பட்டன ராஜேசுவரிக்கு. சாரதாம்பாளும், பவானியும் ரகுபதியும் கடைவீதிக்குக் கிளம்பியபோது, ராஜேசுவரி, "நானும் போவேன்" என்று பிடிவாதம் பிடித்துப் போன இடத்தில், ரகுபதி உதிர்த்த கேலித் துணுக்குகளைக் கேட்டு கலகலவென சிரித்துவிடும்படியாயிற்று. கடைக்காரன் பில் போடும்போது, "அம்மா, உன் பெயரைச்

சிரார்த்தாம்பாள் என்று போட்டு விட்டான் பார்!" என்று குறும்புக்குச் சொன்னான். எத்தனை அடக்கியும் ராஜேசுவரிக்கு சிரிப்பு அடங்கவில்லை. தன்னுடைய நகைச்சுவையை இன்பமாக ரசிக்கும் பெண்ணை கூர்ந்து பாராமலிக்க ரகுபதியினாலும் இயலவில்லை.

வாசலில் கத்திய பிச்சைக்காரனை "போ, போ!" என்று ரகுபதி விரட்டிக் கொண்டிருக்கையிலே, ராஜேசுவரி கையில் அரிசியுடன் வந்தபோது ரகுபதி, "இத்தனை அரிசியா?" என்று பிரமிக்க, ராஜேசுவரி, "நாங்கள் போடமாட்டோம் என்ற நிச்சயமாக்கும்!" என்று கேட்பவள் போலப் பார்த்துவிட்டு பெருமிதத்துடன் நடை போட்டாள்.

ரகுபதி முகத்திற்குப் பவுடர் பூசிக் கொள்வதைப் பார்த்து ராஜேசுவரி, "புருஷர்கள் கூட, பவுடர் பூசிக் கொள்கிறார்களே! நான் பெண், போட மாட்டேனே. புதுப்புடவைக் கட்டிக் கொள்ளும் பொழுது தான் பவுடர் போட்டுக் கொள்வேன்!" என்று திகைத்து நின்றபொழுது ரகுபதி இவளைக் கண்டு அவசரவசரமாக மோவாயைத் துடைத்துக் கொண்டான்! பார்த்துக் கொள்ளாததுபோல, பார்த்துக் கொண்டே அவ்விருவரும், பெற்றோரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் எண்ணங் கொண்டுவிட்டனர். "இன்று பாடினது போல நாளைக்குப் பாட முடியாது, அந்தப் பையனுக்கெதிரே!" என்று அவளுடைய சங்கோசம் மிரட்டியது!

## 6

விருந்தினரை வழியனுப்பிவிட்டு வந்த நடராஜன், மனைவி மகிழ்ச்சியுடன் விளங்கியதைக் கண்டார். "கவலை நீங்கியதாக்கும்!" என்று கேட்டார். விசாலம் சளைக்கவில்லை.

"கவலையில்லாமலென்ன? என்ன இருந்தாலும் பெண்கள் மனசு ஒரு தினுசு தான்; புருஷர்கள் மனசு ஒரு தினுசுதான்; கடைசி வரையில் அந்த மாமி கொஞ்சம் மிடுக்காகத்தான் இருந்தார். ஆனால் ஒரு வேடிக்கை! 'கடை அப்பளம் சிகப்புப் புடவையாக இருக்கே! நான் அனுப்புகிறேன், பவானி இந்த வழியாகத்தானே வருவாள், போவாள்,' என்று சந்தோஷமாகச் சொன்னார். அப்பொழுது கூட, நமக்குள்ளே உறவு ஏற்படப் போகிறதே என்று சொல்லவில்லை. இந்தப் பெண் கொஞ்சம் சமர்த்தாய் இருந்தாளே என்று சந்தோஷப்பட்டேன். நீங்களும் அவளுக்குச் சப்பைப் கட்டுக் கட்டிக் கொண்டு அவர்களோடு கடைக்கு அனுப்பிவிட்டீர்கள்; அவர்கள் என்ன நினைத்துக் கொண்டார்களோ! கடவுள் விட்ட வழி, "என்று தன் கவலைகளைச் சொல்லிவிட்டாள்.

பெற்றோர் பேசிக்கொண்டே இருக்க வேண்டும் என்று ராஜேசுவரி விரும்பினாள். 'முன்போல எப்படிப் பழகுவது' என்ற கூச்சம் அவளுக்கு. பெற்றோரின் கருத்தும் விருந்தினரின் நோக்கமும் நன்றாக அறிந்து கொண்டவளாகவே நடந்து கொண்டு விட்டாளல்லவா அவள்? தொட்டிலாடாமல், சினிமாப் பாட்டுப் பாடாமல், குழந்தைகள் மேல்சீறி விழாமல், அடக்கவொடுக்கமான ஒரு புதுப் பெண்ணாக மாறியிருந்தாளே அவள்? விசாலங்கூட அதைச் சொல்லுகிறாளே . . .

இந்த நினைப்பு அவளைக் கவ்விக் கொண்டது.

பெற்றோர் பேசிக் கொண்டேயிருந்தாலும் சங்கடந்தான்; எதைப் பற்றிப் பேசுவார்கள்? விருந்தினரைப் பற்றியும், அவளைப் பற்றியும்தான். 'ஒட்டுக் கேட்கிறாள்' என்று பெற்றோர் நினைத்துவிட்டால்?

ராஜேசுவரியும் செவியுறவேண்டும், என்றுதான் நடராஜன், சமயம் பார்த்துப் பேசி வந்தார் என்பது ராஜேசுவரிக்குத் தெரியாது.

முதல் நாள் அவர்கள் எத்தனை மணி வண்டிக்கு வந்தார்களோ, அதே மணி வண்டிக்கேதான் சென்றார்கள். ஆனால் அவர்கள் தங்கிய ஒரே ஒரு நாள், ராஜத்திற்கு மிகவும் முக்கியமன நாள். நிலத்தில் வாழைச் செடியின் வேர்க்கிழங்கு ஊன்றிவிட்டதற்கு அடையாளம், செடியில் கிளம்பும் முதல் குருத்து இலை; ராஜேசுவரியின் இதயத்திலே ரகுபதி பதிந்துவிட்டதற்கு அடையாளம், அவளுடைய நாணப் புன்னகை. மறுநாள் காலை சர்மா வாத்தியார் விசாலத்திடம், "பேப்பருக்குப் பின்னால் தலையை ஆட்டி ரசித்தார் இவள் இசையை, நான் கவனித்தேன் பையனை!" என்று கூறிய பொழுது ராஜேசுவரி இன்பப் புன்னகை பூத்துக் தலை கவிழ்த்தாள். உள்ளத்திலே கற்பனையும் வளம் பெற்றது.

அன்னையின் மனம் நோகாதபடி ராஜேசுவரியை மணக்க இயலுமாயின், பெண் விஷயமாக ஆட்சேபனை ஏதுமில்லை, என்று முடிவு செய்திருந்தான் ரகுபதி. அதனால், ரகுபதி பட்டும் படாததுமாய்ப் பேசி அன்னையின் பாராட்டுக்குரியவனானான்.

"நாட்டுப் பெண்ணைப் பார்க்கப் போனாயாமே, சாரதம்?" என்று கேட்டுக் கொண்டே வந்த அம்மணியம்மாள் ரகுபதியைப் பார்த்து, "பெண் பிடிச்சிருக்கா உனக்கு?" என்று கேட்டபோது அவன், "எந்தப் பெண்?" என்று இடக்காகக் கேட்டான். மீண்டும் கேள்வி தாக்கியபோது, "நாங்கள் போன இடத்திலே ஒரு பெண் இருந்தாளா என்ன? தெரியாதே!" என்று மறுபடியும் இடக்காகவே பேசினான். தாயார் மென் முறுவல் பூத்தது கண்டு திருப்தியடைந்தான்.

"மாமா எங்களிடம் சொல்லியாச்சே, நாட்டுப் பெண்ணைப் பார்க்கப் போயிருப்பதாக!" என்று மீண்டும் அம்மணி வீறாப்பு பேசியபோது, "சரி, மாமாவையே கேளுங்கள் கேள்விகளை!" என்று சொல்லிவிட்டுச் செல்லும் மகனை சாரதாம்பாள் திருப்தியுடன் பார்த்தாள்.

"மாமாவுக்கென்ன, சொல்வார்! அவர் சொல்லிவிட்டால் ஆச்சா? என்னை ஒரு வார்த்தை கேட்டாரா, பிள்ளையை ஒரு வார்த்தை கேட்டாரா? அவர் சொல்லுக்கு எல்லோரும் அடங்கிப் போகணும் என்றால் முடியுமா? பவானி, பெண் குழந்தை, அப்பா பார்த்த பிள்ளைக்கு குற்றம் குறை சொல்லாமல் பண்ணிக் கொண்டு விட்டாள். ரகுபதி ஆண் பிள்ளை. அப்பா 'பண்ணிக்கொள்' என்று சொல்லுகிற பெண்ணைப் பண்ணிக் கொண்டு விட, அவன் பயந்தாங்கொள்ளியா? மாட்டேன், என்று தைரியமாகச் சொல்லிவிட்டுப் போகிறான்! அப்பொழுது மாமா என்ன செய்வார்? எப்போதுமே இவர் இஷ்டம் தான் நடக்கணும் என்று அவர் நினைத்தால் முடியுமா?"

அம்மணியம்மாளிடம் சாரதாம்பாள் சொன்னதை ரகுபதி, வார்த்தை விடாமல் கேட்டாள். அது மட்டுமா? ஒவ்வொரு வாக்கியத்திலும் குமுறிய உணர்ச்சியையும் அளந்தறிந்து கொண்டுவிட்டான்.

சாரதாம்பாளின் வாழ்வில் நிறைவேறாத பல அம்சங்கள் இருந்தன. வெளியாருக்குத் தெரியாத சொற்ப ஆசைகள் அவை. ஒரு பெண், ஒரு பிள்ளை, செல்வாக்குள்ள கவணவர், இவர்களைப் பிணைத்துக் கொண்டு வாழ்ந்த சாரதாம்பாள் குறைப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று பிறர் நினைத்தார்கள். ஆனால், சாரதாம்பாள், இளம் வயதில், வேலையிழந்து நின்ற கணவனின் மனைவியாக சிரமப்பட்ட பெண்; ஆதலால் அப்பொழுது ஏற்பட்ட பல மனத்தாங்கல்கள் உள்ளத்தில் நிலைத்துவிட்டன. கணவர் தன்னை மதிக்கவில்லை என்ற குறை நின்றுவிட்டது அந்தரங்கத்திலே. அதற்கேற்றாப் போல சில விஷயங்கள் நடந்துவிடும் பொழுது, உள்ளத்திலே எரிமலை குமுறும்.

வாழ்க்கைத் துணைவியின் ஸ்தானம் தனக்குக் கிடைக்கவில்லை என்று அவள் வருந்தினாள். வாழ்வின் மகோன்னதக் காலமான இளமையில் அவர் எப்படி இருந்தார்? யாரிடமும் ஒரு பேச்சு மூச்சு விடாமல் ராஜீனாமாக் கடிதத்தை எழுதிப் போட்டார்; வேலையை உதறி எறிந்தார். கணவனுக்கு உத்தியோகமில்லை என்பதை விட கௌரவக் குறைவு வேறு ஏதேனும் உண்டா, ஒரு மனைவிக்கு? அரசாங்க உத்தியோகம் வேண்டாம் எனறு ஒரு ஜமீன் காலேஜுக்குள் புகுந்தார். பிறகு அதையும் உதறிவிட்டார். என்ன அக்கிரமம்! போதும் அந்த நாள் கஷ்டம்! ஏதோ குழந்தைகள் இரண்டு பிறந்தன. "ஓடி விடுவேன்" என்று பயமுறுத்துவதை நிறுத்தினார். ஆனால் அவள் கூலி தீர்ந்ததா? வேதனை குறைந்தது, அவ்வளவுதான். அவரை வீட்டோடு பிணைக்கக் குழந்தைகள் பிறந்ததோ, குடும்பம் சீர்ப்பட்டதோ! இல்லாவிட்டால் அவர் தம் போக்கிலே முன்னேறி இருப்பார். காந்தியே கதி, வார்தாவே வாழ்வு என்று அவர் கிளம்பிவிடாமல் செய்தது மக்கள் பாசம். ஆனால் நிலையற்ற பொருள் வருமானமும், உத்தியோகமின்மையும் என்னப்பாடுபடுத்தின!

சாரதாம்பாளின் மக்களுக்கு எவ்வித மனவருத்தமும் தெரியக்கூடாது என்று கடவுள் திருவுளங் கொண்டார் போலும். ரகுபதிக்கும், பவானிக்கும் விவரம் தெரியத் தொடங்கு முன்பே, அவர்களுடைய தந்தையின் செல்வாக்கும் வளர்ந்துவிட்டது. ஊரிலே அவருக்கு மதிப்பும் உயர்வும் பெருகின. நகை நட்டுகளை வெகு சொற்பமாக அணிந்த சாரதாம்பாளை, இன்னார்

மனைவி என்று பெண்கள் கௌரவித்தனர். வேறு சீமாட்டிகளுக்கு அளிக்காத பெருமையை ஊர்ப் பெண்டிர் சாரதாம்பாளுக்கு மனமுவந்து அளித்தனர். நாட்டில் எழும்பியிருந்த சுதந்திர ஆர்வத்தின் பலன் அது. மகான் காந்தியின் திருவருள் அது.

ஊர் ஊராகப் போய் ஆங்காங்கு தங்கிவிட்டாலும், துரைசாமி அய்யர் குடும்பத்தில் கவனம் செலுத்தினார். செடியைவிட்டுப் பிரியாத பூ போல் சாரதாம்பாள் வாட்டமின்றி வாழ்ந்தாள். களிப்புடனிருக்கும்பொழுது நல்ல எண்ணங்களையே நினைப்பது தான் மனதின் இயற்கையாயிற்றே! அதனால் சாரதாம்பாள் குறைகளை மறந்தாள். "சில கணவன்மாரைப் போகல மனைவியைக் கைவிட்டுத் தீய வழிகளிலே இறங்கவில்லையே இவர்! நாட்டிற்கும், நாட்டவர்க்கும் நன்மை பயக்கும் செயல்களைச் செய்ய விரும்பினார். சுயநலம் துறந்தார். இது பாதகம் அல்லவே!" என்று மனம் தேறினாள்.

பவானி மணப் பருவமெய்தினாள். பெண்ணின் விவாக விஷயத்திலே துரைசாமி பிடித்த பிடி தான் வெற்றி பெற்றது. பெண்ணைக் குறை கூறினவர்களுக்கே அவர் பெண்ணைக் கொடுத்தார். "அவளிடம் அந்தக் குறைகள் இல்லை என்பதை அவர்கள் அறியவேண்டும்!" என்று தான் அப்படிச் செய்தார். "என்ன சீரும் சுகமும் கொடுத்துவிடப் போகிறோம் என்று சந்தேகப்பட்டார்களா? இதோ, அவர்கள் கேட்டதற்கு மேல் சீர் செய்கிறேன்; ஆனால் வரதட்சணை என்று தம்படி தரமாட்டேன்!" என்றார். எப்போதோ பேசிக் கொண்ட பேச்சு மாறிவிடக்கூடாதாம்! வேறு மாப்பிள்ளையே பார்க்காமல் பிடிவாதமாக இருந்து ஜயித்தார். தந்தை குறித்திருந்தவர் மேல்தான் பவானிக்கும் நாட்டம். ஆதலால் சாரதாம்பாள் வாயைத் திறக்கவில்லை. ஆனால் பவானியின் திருமணம் வரைதான் அந்த மாப்பிள்ளை வீட்டாரின் கொட்டம். கலியாணம் நடந்த சுபவேளையின் பலன் அவள் கணவனுக்கு வடக்கே வேலையாகி பவானி குடித்தனம் போய்விட்டாள். சம்மந்திகளின் மதிப்பில் கணவர் தன்னை இறக்கி விட்டார் என்று ஒரு குறை இருந்ததே தவிர, பிறகு பவானியின் அமைதியான நிலையை எண்ணி தர்மாம்பாள் சந்தோஷப்பட்டாள்.

ரகுபதியின் மணவிஷயத்தில் இப்பொழுது நடப்பது என்ன?

அன்று பிற்பகல் துரைசாமி அய்யர் ரகுபதியிடம் வந்து "யோசித்தாயா? என்ன எழுதட்டும்?" என்று கேட்டார்.

"எனக்கு இஷ்டமில்லை அப்பா! கலியாணத்திற்கு என்ன அவசரம்!" என்று சொல்லிவிட்டான் ரகுபதி.

"கலியாணத்திற்கு அவசரமில்லை என்று சொல்கிறாயா? அல்லது பெண்ணைப் பார்த்து இஷ்டப்படவில்லையா?

"இரண்டும்தான் என்று வைத்துக் கொள்ளுங்களேன்!"

ரகுபதியின் முகத்தில் சிரிப்புக் குமிழியிடுவதைப் பார்த்த சாரதாம்பாள், சந்தோஷமாகச் சிரித்துக் கொண்டாள்.

"'இப்பொழுது வேண்டாம் என்று ஏன் சொல்லுகிறாய்' என்று தெரியட்டுமே, அவர்கள் காத்திருப்பார்கள் ஒரு வருஷம். அதற்குள் பெண் நிச்சயமாகட்டுமே!"

"காத்திருக்காமல் வேறு இடம் பார்த்தாலும் பார்க்கட்டும்; எனக்கு படிப்பு முடிந்து நல்ல வேலையும் ஆன பிறகுதான் 'மேரேஜ்"

ரகுபதியின் இந்த விடை சாரதாம்பாள் உவக்கவில்லையோ? 'அப்பாவைப் போல் பிள்ளை பொறுப்பற்று இருக்க மாட்டான்; வரப்போகிறவள் பாக்கியம் செய்தவள்தான்; என்னைப்போல கஷ்டப்பட வேண்டாம்!' என்று தான் போலும் அந்த பெருமூச்சு!

"யோசி, யோசி, நன்றாக யோசனை செய்! நிச்சயமாகிவிட்டால், கலியாணம் மெள்ள நடக்கட்டும். பெண்ணுக்கு வயது பதினைந்து தானே!" என்று கணவர் மறுபடியும் சொன்னபோது சாரதாம்பாள் மனம் மாறிவிட்டாள்.

"இதுதான் நிச்சயம் என்றால் இந்த வருஷமேதான் நடந்துவிட்டுப் போகட்டும்; அவனுக்கும் வேலையாகி அப்புறம் கலியாணம் என்றால், உடனே தனிக் குடித்தனம். பெண்ணைப்

பெற்றவர்களுக்கும் நான் கிள்ளுக் கீரையாகி விடுவேன்!" என்று சாரதாம்பாள் பெண்ணிடம் சொல்லிக் கொண்டாள்.

"வேளை வந்துவிட்டால், மனசும் இப்படித்தான் மாறிவிடுகிறது அம்மா! பத்துநாள் முந்தி நீ சொன்னதென்ன, நினைத்ததென்ன?" என்று பவானி கேட்டுவிட்டுச் சிரித்தாள்.

அன்று மாலை துரைசாமி, மூக்குகண்ணாடி அணிந்து, கையில் பேனாவுடன் வந்து, "வெள்ளிக்கிழமை, இன்றே எழுதிவிடுகிறேன்! என்ன எழுதட்டும் ரகுபதி, சொல்லிவிடு!" என்றார் முறுவலுடன்.

ரகுபதி எதிர்பாராத கேள்வி அல்லவே! சாரதாம்பாள், அருகிருக்கும் பவானியிடம் "அபிப்ராயம் கேட்கிறவர் மாதிரியா இருக்கு கேள்வி?" என்று மெல்ல முணுமுணுத்தாள், மறுகணம் முகம் மலர்ந்தாள்.

"என் படிப்பு முடியட்டும், ஒரு வேலையும் ஆகட்டும் என்கிறது என் எண்ணம். அவர்களுக்கு அவசரமானால் பேஷாக வேறு இடம் பார்க்கட்டும்."

"அவர்களுக்கு அவசரம் என்று யார் சொன்னது?"

"அம்மா இஷ்டமும் தெரியவேண்டும் எனக்கு. அம்மா செய்கிற தீர்ப்பு சரியாயிருக்கும்!"

"பெண்ணைப் பிடிக்கவில்லை என்றால் சொல்லிவிடு. அம்மா மேல் பொறுப்பைப் போடாதே!"

"பெண் ரொம்ப நன்றாகத்தானிருக்கிறாள்; ஆனால் அதற்காக கலியாணம் செய்து கொண்டு விடணுமா?"

"பின்னே எதற்கு இறங்கிப் பார்க்கச் சொன்னேன்?"

"சிநேக பாவத்தில் தான்,"

"இப்போது மட்டும் விரோத பாவம் வேணுமா?"

"அம்மாவுக்குத் தெரியும். நான் பெண்ணைப் பார்த்தது மேற் பூச்சாகத்தானே! அம்மாவிற்குத்தான் மற்ற விஷயங்களில் 'ஜட்ஜ்' பண்ணத் தெரியும்!"

இத்தனை நேரமும் தன் மனைவி அடுத்த அறையில் இருந்து கொண்டு தான் கவனிக்கிறாள்; எழுந்து வரவில்லை, "என்னடி அம்மாளே, கேட்டாயா? சொல்லு உன் எண்ணத்தை!" என்று கேட்டவாறே போனார் துரைசாமி , மனைவியை நாடி.

சாரதாம்பாள் தயாராக இருந்தாள் விடையுடன். "அவனுக்குப் பெண்ணைப் பற்றி குறை எதுவும் இல்லைபோல் தான் தோன்றுகிறது; எனக்கும் ஒன்றும் தெரியக் காணோம், அவன் சந்தோஷம் தான் எனக்கும் சந்தோஷம்."

எத்தனையோ விஷயங்களிலே கணவருக்குப் பணிந்து போன சாரதாம்பாள், கணவர் தன்னைப் பணிய வைக்கிறார் என்று தான் வருத்தப்பட்டாள்.

ரகுபதி பிரமித்துவிட்டான்.

"பவானி! உன் தீர்ப்பு என்ன?" என்றார் துரைசாமி.

"குங்குமம் தடவட்டுமா அப்பா, கடிதத்தில்!"

"இந்தா தடவு;"

'அம்மா மனசு தங்கம்; முதலில் எப்படிச் சொன்னாலும், செயலில் இறங்கும் சமயத்தில், பிறரின் ஆசைகளுக்கு மதிப்புக் கொடுத்து விட்டுக்கொடுத்துவிடுகிறாள். வெண்ணெயாகப் பேசிக் கடுக்காயாகக் காரியம் செய்கிற வழக்கமில்லை. அப்பாவின் நல்லதனமெல்லாம் ஒரு படி இறக்கம்தான்!' என்று ரகுபதி வியந்து கொண்டிருந்தான்.

"ரகுபதிக்கு ராஜேசுவரியின் கை பிடிக்க முழுச் சம்மதமிருக்கிறது. ஸ்வராஜயலட்சுமியை வரவேற்கும் இந்திய மக்கள் எத்தகைய ஆவல் கொண்டிருக்கின்றனரோ அத்தகைய ஆவல், ராஜலட்சுமியை எங்கள் குடும்பத்திலே வரவேற்க எங்களுக்கும் இருக்கிறது!" என்று கடிதம்

எழுதிவிட்டு, தபாலில் போடுமுன், அதை தன்னிடம் காட்டியபோது ரகுபதி, "பெண்ணுக்குச் சம்மதமா?" என்று கேட்க மறுத்துவிட்டீர்களே!" என்று நினைப்பூட்டினான்.

அதற்கு துரைசாமி சிரித்து, "உங்களுடனேயே ரயிலில் பயணம் செய்து கொண்டு கடிதம் வந்துவிட்டது! உங்களை ரயிலேற்றியனுப்பியதும், எழுதி வைத்திருந்த கடிதத்தை அவர் R.M.S. ல் போட்டுவிட்டார் போலிருக்கு. பார் இதை!" என்று கூறி ஒரு கடிதத்தைக் காட்டினார்.

திகைத்தான் ரகுபதி. "பெண்ணும் பிள்ளையும் பரஸ்பரம் கருத்தொத்துவிட்டார்கள் என்பது என் கருத்து. என் பெண்ணும், அவர்கள் மூவருடனும் கடைக்குப் போனாள். உற்சாகமாய்த் திரும்பி வந்தாள். சாம்பசிவம் குடும்பத்தாரைப் பார்க்க அவர்கள் மூவரும் புறப்பட்ட பொழுது, 'நான் துணை போகிறேன்,' என்று ராஜேசுவரி புறப்பட்டாள். ரகுபதிக்கு, ராஜேசுவரியின் பாடப் புத்தகங்களைக் காட்டினேன். 'புரோக்ரஸ் புக்'கைக் காட்டினேன். 'ஒரோரு மாதத்தில் ஒரோரு சப்ஜெக்டில் ரொம்ப நல்ல மார்க்கு இருக்கிறது. சிரத்தை வைத்துப் படித்தால் எல்லாவற்றிலும் முதல் வரலாமே!" என்று கேட்டார். எத்தனை உண்மை? 'ஸயன்ஸில் ரொம்ப மட்டம்' என்று ஒரு மாதம் குறிப்பு இருக்கிறது; அடுத்த மாதம் ஸயன்ஸிலேதான் உயர்ந்த மார்க்கு! மனம் உண்டானால் வழியுண்டு என்பதற்கு தகுந்த உதாரணம் அவள். அதையே அவர் பளிச்சென்று எடுத்துச் சொல்லிவிட்டார். ரகுபதி வந்தது முதல் ராஜேசுவரி என் கண்களில் புதுமையுடன் விளங்ககிறாள். அவளுடைய கண்களில் புலனாகும் சம்மதம், சொற்களைவிட வலிமையுடையது; உள்ளத்தை உள்ளபடிப் புலப்படுத்தும் திறமை அவள் விழிகளுக்கு எப்பொழுதுமே உண்டு. பேனாவைக் கெட்டுப் போக்கினால், மருட்சியுடன் வரும்பொழுதே கண்களில் காட்டிவிடுவாள் குற்றத்தை. தம்பியைக் கோபித்துக் கொண்டுவிட்டு பச்சாத்தாபங் கொண்டிருக்கிறாள் என்பது புலனாகும். 'கேரம்' விளையாட அழைக்கும் அழைப்பிலே, அவள் கண்கள் தான் நாவைவிட அதிகப் புலமையுடன் பேசும்."

"ரகுபதிக்குச் சம்மதமானால் எங்கள் ஆசைகள் இருப் பெறத் தொடங்கும்." இதுதான் நடராஜனின் கடிதம். "எப்பொழுது எழுதினார் இந்தக் கடிதம்? நாடகத் தனமான காரியங்களைச் செய்கிறாரே மனுஷன்!" என திகைத்த ரகுபதி, பதிலே பேசாமல் டென்னிஸ் மட்டையுடன் வீட்டைவிட்டு வெளியேறினான். நெஞ்சிலும், நினைப்பிலும் ராஜேசுவரி புகுந்து கொண்டாள்.

## 7

நடராஜன் ஆனந்தக் கூத்தாடினார்!

"விசாலம், விசாரக்காரி! ராஜேசுவரி, ராஜலட்சுமி ஆகிவிட்டாள். ஸ்வராஜயலட்சுமியாகி விட்டாள்! கேள், சந்தோஷ சமாசாரம்! இரண்டு நாளாவது சந்தோஷ சமாசாரத்தை அனுபவி! அப்புறம், கலியாண ஏற்பாடுகளுக்காக விசாரப்படலாம்!" என்று சந்தோஷக் கூப்பாடு போட்டவாறே நடராஜன் வாசலிலிருந்து புழக்கடை வரை வந்து, மங்களச் செய்தியை மனைவி மக்களிடையே பரவச் செய்தார்.

"நான் போய் அடுத்தாத்து மாமிகிட்டே சொல்லிவிட்டு வருகிறேனம்மா!" என்று தரையில் சாக்கட்டியால் சித்திரம் வரைந்து கொண்டிருந்த பையன் ஓடிவிட்டான்.

"ரகுபதி மாமாவுக்கும் அக்காவுக்கும் கலியாணம்!" என்று கை கொட்டி ஆரவாரம் செய்தாள், மேஜை மேல் ஏறி நின்று குதித்தாள், ராதை.

"சம்மதமில்லை என்று வந்திருந்தால், எப்படி இருந்திருக்கும் இந்த நேரத்திற்கு?" என்று கற்பனை செய்தாள் விசாலம்.

"இந்த வருஷமே நடத்தலாம் என்று குறிப்பிடவில்லையே!" என்று நடராஜன் யோசித்தார்.

"எங்கள் அகத்தில் கலியாணக் களை கட்டிவிட்டது; வீட்டில் உவகை தாண்டவமாடுகிறது" என்று நடராஜன் நன்றியுரை எழுதிப் போட்டார்.

"அக்கா, உனக்கும் ரகுபதி மாமாவுக்கும் கலியாணமா? நீ மனணயில் உட்காருவாயா?" என்று சின்னத் தம்பி கேட்டான்.

"சீ, போடி படிவி!" என்று சிடுசிடுத்துத் துரத்திவிட்டாள் ராஜேசுவரி.

'வெட்கம் என்றால் அதற்காக இத்தனை சிடுசிடுப்பாக இருப்பானேன்? கடிதம் வந்தது முதலே, சிரிக்காமல், புன்னகைக்காமல், எரிந்து எரிந்து விழுகிறாளே? கண்ணனைக்கூட, "என் பிராணனை வாங்கிவிடு!" என்று அலுத்துக் கோபித்தாளே! இஷ்டமில்லையோ?'

விசாலம் மகளின் அபிப்ராயத்தைக் கேட்டுவிட்டாள். எப்படி? சிறுகடிதத்தின் மூலம்; கணவனைப் போன்ற மனைவியல்லவா அவள்?

"ராஜம், சோப்புப் பெட்டிக்கு அடியிலே ஒரு கடுதாசியிருக்கு, எடுத்துப் பாரு!" என்று தாய் சொன்னதும், சிறிது தயங்கியவாறே கடிதத்தை எடுத்தாள் ராஜேசுவரி. முன்னம் ஒரு தடவை, தாய் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டு, கண்ணீர் சிந்தியவாறே அப்பால் சென்றது அவளுக்கு நினைவு வந்தது. "ராஜம், அப்பா கோபித்தார் என்று மத்தியானம் வீட்டிற்கு வராமல் சூர்யம் வீட்டிற்கு போய்விட்டாயே! நான் துடித்த துடிப்பு நீஅறிவாயா?" என்று அதிலே! இன்று . . .

"ரகுபதியிடம் எங்களுக்கு ஒரு குறையும் தெரியவில்லை. உனக்கு இஷ்டமில்லை என்றால் வற்புறுத்தவில்லை. உனக்கு இஷ்டமில்லை என்றால் இங்கேயே ஒரு கடிதம் எழுதி வைத்துவிடு. இஷ்டம் என்றால் ஒன்றும் எழுதவேண்டாம்."

'அம்மாவின் கெட்டிக்காரத் தனத்தைப் பாரேன்!' என்று ராஜேசுவரி வியப்புற்றாள். மகிழ்ச்சியுற்றாள். புல்லின் துடிப்புப் போல அவளுடைய இளம் உள்ளம் மெல்ல துடித்த வண்ணமிருந்தது.

"நீ பாக்கியசாலியம்மா! தகுந்த கணவன், தகுந்த புக்ககம் வாய்க்கிறது!" என்றார் சர்மா.

"என்ன நடராஜன்! எனக்கு என்ன தரப்போகிறாய்? துரைசாமி அய்யர் எங்களகத்திற்கு வந்து முதலில் இறங்கினார். உனக்குப் பரிச்சயமாச்சு. மாப்பிள்ளை கிடைத்துவிட்டான். என்னால்தானே உனக்கு இந்த அதிருஷ்டம் அடித்தது!" என்றார் சாம்பசிவம், உரிமையுடன்.

"சாம்பசிவம் அப்படிச் சொன்னாரா? நான் கற்றுக் கொடுத்த சங்கீதமல்லவா இந்த திருமணத்திற்குக் காரணம்?" என்று கண்டனம் சமர்ப்பித்தார் சர்மா.

"என்னுடைய வாழ்க்கைக்கு ஆதாரமான காலேஜ் தான் என் பெண்ணின் வாழ்விற்கும் ஆதாரம் என்று நான் சொல்லுகிறேன், என் காலேஜுடன் இத்தனை காலம் பழகிய எனக்கு அதன் குரல் செவியில் விழுகிறது!" என்று கூறினார் நடராஜன், ஹாஸ்யமாக.

"எல்லாம் ஒன்று கூடியதனால்தான் இந்த வைபோகம்! இதுதான் கடவுள் செயல் என்கிறது!" என்று விசாலம் வேதாந்தம் பேசினாள்.

"நானும் அந்தப் பையனும் இஷ்டப்படுகிறதனால்தான் இது நடக்கிறது!" என்று ராஜேசுவரி முடிவு கட்டினாள்.

ரகுபதிக்குச் சம்மதம் என்னும் நினைப்பைவிட, 'என் மனத்திற்குகந்தவன் ரகுபதி' என்னும் நினைப்பு தான் அவளுடைய கற்பனை வளம் பெருக உதவியது. தன்னை மணக்க மறுக்கக் கூடியவர்கள் இருப்பார்கள் என்னும் எண்ணம் ராஜேசுவரிக்கு இருந்ததில்லை. ஏனெனில் அவள் தன்னைப் பற்றிப் பிறர் குறை கூறுவதில்லை என்பதை அறிந்திருந்தாள். ஆனால் விசாலம், விசாரப்பட்டதனாலும், சாரதாம்பாள் மிடுக்குத் தளராமலிருந்ததாக ஒரு ச__ம்சயம் உண்டாகியதனாலும், ராஜேசுவரியும் சற்று நம்பிக்கையைத் தளர்த்தியிருந்தாள். அதனால், ரகுபதியின் சம்மதமும், துரைசாமியின் கடிதமும் திருமணச் செய்தி கொணர்ந்த போது, ஆறுதல் ஏற்பட்டதே அன்றி ஆச்சரியம் ஏற்படவில்லை.

தனக்குகந்த மணாளன் வாய்க்கிறான், சிறப்புகளுக்குரிய தேச பக்தரின் குடும்பம் தன் மணவாழ்வின் நிலைக்களனாக வாய்க்கிறது என்று அவள் பூரித்தாள். தன் கலையுள்ளம் களிக்க சங்கீத ரசிகர்களின் அரவணைப்பு கிடைக்கிறது என்று உள்ளம் களித்தாள்.

இசையார்வமுள்ள குடும்பம்,,புக்ககமாகும் பேறு கிடைத்ததே என்று வாத்தியாருக்குத்தான் எத்தனை சந்தோஷம்! பவானியிடம் சில தமிழ்க் கீர்த்தனங்கள் கற்கவேண்டும்,; ரகுபதிக்குத் தமிழிசையில் ஆர்வம் அமோகமாக இருக்கிறதே! பவானியுடன் சேர்ந்து ரேடியோவில் பாட வேண்டும். பவானியின் குரல் சிறிது கட்டைக் குரல்; ஒரு கட்டைக்குரல், ஒரு சன்னக் குரல்

இரண்டும் சேர்ந்தால் இரு குரலிசை ஆனந்தமாகத் தானிருக்கும், சந்தேகமில்லை. பவானியுடன் பாடினால், மேடைமீதும் ஏறிப்பாடலாம். வாத்தியார் உதவி தேவையில்லை; அவர் கூடக் கூட வருவதற்கியலுமா? வேண்டாம்.

பவானியின் கணவருக்குக் குழலிசைக்கத் தெரியுமாமே! சங்கீத ஞானம் அவருக்கு அபாரமாம்! பாட்டுக்கள் நெட்டுரு இல்லையாம்! ஆனால் ராகங்கள் பாடினால், மணிக் கணக்கில் பாடுவாராம்! குரலினிமை இல்லையாம், ஆனால் அவர் பாடத் தொடங்கினால், இடம் விட்டு எழத் தோன்றாதாம்! "இன்ன கீர்த்தனை, இன்ன ராகம், இன்ன தாளம் என்று சொல்லத் தெரிய வேண்டாமா? எப்படி மறக்கும்?" என்று வாத்தியார் கேட்பாரே? பவானி புருஷர் அபூர்வ ராகங்களைப் பாடுவாராம், கீர்த்தனமே தெரியாமல்? என்ன ஆச்சரியம்!

ரகுபதிக்கும் மிருதங்கம் தெரிந்தால்? ஆகா, பாட்டுக் கச்சேரி செய்யலாம், குடும்ப செட்! கலியாணமான பிறகு ஒரு போட்டோ எடுத்துக்கொள்ள வேண்டும். நடுவில் வாய்ப்பாட்டுப் பாடும் ஜோடி. ஒருபுறம் குழலலூதுபவர், பவானியின் கணவர்; மறுபுறம், மிருதங்கத்துடன் ரகுபதி! வாசிக்கத் தெரியாத வாத்தியத்தை வைத்துக் கொண்டு டம்பமாக போட்டோவில் உட்காரப் பிடிக்குமா? பிடிக்காதோ என்னமோ? ஆம், தப்புதான்; ஆனால் சுருதி பெட்டியுடன் ரகுபதி உட்காரக் கூடாதா? ராஜேசுவரியின் கற்பனைகள் இத்தகையனதாம்! புகழுடனும், இன்பமுடனும் வாழ வேண்டும் என்னும் நினைப்பிற்கு மீறிய சிந்தனை அந்த இளம் உள்ளத்திலே இல்லை.

கணவர் கோபிப்பார் என்பதற்காகத் தன் கவலைகளை அவரிடம் கூறாமலிக்க முயன்ற விசாலம், சீதம்மாளும் பிறரும் சுபச் செய்தி வந்த மகிழ்ச்சி புலப்படுத்திப் பேச வந்தபோது, தன் கவலைப் பல்லவிகளைப் பாடினாள். நடராஜன் கவனித்து சினந்தார்.

"இஷ்டமில்லை என்று கடிதம் வந்திருக்கலாம்! மலைப்பு, மலைப்பு என்று நீயேதான் மனதிலே மலையைச் சிருஷ்டித்துக் கொள்கிறாய்! ஒரு கடிதம் எழுது சாரதாம்பாள் மாமிக்கு; என்ன செய்யட்டும் என்று கேட்டு எழுது. சிநேக பாவத்தில் ஏற்பாடான இந்தக் கலியாணத்திற்கே நீ இப்படியிருந்தாயானால், நீ எதற்கு லாயக்கு?" என்று அவர் கேட்டதற்கு கோபிக்கவில்லை விசாலம். "நான் கடிதம் எழுதினால் நன்றாக இருக்குமோல்லியோ? என்று சம்சயமுடன் கேட்டாள்.

"எழுதினால் சந்தோஷப்படுவார்கள் என்று நான் சொல்கிறேன்." என்று முறைத்தார், அவர்.

அவருடைய கோபம் பெருகுவதைப் பார்த்த விசாலம், சாமர்த்தியமாக, "என் கையெழுத்து நன்றாயிருக்காதே என்று கேட்டேன்; தலையெழுத்து மாதிரி என்று நீங்கள் சர்டிபிகேட் கொடுத்திருக்கிறீர்களே!" என்று மாற்றிக் கேட்டாள்.

"ஓ, ஆமாம், சரி, நானே எழுதிவிடுகிறேன் போ!" என்று கூறி நடராஜன் மாடிக்குச் சென்றுவிட்டார்.

சிறிது பொறுத்துக் கீழே வந்தவர், அவளிடம் ஒரு கடிதங்காட்டி, "கையெழுத்துப் போடு" என்றார். சாரதாம்பாளுக்கு விசாலம் எழுதுவதாக அமைந்த கடிதம் அது. நடராஜனே எழுதியிருந்தார். கொட்டை, கொட்டையாக எழுதிப் பழக்கமுள்ள அவர், சிறிது நிதானமுடன் சிறிய எழுத்துக்களாக எழுதியதால் ஒரு பெண்ணின் கையெழுத்துப் போலவே சுத்தமாக அமைந்திருந்தது அது.

"நான் எழுதினால் இன்னும் கொஞ்சம் மரியாதையுடன் எழுதுவேன்; நீங்கள் அளந்து எழுதியிருக்கிறீர்கள். 'தெரிவித்தால் மகிழ்வேன்' என்று நான் எழுதமாட்டேன், 'தெரிவித்தால் ஆறுதலாக இருக்கும்' என்று கெஞ்சியிருப்பேன்" என்று சிரித்தாள் விசாலம்.

"அசட்டுத் தனம்!"

"சரி, போகட்டும். கையெழுத்து இப்போ போடவில்லை நான். ராகுகாலம் வரப்போகிறது, அது போகட்டும்."

"ராகு காலம் வருகிறதற்குள் போட்டுவிட முடியாதா?"

"நான் கையெழுத்துப் போட்டதும், நீங்கள் கவரில் போட்டுவிட்டு, உடனே போஸ்டாபீசுக்குப்

போவீர்கள். ராகுகாலம் போகிறவரை தபாலாபீசுக்குப் போகாமலிக்க உங்களால் முடியாது!"

தன் மனைவி சொல்வது உண்மை என்று நடராஜன் அறிந்தார். ராகு காலம் போன பிறகு கடிதத்தை கொணர்ந்து, "நானே போட்டுவிட்டேன் கையொப்பம், பார்!" என்றார்.

"நீங்களே சம்மந்தியம்மாளுக்கு எழுதிக் கேட்கிறமாதிரியிருக்கட்டுமே என்றா? அடப்பாவமே, . . அநியாயத்தைப் பாரேன்!"

ராஜேசுவரிக்கு 'என்னமோ, ஏதோ?' என்று உள்ளம் பதறியது. மறைவிலிருந்தாளே அவள்!

"என் பெயரை போட்டது தான் போட்டீர்கள், இவ்வளவு வக்ரமாகவா போடணும்? முழுக்க முழுக்க கடிதம் எழுதினால், சற்று கோணிப் போகும், கையெழுத்தும் சற்று குழறும். ஒரே ஒரு கையெழுத்தை மட்டும் போடக் கூடவா கை வணங்காது? இப்படி 'லிகாலம்' என்று தோன்றுகிறமாதிரி, அதுவும் 'ல' 'ம்' இரண்டும் ஏறத்தாழ! ... ஆனாலும் என்னை அசடாயடிக்கணுமா?" என்று விசாலம் கேட்டபோது, அவள் குரல் தழதழத்தது.

"என்னமோம்மா, உன் கையெழுத்துப் போலவே இருக்கணுமே என்று பாடுபட்டு போட்டேன்!" என்று சிரிப்பை அடக்கிக் கொண்டே சொன்னார் அவர். ராஜேசுவரிக்கு, அப்பாவின் குறும்புதான் ரசித்தது!

சாரதாம்பாளிடமிருந்து மறுமொழி வந்ததும் விசாலம் அளவிலாப் பெருமை அடைந்தாள். ஆனால் ஆறுதல் அடையவில்லை!

"சீர் வரிசைகள் செய்யும் விஷயமாக நாங்கள் எதுவும் சொல்வதற்கில்லை. உங்கள் பெண்ணிற்கு உங்கள் ஆசைக்கேற்பச் செய்யுங்கள். சபையில் வெறிச்சோடாமல் இருக்கட்டும் என்று தான் நான் சொல்ல முடியும். பட்சண வகைகளை நெய்யிலேயே செய்யுங்கள். தேங்காயெண்ணெயில் செய்ய வேண்டாம்."

"அப்பளம் நீங்கள் இட வேண்டாம். வாங்கவேண்டாம். நானே இட்டுத் தருகிறேன். என் பிள்ளையின் பூணுலின்போது நான் இட்ட அப்பளம், வெள்ளித் தாம்பாளம் போல பெரிது பெரிதாக, இலையை மறைத்துவிட்டது; ஊரே அதிசயப்பட்டது. பிள்ளையின் கலியாணத்தின்பொழுதும் அப்படியே இருக்க வேண்டும் என்று என் ஆசை. இரண்டாயிரம் அப்பளம் இட்டுத் தருகிறேன். சம்பிரமமாக சாப்பாடு நடத்துங்கள். பிராமணர்களும், வைதீகர்களும் செய்யும் ஆசீர்வாதம் எல்லாம் நம் குழந்தைகளுக்கு சிரேயஸ். சேஷமம்."

இந்தக் கடிதம் கண்ட பிறகு விசாலம் சஞ்சலப்படுவதைக் குறைத்துக் கொள்ளவில்லை. "நம் இஷ்டம் போல் என்றால், எப்படி? சரி, ஊரிலிருக்கும் அத்தைக்கு எழுதி வரச் சொல்லிவிடுவோம். அத்தைக்கு எல்லாம் தெரியும்" என்றாள் அவள்.

நடராஜன் பதிலளிக்கவில்லை. தொட்டிலில் உட்கார்ந்துவிட்டார். மேலும், விசாலம் ஏதோ, குழம்புவதையும், பேசுவதையும் கேட்டார். "இந்த வீட்டில் கலியாணம் நடக்கப் போகிறதில்லை!" என்று கூறி விறைப்புடன் எழுந்து போனார்.

## 8

திருமணக் கோலாகலம் ஆரம்பமாயிற்று. ஆனால், நடராஜனின் அகத்தில் அல்ல. தமிழ்நாட்டிலே, மணமகனின் ஊரிலே, நடராஜனின் நெருங்கிய உறவினர் வீட்டில் ராஜேசுவரியின் திருமணம் நடக்க ஏற்பாடாயிற்று. உறவினரனைவரும் புடை சூழச் சிறப்பாக நடத்துவது என்று முடிவாயிற்று; இருதரத்தாரும் மனமுவந்து செய்த முடிவு.

இல்லமும் ஆதரவும் அளித்த உறவினர் ஜகத்பதி அய்யர், ஆர்வமுடன் பல உதவிகள் செய்தார். துரைசாமி அய்யர் பல பொறுப்புகளை ஏற்றார். நடராஜனின் பொறுப்புகள் வெகு வெகு சொற்பம். விசாலத்தின் அழைப்பிற்கிணங்கி, அவளுடைய அத்தை வந்தாள். "அப்பளக் காரியம் இல்லை என்றால் கலியாணக் காரியம் வேறென்ன இருக்கிறது?" என்று அத்தை அலட்சியமாக பதிலளித்து, பெரிய பெரிய அடுப்புகளின் அருகு அமர்ந்து பெரிய பெரிய முறுக்குகளை நெய்யில் போட்டு எடுப்பதை விசாலம் பார்த்து, "என்ன காரியத் திறமை!" என்று வியப்பாள். "சரியான புளி புளியங்கொம்பாகத் தான் பிடித்திருக்கிறீர்கள் வரன்!" என்று பாராட்டிய ஜகத்பதி அய்யரிடம்

நடராஜன் "ஆலம் விழுது போல என்று சொல்லுங்கள். தழைந்து வந்த விழுதைப் பற்றிக் கொள்ள சாமர்த்தியம் தேவையா?" என்று அடக்கமாக பதிலளித்தார். துரைசாமி அய்யரும், நடராஜனும் அடிக்கடி சந்திப்பார்கள். ரகுபதி மட்டும் வரவில்லை. பவானி ஓரிரண்டு தடவைகள் வந்தாள். புடவைகள் விஷயமாகவும், மற்ற சில ஏற்பாடுகளைப் பற்றிப் பேசவும் வந்து போனாள். ராஜேசுவரி எல்லோரும் இழுத்த இழுப்பிற்கு இழைந்து கொடுத்தாள். ஆனால் உள்ளத்திலே இனந் தெரியாத குழப்பம் ஏற்பட்டிருந்தது. மகரந்தத் தூள் போன்ற மகிழ்ச்சியை, பீதியும் கவலையும் சூழ்ந்திருந்தன. "ஐயோ! தொண்டையை ரொம்ப கட்டியிருக்கு, அம்மா!" "கொஞ்சம் மிளகுக் கஷாயம் பண்ணித் தாங்கோ, அத்தை!" "பேசாமல் கூடப் போய்விடுமோ என்று கூடத் தோன்றுகிறதே, மாமி!" என்று தன்னையும் மீறிக் கேட்டுவிடுவாள் ராஜேசுவரி. புது ஊர், புது நீர், அதனால் அவளுக்கு தொண்டைக் கோளாறு.

"பாட்டு வாத்தியார் வருவதாகச் சொல்லிவிட்டார்; பாடாவிட்டால் அவரும் ஒப்பமாட்டார். எப்படி மணப்பந்தலிலே என்னால் பாடமுடியும்?" என்று ராஜம் ஏற்கெனவே கவலைப்பட்டாள். இப்பொழுது தொண்டையும் சரியில்லை!

பவானி ஒரு நாள் விசாலத்தையும் ராஜேசுவரியையும் அழைத்துப் போக வந்தாள். பட்டு ஜவுளிக்காரன் சில பொறுக்கி எடுத்த புடவைகளை எடுத்துக் கொண்டு வந்திருப்பதாகவும், அனைவரும் ஒன்று கூடி புடவை தேர்ந்தெடுப்பது நல்லது என்றும் சொன்னாள்.

தயங்கியவாறே, ரகுபதி தென்படுவானா என்று ஐயமுற்றவாறே சென்ற ராஜேசுவரி, ரகுபதியைக் காணவில்லை என்று தைரியமுடன் தாயைப் பின் தொடர்ந்து போனாள். பல புடவைகளைப் பார்த்தார்கள் தாயும், மகளும். முதிர்ந்த நீல நிற உடலும், அரக்குக் கரையுமுள்ள புடவையைக் காட்டி தன் இஷ்டத்தைத் தெரிவித்தாள் ராஜேசுவரி.

கொல்லெனச் சிரித்தாள் பவானி. "அண்ணா!" என்று கூறிக் கொண்டே, கையில் புடவையை எடுத்துக் கொண்டு, உள்ளே ஓடினாள். சிரித்துக் கொண்டே திரும்பி வந்தாள்.

"ஏன் சிரிக்கிறாள் பவானி," என்று விசாலம் திகைக்க, "ரகுபதி சித்தே முந்தி இதைத்தான் பார்த்தான்" என்று சாரதாம்பாள் விளக்க, "அவருக்கும் இதுதான் பிடித்ததாக்கும்!" என்று ராஜேசுவரி வெட்க, கடைக்காரன் முறுவலிக்க, இரண்டு வினாடிகள் கழிந்தன. இன்னும் சிரிக்கிறாள் பவானி! என்னமோ அரைகுறையாக பேசுகிறாள்!

கடைக்காரன் சொன்னான், "ரகுபதி ஐயரு இதைப் பார்த்துவிட்டு, 'யார் வாங்குவாங்க இதை?' என்று சொன்னாரு. இப்போ இந்தம்மா வாங்கச் சொல்லுது! நாங்கள் புடவை போடுகிறது சும்மா இல்லை என்று ருசுவாயிட்டுது!"

அவன் ராஜேசுவரியைப் புகழ்பவன் போலப் பேசினாலும், ராஜேசுவரிக்கு முகம் சுண்டிவிட்டது; கடைசியில், பவானி அண்ணனுக்கும், ராஜேசுவரிக்கும் பிடித்தமாகும் புடவைகளை தேர்ந்தெடுத்து புடவைக்காரனை அனுப்பிவிடும் சமயத்தில், தொலைவில் மங்கள வாத்தியங்கள் முழங்கின.

"பவானி! அவர்கள் வருகிறார்கள் பார். நம்மகத்திற்குள் அழைத்து ஆரத்தி எடுத்து பழம் பாக்கு வைத்துக் கொடுங்கள்," என்று துரைசாமி கூறினார்.

மங்கள வாத்தியங்கள் முழங்க, சில நெருங்கிய உறவினர் புடை சூழ, குளத்தில் பாலிகை விட்டு விட்டுத் திரும்பும் இளம் தம்பதிகளை உள்ளே அழைத்து, கையில் பரிசு கொடுத்து ஆரத்தி எடுக்கும் சமயத்தில், பவானி ராஜேசுவரியைப் பார்த்து, "பாட்டுப்பாடு, ஆரத்தி எடுப்போம்" என்றாள். ராஜேசுவரியின் கண்களில் நீர் தளும்பும் போலிருக்கும் நிலைமையில், ஒரு அம்மாள் கையில் ஆரத்தித் தட்டுடன் 'வா, சீக்கிரம்' என்று பவானியை அழைக்கவே, ராஜேசுவரி குழப்பத்தினின்று தப்பினாள்.

ஆரத்தி எடுக்கும்போது பவானி பாடவில்லை. மறுபுறம் தட்டு ஏந்திய அம்மாள்தான் பாடினாள். பவானி, ஆர_த்தியை வீதியில் கொட்ட வந்து கொண்டே, "ரகுபதி சும்மாயிருக்க மாட்டான்; அந்த பாட்டுத்தானா, இந்தப் பாட்டுத்தானா பாடணும் என்று ஏதாவது சொல்லிவைப்பான். அதற்குத்தான் நான் பாட மாட்டேன் என்றேன்!" என்று சொல்லிக்கொண்டே போனதை ராஜேசுவரி

கவனித்தாள்.

பாடுவதற்கு பவானி இஷ்டப்படுகிறாள்; துணிபுடனும், சோபையுடனும் பாடுவாள். அவள் பாட்டையே ரகுபதி நொடிப்பாராமே ... ஏன்? ராஜேசுவரி மென்று விழுங்கினாள்.

பவானி எதனால் அப்படிச் சொன்னாள் என்பது அவளுக்குத் தெரியாது.

பவானியின் கணவர் சத்தியமூர்த்தி சங்கீத ஞானம் நிரம்பியவர். அதனால், பவானிக்குப் பெருமிதம் உண்டு. அப்படிப்பட்ட கணவரே தன்னை ஒரு நாளும் நொடித்ததில்லை, அண்ணன் மட்டும் சில சமயங்களில் இடக்காகக் கேட்பான் என்று வருத்தம் பவானிக்கு இருந்தது. ஆனால் அண்ணன் எதனால் அப்படிச் சொல்வதுண்டு என்று மட்டும் அவள் ஆராய்ந்ததில்லை. பவானி ஏதேனும் தெலுங்குக் கீர்த்தனம் பாடத் தொடங்கும்பொழுது தான் ரகுபதி, "வேறு பாட்டு உனக்கு அகப்படவில்லையா? என்று கேட்பான. அவன் தமிழிசை ஆர்வமுள்ளவன்.

பவானிக்கே காரணம் சரியாக விளங்காதபோது, ராஜேசுவரிக்கு எப்படித் தெரியும்?

இதுபோல, பாட்டு விஷயத்தில் ராஜேசுவரியின் பீதியை வளர்க்கும் சம்பவங்கள் சில நடந்துவிட்டன.

ஒரு நாள், பெரியப்பா ஜகத்பதி அய்யரின் மனைவி, "நலங்கு கற்றுத் தரட்டுமா? என்று கேட்டுவிட்டு, தானே பாடத் தொடங்கிவிட்டாள்.

"அலங்கிருத குண பூஷணா! நலங்கிடுறேன்,

மல்லிகைப் பூச் சோலையிலே,

மத்தியான வேளையிலே

மல்லிகைப் பூ மாலை தொடுத்தேன்,

மன்னா உமக்கே அலங்கிருத குண பூஷணா!"

எந்த மணப்பெண் இதை மணப் பந்தலில் கூச்சமின்றிப் பாடுவாள்? என்று யோசித்தாள் ராஜேசுவரி.

இது போகட்டும்.

பன்னீருப் பூச்சோலையிலே, பாதி ராத்திரி வேளையிலே, பன்னீருப் பூமாலை கட்டினதாகவும், சண்பகப் பூச் சோலையிலே, சாயங்கால வேளையிலே, சண்முகப் பூமாலை தொடுத்ததாகவும் பாடணுமாம். இதைவிட வெட்கக்கேடு உண்டா?

"கற்றுக் கொள்," என்று மீண்டும் அந்த அம்மாள் சொன்னபோது, ராஜேசுவரி, "ஐயோ, வேண்டாம்" என்று பதறினாள். "கலியாண வீட்டில், கலியாணப் பெண் எத்தனை 'ஐயோ' போடுகிறாள்!" என்று குறும்பு செய்த அந்தம்மாள், "ஏன், அத்தனை பயமா என்னிடம் கற்றுக் கொள்ள?" என்று கேட்டாள்.

"ஐயையோ, அதற்குச் சொல்லலை பெரியம்மா! நான் பாடவே போகிறதில்லை!"

"ஏனாம்? பின்னே எதற்கு பாட்டுக் கற்றுக் கொண்டாயாம்?"

ராஜேசுவரி பதிலை மனதுள் நினைத்துக் கொண்டாள்: "இந்த அம்மாதான் கற்றுக் கொள்ளச் சொன்னாள்!"

"பதிலே காணோமே! ஏண்டியம்மா, ஏன் பாட்டு கற்றுக் கொள்ள வேணும்! கலியாணத்தில் கூட பாடாவிட்டால் எப்போ பாடுகிறதாம்? பாட்டுப் பாடாவிட்டால், விட்டுவிடுவார்களா என்ன?"

"ஏன், நான் பாடமுடியாது என்றால், எப்படி என்னை பாட வைக்க முடியும்?"

"அசடாட்டம் உளறாதேடி, பெண்ணே! வீம்பும் பிடிவாதமும், மனையிலே வச்சுக்காதே! இரண்டு நாளைக்குச் சொன்னபடியெல்லாம் கேள். பூ வைத்து பின்ன வேண்டாம், மடிசார்ப் புடவை வேண்டாம், நமஸ்காரம் பண்ணமாட்டேன், பாட மாட்டேன், ஆம்படையான்தான்

வேணும் என்று சொல்லி வைக்காதே!" என்று பெரியம்மா கண்டிப்புடன் பேச்சைத் துவக்கி, கலவரத்தில் ஆழ்த்திவிட்டதும், ராஜேசுவரி, "ஐயோ, இது என்ன சோதனை" என்று அயர்ந்து போனாள்.

இன்னொரு நாள், "எங்கே, கலியாணப் பெண்ணைப் பார்த்துவிட்டுப் போகிறேன்" என்று துரைசாமியின் உறவுக்கார அம்மாள் வந்து பாடச் சொன்னபோது ராஜேசுவரி, "எழும்பாது போலிருக்கே, கட்டியிருக்கு தொண்டை!" என்று கூறி தாயைப் பார்த்தாள்.

"சுருதியைக் குறைத்துப் பாடேண்டியம்மா!" என்று வந்த மூதாட்டி கூறியதும், ராஜேசுவரி, "கிழவியாயிருக்கிறார்! சங்கீதத்தில் ஆர்வமும், அதன் விஷயங்களும் தெரிந்திருக்கே!" என்று திகைத்து, பவானி கூட "ஆறரை சுருதியிலா பாடுவார்கள்! ஐந்துக்கு மேல் சுருதி கூடாதே!" என்று ஆச்சரியப்பட்டதையும் நினைவு கூர்ந்தாள். 'குறைந்த சுருதியில் பாடலாம், வாத்தியார் வந்தால் நினைவாகச் சொல்ல வேண்டும்' என்று நினைத்து ராஜேசுவரி, ஐந்து கட்டை சுருதியை வைத்துக்கொண்டு பாடத் தொடங்கினாள். இனிமையில்லாமல், ராஜேசுவரியின் குரலாகவே ஒலிக்காமல், சப்பென்று போய்விட்டது பாட்டு, "ஐந்து கட்டையில் கூட மேலே போகவில்லையே குரல்?" என்று கண்களில் நீர் தளும்பக் கூறிய மகளை விசாலம் கூர்ந்து பார்த்தாள். "மாமி, ஏதாவது நல்ல மருந்து சொல்லுங்களேன். எப்பவுமே அவளுக்கு சற்று பயம் தான், பாட்டுப் பாட! இப்பொழுது ரொம்பப் பயப்படுகிறாள்; அதற்கேற்றாற்போல் தொண்டையும் கட்டியிருக்கு. உங்கள் கை மருந்து ஏதாவது சொல்லுங்கள், செய்து பார்க்கிறேன்" என்றாள். மகளுக்கும் ஆறுதல், மூதாட்டிக்கும் பெருமிதம் உண்டாகும் வகையில் அவள் அவ்வாறு கேட்டது எத்தனை புத்திசாலித்தனம்?

"எனக்கு நாட்டு வைத்தியத்தைவிட இங்கிலீஷ் வைத்தியம்தான் பிடிக்கும். கிடக்கட்டும், சொல்றேன் கேள். 'பெப்ஸா' இங்கிலீஷ் மாத்திரை இருக்குப் பார்; அதை வாங்கித் தா. நான் அது தான் சாப்பிடுவது வழக்கம். பப்புருமண்டுமாச்சு, மருந்துமாச்சு அது! கஷாயமும், கடுக்காயும் கலியாணப் பெண்ணுக்குக் கொடுப்பானேன்! என்று கூறினார் அந்தம்மாள்.

நடராஜன் அன்று மாலையே ஒரு *சீசா* பெப்ஸ் வாங்கி வந்தார். காரணம், விசாலம் கவலையுடன் கணவனிடம் ராஜேசுவரியின் மனநிலையையும், குரல் நிலையையும் கூறியிருந்தாள். "பாடவேண்டுமே என்பதற்காக நான் வாங்கிவரவில்லை இதை; பேசவும்தான் குரல் நன்றாக இருக்கவேண்டாமா, கலியாண பெண்ணுக்கு?" என்று கூறினார் நடராஜன்.

சர்மா வாத்தியார் வருத்தமுடன், 'நான் வர இயலாது!' என்று கடிதம் எழுதிவிட்டதும் ராஜேசுவரி, 'கவலைவிட்டது, என்ன ஆனாலும் சரி, பாடக் கூடாது!' என்று முடிவு கட்டிவிட்டாள்.

திருமண நாள் நெருங்கிவிட்டது. கவலையை ஒழித்துக் களிப்புடன் விளங்கினாள் ராஜேசுவரி. மருந்துகளும், கஷாயங்களும் அளிக்காத பலனை அவளுடைய பகுத்தறிவு அளித்துவிட்டது; பாட்டுப் பாடக் கூடாது என்று முடிவு செய்துவிட்டாள் அவள்.

## 9

ஒரு சுபமுகூர்த்தத்தில் பந்தற் கால் நட்டார்கள்.

நாத வெள்ளத்தைப் பொழியும் நாதசுர இசையுடன் ஜானவாச ஊர்வலம் மணவீட்டிற்கருகில் வருகையில், ராஜம் தன்னந்தனியளாய் ஒரு சிறு அறையிலமர்ந்திருந்தாள். சூழ்ந்திருக்கும் சர்க்கரை கற்கண்டு பீப்பாய்களையும், வெற்றிலைக் குவியல்களையும், பூப்பந்துக்களையும், ஜன்னல் வழியே தெரியும் கோல மணையையும், அலங்காரப் பந்தலையும் கண்டபோது, ஒரு ஏக்கம் தோன்றியது. இத்தனை அழகான பந்தல், இத்தனை கோலாகலம், நாதூக்கு ராஜேசுவரி பார்த்ததில்லை. சூர்யமும், சிட்டியும், மற்ற தெலுங்கு தோழிகளும் பார்த்தால் எப்படிப் பிரம்மிப்பார்கள்? பாட்டு வாத்தியார் கூட பார்க்கக் கொடுத்துவைக்கவில்லையே! ஆகா, சினிமாக்களிலே மணமகளைச் சூழ்ந்து எத்தனை தோழிமார்? எங்கே, ஒரு தோழியைக் காணோமே! இந்த தனிமையா சூழவேண்டும்? ஊர்வலம் வருகிறதே! ஐயோ, ஒவ்வொரு வினாடியும் பாரமாகிறதே! யாராவது பேச்சுத் துணைக்கு இருக்கக்கூடாதா? கடவுளே! வாழ்வில் முதல் முறையாக ஒரு வாலிபனின் பக்கலில் அமர்ந்தாள் ராஜேசுவரி. உடல் முழுதும் கனன்றது. முகத்தில் தேங்கியது ரத்தம். இரண்டு நாட்களுக்கு முன்புதான் 'மணையில் உட்காரும்

முறை'யைப் பழக்க ராஜேசுவரியை மணையில் அமர்த்திக் கறிவடகம் இடச் சொன்னார்கள். ஆனால் ராஜேசுவரி, கால் மாறி உட்கார்ந்தாள். அவளுடைய காதருகு வந்து குனிந்து, சித்தி அதை நினைப்பூட்டினாள். "ஐயோ, தப்பு செய்கிறோமே!" என்று குன்றிப் போன உடம்புடன், தலை நிமிர்த்தாமல் உட்கார்ந்த ராஜேசுவரி, "விஜயாம்பிகே!" என்று கம்பீரமாகப் பாடும் பெண் யார் என்று பார்க்க பார்வையை நிமிர்த்தினாள். ஒரு அழகிய இளம் பெண், ஒரு கையில் ஏந்திய குழந்தையுடன் கம்பீரமாக நின்றுக் கொண்டு, அனாயாசமாகப் பாடிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

"சுருதியில்லாமல் எத்தனை அலக்காக பாடுகிறாளே!" என்று பிரமித்தாள். "வாத்தியார் சொன்னது நிஜம். எத்தனை ஞானம் தமிழ் நாட்டிலிருப்பவர்களுக்கு!" என்று எண்ணும்பொழுது, ராஜேசுவரியின் உள்ளத்தில் வேதனை மூண்டது.

"ராஜேசுவரி மணமகனைத் திரும்பி ஒரு தடவை கூடப் பார்க்கவில்லையே!" என்று நடராஜன் யோசித்தார். அவருக்குத் தெரியுமா ராஜேசுவரியின் வேதனை?

"மணமகள் என்று தெரிய ஒரு விசேஷ அலங்காரமும் காணோமே!" என்று யாரோ குறை கூறினதாக பெரியம்மா சொன்னாள்.

"அலங்கிருத கன்னிகாதானம் ஆகிவிடப் போகிறதே என்ற பயமா? கன்னிகாதானம் செய்யும்போது வேண்டாம்; இப்பொழுது செய்தால் என்ன?" என்று சாரதாம்பாள் கூட, வருத்தப்பட்டாளாம்.

"பயந்ததெல்லாம் வீணல்ல? எப்படியோ புகார்கள் கிளம்பி விடும் போலிருக்கே!" என்று பயந்து விசாலம் அன்றிரவு தூங்காமல் குழப்பமுடன் கழித்தாள்.

ராஜேசுவரியோ, கவலைகளினுடே களிப்புடன் கண்ணயர்ந்தாள். "வாழ்வில் ஓர் நன்னாள் சில மணி நேரங்களுள் புலரப் போகிறது," என்று அவள் உணர்ந்தாள்.

"உனக்கு மட்டும்தான் பயமாயிருந்ததோ? எனக்குக் கூட உடலெல்லாம் வியர்த்துவிட்டது, நீ வந்து அருகில் உட்கார்ந்ததும்! முதன் முதலில் ஒரு இளம் பெண்ணிடம் அமருகிறதென்றால்?" என்று ஆசை மனைவியை வினவி மகிழ்வது போல ரகுபதி கற்பனைகள் செய்தான். வாழ்வில் ஒரு நாள், திருமண நாள். ஆனால் வாழ்வில் பல நன்னாட்கள் உண்டு; சிறப்பான வேலை கிடைக்க வேண்டும்; ஏற்கும் மனைவியை, வாழ்க்கைத் துணைவியை, கண்ணியமுடன் நடத்தி, அன்பு செய்து, ஆதரிச புருஷனாக வேண்டும்.

மறுநாள், லாலி, ஊஞ்சல், கன்னிகாதானம், சப்தபதி முதலிய மணச் சடங்குகள் இனிது நடந்தேறின. புரோகிதர்களும், பெரியவர்களும், இடும் கட்டளைகளை, இளந் தம்பதிகள் நிறைவேற்றுக் கொண்டிருக்கையிலே, அவர்களின் மனநிலை முத்துச் சுடர் தெறிக்கும் நிலவு போல் விளங்கியது.

பிற்பகல் நலங்கு நடக்கப்போகிறது.

"நலங்கு நான் இட்டதே இல்லையே, தெரியாதே!" என்று சொல்ல வேண்டும்; 'அசடு, நீ எப்படி இதற்கு முன்பு நலங்கிட்டிருக்க முடியும்?' என்று அவர்கள் கேட்டுச் சிரிக்க வேண்டும்; 'நலங்கு நடந்து, நான் பார்த்ததே இல்லை' என்று சொல்கிற லட்சணமா?' என்று கணவன் புன்னகை பூக்க வேண்டும்" ; இப்படித் தான் நினைத்திருந்தாள் ராஜேசுவரி.

ஆனால் நடந்தது முற்றும் வேறு.

நலங்குச் சடங்கு மணமக்களுக்குக் குதூகலமளிக்கும் அம்சம் என்றும் ராஜேசவரி, கேள்விப்பட்டிருந்தாள். வேடிக்கைச் சித்திரங்கள் நலங்குக் காட்சிகளைச் சித்தரித்ததுண்டு. அதனால் தெரிந்து கொண்டிருந்தாள்.

ஈரச்சூழலும், ஓமக் புகையும் அளித்திருந்த உடற் சோர்வுடன் மனச் சோர்வும் கூடியது. உடல் கணகணத்தது. சுரம் வந்தாற்போல் மனதிற்குத் தோன்றியது.

மாலையைக் கழற்றி ஆணியில் மாட்டிவிட்டு, உடை மாற்றிக் கொண்டு ராஜேசுவரி பிரமை

பிடித்தவள் போல உட்கார்ந்துவிட்டாள்.

"அம்மா, ஜுரம் வந்த மாதிரியிருக்கு. கஷ்டமாயிருக்கு, படுத்துக்கறேன்."

விசாலம் ஊன்றி கவனித்தாள். மணப்பெண்ணுக்குரிய முக விலாசமே இல்லை என்பதை அறிந்தாள். கவலை ஏற்பட்டது. ஓர் ஓரமாக போட்டிருந்த பாயில் அவளைப் படுக்கச் சொன்னாள்.

அத்தை சொன்னார் - மணையில் வீம்புகள் கூடாதாம். ஆனால் ராஜேசுவரி கூசுவதெல்லாம் ஒரே ஒரு விஷயத்திற்கத்தான்; பாட்டுப்பாடத்தான். ராக்கடியும் ஜடைவில்லையும் வைத்து, இறுக்கிப் பின்னலிட்டு, வாழ்வில் உன்னதமான மணநாளில் அவள் முகத்தின் அழகைக் குறைக்கிறார்கள். அதற்கு ஆசேஷபணை செய்யவில்லையே! ஓமப் புகையும் பதினெட்டு முழப் புடவையும் அவளை எத்தனை தொல்லைப்படுத்தவில்லை? ஆனால் அப்படி நினைப்பது கூட அழகில்லை! ஆனால், அவளுடைய இனியகுரல் கோளாறாகயிருக்கும் சமயத்தில், புது மணம் புரிந்த மணாளனின் பக்கத்தில் கலியாணப் பெண்ணாகப் பலருடைய பார்வைக்கு இலக்காகயிருக்கும் நல்ல நாளில், பாட்டு உளறிக் கொட்டி அவமானத்தை ஏற்பதா?

சாப்பிட வந்த விருந்தினர் ராஜேசுவரியை ஏற இறங்கப் பார்த்தார்கள். அதற்காக பயந்து அவள் படுக்காமல் எழுந்து உட்கார்ந்தாள். எல்லோரும் புது முகங்கள். யாரையும் பார்க்க அவளுக்குக் கஷ்டமாயிருந்தது, அச்சமாகியது. ஆனால் அவளைப் பார்க்க விரும்பியவர் பலர்.

கணவனுடன் அமர்ந்து உண்ணும் முதல் உணவு ராஜேசுவரிக்குப் பசியாற்றவில்லை. குறும்புக்காரர்கள் வற்புறுத்தியதால் கணவன் தன் இலையில் உருட்டிவிட்ட லட்டுவைச் சாப்பிட்டாள். கணவனின் எச்சிலைச் சாப்பிட்ட மன நிறைவு ஒன்று தான் அவளுக்குண்டாயிற்று.

நலங்குக்குக் கணவனை அழைக்கும் கட்டத்திற்கு ராஜேசுவரி வந்தபோது, அவளுடைய உடலில் உணர்வுகள் உறைந்துவிட்டன. நண்பர்கள் புடை சூழ வீற்றிருந்த ரகுபதியைக் கைப்பிடித்துக் கட்டி வரும்பொழுது, நண்பர் குழாம் செய்த அட்டகாசம்!

"ரகுபதி! 'திக்கு வேறில்லையம்மா, தீனனைக் காக்கும் அம்மா!' என்று பாட்டு உருப்போட்டு உருப்போட்டுப் பார்த்தாயே! பாடிவிடு!" என்றான் ஒரு நண்பன். "பாஹிமாம், ராஜராஜேசுவரி பாடுடா ரகு," என்று இன்னொரு இளைஞன் சொன்னான். "ஐயோ, இந்த இளைஞர் குழுவில் எத்தனை பேர் பாட்டு ரசிகர்களோ? இந்தத் தமிழ்நாட்டில் தான் ஈ, காக்கைக்குக்கூட சங்கீத ஞானமாமே!" என்று ராஜம் தவித்தாள்.

"ரகுபதிக்கும் தன் நண்பர்களுக்கிடையே இருப்பது தான் விருப்பம் என்று தோன்றுகிறது; இங்கேயே நடக்கட்டும் திருமணம்" என்று துரைசாமி, நடராஜனின் யோசனையை ஆமோதித்து முன்பு எழுதினார். அதை ராஜம் நினைவு கூர்ந்தாள்.

மனைவியிடமுள்ள குறைகளை, ரகுபதி பொருட்செய்யாமல் இருக்கலாம். நான்கு மாதங்களுக்கு முன்பு அவள் இசைத்ததைக் கேட்டிருந்தான் அவள் கணவன். ஆனால் இந்த நண்பர்கள் என்ன நினைப்பார்கள்? அவர்கள் மத்தியின் கணவனின் முகம் சிறுத்து விடாதா? தனக்கும் அவமானம்.

மணையில் அமர்ந்த பிறகு ராஜம் தலை நிமிர்ந்து பார்த்தாள். பந்தல் நிரம்பியிருந்தது. ஒரு புறம் ஆர்மோனியப் பெட்டி. மற்றோர் புறம் வீணை, பிடில்; வீணையருகு ஒரு பெண், வாசிக்கத் தயாராக அழகாக உட்கார்ந்திருந்தாள். பெரும்பாலும் இளம் பெண்களும், இளைஞர்களும் தென்பட்டனர். சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது அவளுக்கு. ராஜேசுவரிக்கு நெற்றிப் பொட்டு கனன்றது. உடல் கனன்றது. மனம் கனத்தது. தலை வலித்தது.

"முதலில் கலியாணப் பெண் பாடட்டும், அப்புறம் நலங்கு ஆகிக் கொண்டிருக்கும் பொழுது நாங்கள் பாடுகிறோம்."

ராஜேசுவரியின் கண்களில் நீர் சுழன்றது.

விசாலம் "பாடு" என்று கூறும் பாவணையில் தலையை ஆட்டினாள் மெல்ல. ராஜேசுவரி, 'மாட்டேன்' என்று வெகு மெதுவாகத் தலையசைத்து பதில் அளித்துவிட்டாள்.

விசாலம் மகளருகு வந்து காதருகு வணங்கி, "வாய்ப்பாட்டுப் பாட பயம் என்றால், பிடிலைக் கொண்டு வரேன், ஒன்றே ஒன்று வாசித்துவிடும்மா!" என்று ஓதினாள்.

இதற்கும் தலையசைப்புத்தான்.

"பிடில் பயமில்லாமல் வாசிப்பாயே? குனிஞ்ச தலையை நிமிராமல். 'நின்னுவினா நாமதெந்து' வாசி, ஒரே ஒரு பாட்டு போதும்."

பிடிலை சற்று நிமிர்ந்து பார்த்தாள். உஹ ம், அதைத் தொடக்கூட முடியாது; விரல்கள் நடுங்கும்; அபஸ்வரம் விழுந்து விடும், 'இவள் கை சிறந்த கை' என்ற புகழுரைக்கு இத்தனை நாள் இலக்காகிவிட்டு, இப்பொழுது சிறுமைப்பட முடியுமா?

"முடியாது" என்று தலையசைத்தாள் ராஜேசுவரி.

"மாப்பிள்ளையின் சொந்தக்காரர்கள் உன் பிடில் வாசிப்பைக் கேட்கணுமென்று ஆசைப்படும்பொழுது நீ இப்படி வீம்பு பிடிக்கலாமாம்மா?"

வலது காதருகு அம்மா மன்றாடிக் கெஞ்சுகிறாள். இடதுபுறம் கணவன். எதிரில் ரசிகர் குழாம். தலைமேல் பெரிய பொறுப்பு. நாற்புறமும் ஊடுருவிப் பார்க்கும் கண்கள்.

"ஜுரம் வந்திருக்கு!" என்று ராஜேசுவரி முணமுணக்கும் பொழுது ஒரு துளி நீர் கண்களிலிருந்து உருண்டு விழுந்துவிட்டது.

"உட்கார கஷ்டமாயிருக்கா? போய்ப்படுத்துக்கணும் போல் இருக்கா?"

"ஆமாம்."

"நலங்குவரைக்கும் உட்கார முடியாது?"

"முடியாது."

ரகுபதி மணையைவிட்டு எழுந்துவிட்டான். ராஜேசுவரியும் உடனே எழுந்துவிட்டாள். கலங்கிய கண்களுடன் ஒரு புறம் நின்றாள்.

கொல்லென இரைச்சல் பந்தலில். உட்கார்ந்தவர்கள் எல்லோரும் சிதறிவிட்டார்கள்.

"கலியாணப் பெண் நலங்கிட மாட்டேனென்று சொல்லிட்டாளாமே!" என்று முழங்கியது குற்றச்சாட்டு.

ராஜேசுவரி அழுதாள். வாய்விட்டு 'ஐயோ' என்று கதறி, ஒரு பெஞ்சியின் மீது விழுந்து, மனமாறும் வரை அழுதாள். அழாமல் என் செய்வாள்?

அவளை அவதூறு சூழ்ந்துவிட்டதே! அவள் வெட்கப்பட்டாள், பயப்பட்டாள், பாட்டுப்பாட. மணப் பந்தலில், கலியாணப் பெண் வெட்க மேலீட்டினால் பாடவில்லை என்று யாரும் அவளைப் பாராட்ட முன் வரவில்லை. மணப்பெண், பெண்மைக்குரிய நாணமுடன் கூசினதற்காக அவளைக் குற்றஞ் சொல்லலாமா? 'அவள் நலங்கிட மறுத்துவிட்டாள்' என்று அவதூறாகக் கூறத் தொடங்கிவிட்டார்களே!

"இப்படியுமுண்டோடி! ஆண்பிள்ளை ரகுபதி என் பேச்சைத் தட்டக் கூடாது என்று நலங்குக்கு உட்கார ஒப்புக் கொண்டான்! தெலுங்கு தேசத்து வெகுளிப் பெண் என்று நினைத்தால், இப்படி வீம்பும் துடுக்குமாக இருக்கிறதே!" என்று புக்ககத்து உறவுக்கார அம்மாள் குரலெடுத்து முழக்கிக் கொண்டு போகிறாரே, இதை விட அவமானம் உண்டா?

புகழுரை கொணர வேண்டிய அடக்கம், பொல்லாங்கு செய்ததை நினைந்து நினைந்து அழுது அழுது ஓய்ந்தாள் ராஜேசுவரி.

"இப்படி பண்ணிவிட்டாயேடி ராஜேசுவரி! நான் என்னடி செய்வேன் இப்போ? சம்மந்திகளை எந்த முகத்தோடு பார்ப்பேன்? கத்தி கொண்டு வரேன், என் கழுத்தை வெட்டி விடு!" என்று கண்ணீருகுத்தாள் விசாலம்.

"எனக்குன்னு கலியாணமும் கழுத்தறுப்பும் நடந்திருக்கு" என்று ராஜேசுவரி,

கண்ணீருக்கிடையே வெடுவெடுத்தாள். கழுத்தறுப்பு என்ற வார்த்தையை எப்பொழுதோ புத்தகத்தில் படித்திருந்த ராஜேசுவரிக்கு, அன்னையின் பேச்சு அந்த வார்த்தையை நினைப்பூட்டி விட்டது.

"வாயைப் பார் வாயை!" இந்த விமரிசனம் அருகிலிருக்கும் பெரியம்மா செய்தாள்!

"அவர்கள், இவர்கள் . . .எல்லோரும் தூஷணை செய்கிறார்களே, ஐயோ!" என்று ஒரு விம்மல்; மறுபடியும் விக்கி விக்கி அழுதாள் ராஜேசுவரி.

"உன் மாமனார் வருகிறாராம்! எழுந்திரும்மா! வந்ததும் நமஸ்காரம் பண்ணு" என்றாள் விசாலம், சிறிது பொறுத்து.

நமஸ்காரம் எதற்கு? மன்னிப்பு கேட்கவா? என்ன குற்றம் செய்தாள் அவள்?

மாமனார் துரைசாமி அய்யரும், தந்தை நடராஜனும் கதவருகு வந்து நின்றபோது ஒரே ஒரு விசும்பல் தான் ராஜேசுவரியின் உள்ளத்தை விளக்கியது. அடங்காமல், அசிங்கமாக ஒலிக்காமல், இதயத்தின் ஆழத்திலிருந்து பீறி எழுந்த சோகக்குரல் அது.

"நடந்தது நடந்தாச்சு! யாரும் இனிமேல் பேசக்கூடாது இதைப் பற்றி! பிள்ளைவீட்டார் என்ற தோரணை கூடாது என்று மீண்டும் நினைவூட்டுகிறேன்!" என்று தம் வீட்டில் உறவினரையும் பெண்டுகளையும் எச்சரித்துவிட்டு வந்திருந்தார் துரைசாமி அய்யர்.

"ஜுரம் என்று சொன்னாயாமே அம்மா! பார்க்கலாம் என்று வந்தேன். வருத்தப்படாதே, உன் மாமியாருக்கும், ரகுபதிக்கும் உன் மேல் எந்தவித வருத்தமுமில்லை. சந்தோஷமாய் இரு!" என்று மருமகளைப் பார்த்துவிட்டு, ஆறுதலளித்துவிட்டு போனார் அவர்.

"என்ன பெருந்தன்மை!" என்று விசாலமும், ராஜேசுவரியும், மற்றவர்கள் அனைவரும் வியந்தார்கள். நடராஜன் தான் ஆச்சரியப்படவில்லை. ராஜேசுவரி பாட மறுத்தது குற்றம் என்று அவர் எப்படிச் சொல்லுவார்!

தவறுதலாக எண்ணிவிட்டவர்கள் பிள்ளை வீட்டார் தாம்; அவர்கள்தான் வருந்தி மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று நினைப்பவராயிற்றே நடராஜன்? மணப் பந்தலில், மணமகள், வெட்க மேலீட்டினார் பாடவில்லை என்று ஏன் யாரும் உணர்ந்து கொள்ளவில்லை? ராஜேசுவரி தவறு செய்யவில்லை என்று அவர் அறிந்தார்.

தம் ஷட்டகரிடம் அவர் சொன்னார். "பதினைந்து வயதுப் பெண் மணையில் உட்கார்ந்து கொள்வதற்கும், இருபத்தைந்து வயதுப் பெண் மணையில் உட்காருவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கும். இருபத்தைந்து வயதுப் பெண் கூசமாட்டாள்; வெட்கப்படமாட்டாள். இந்த ஊரில், ராஜேசுவரியைப் போன்ற சிறு பெண் மணையில் உட்கார்ந்து யாரும் பார்க்கவில்லையா? இவள் வெட்கப்படுவது பார்த்து ஏன் நம்பிக்கை ஏற்படவில்லை!" என்று மனத்தத்துவ விளக்கம் செய்தார்.

"மெள்ளப் பேசுங்கள், நடராஜன்_! தாலி ஏறிவிட்டதனால், தைரியமாகப் பேசுகிறதாகச் சொல்லிவிடுவார்கள்!" என்று ஷட்டகர் நடராஜனை கண்டித்தபொழுது நடராஜன், சிறிதும் கலங்காமல் சிரித்தார். "என் மாப்பிள்ளை ரகுபதி, அவளைப் பார்க்க வந்தபோது, அவள் பாடும்போது எதிரில் அவரை உட்கார்த்தினேன். நியூஸ் பேப்பரை எடுத்துப் பிரித்து முகத்தை மறைத்துக் கொண்டு விட்டார்; திடுக்கிட்டுப் போய்விட்டேன்! சரி, சிறு வயதுப் பிள்ளை, கூசுகிறார் என்று தெரிந்தது," என்று அந்தநாள் ஏற்பட்ட ஏமாற்றத்தை இன்று சொல்லி ரசித்துப் பிறரையும் ரசிக்கச் செய்தார்.

அன்றிரவு ஔபாசனத்திற்கு கணவனைக் கை பிடித்து உடன் தொடருமுன், உடல் கூசி நின்ற ராஜேசுவரி, துணிபுடன் ஒருமுறை கூர்ந்து பார்த்தாள். ரகுபதியின் நண்பர்கள் கொட்ட மடங்கியிருந்தார்கள். விசாலம், "போம்மா" என்று உந்தினாள். ரகுபதி தயாராக நின்றிருந்தான். இடது கண்ணை, இடது கையால் கசக்கிக் கொண்டே, வலது கரத்தை நீட்டி, கணவன் நீட்டிய கையைப் பற்றினாள் ராஜேசுவரி. அசட்டுக் குழந்தை போல கண்ணைக் கசக்கிக் கொண்டு வரும் மனைவியைப் பார்த்து ரகுபதிக்குக் கோபம் வரவில்லை; உரிமையுடன் கைப்பற்றி, நிதானமுடன்

நடந்தான்.

அன்றிரவு துயில் கொள்ளப் படுத்த ராஜேசுவரி நினைத்துப்பார்த்தாள்: "அவர் நல்லவர்! ஒரு கடிதம் எழுதி நான் மன்னிப்புக் கேட்டால் என்ன? 'உங்கள் மனதைப் புண்ணாக்கி விட்டேனே!' என்று கதறி எழுதினால் என்ன? 'அன்பரே' என்று ஆரம்பிக்கலாமா கடிதம்? சே, கடிதம் எழுதினால் இதற்கு மட்டும் தைரியமுண்டோ என்று தோன்றிவிடாதா? யாரிடம் கொடுத்தனுப்ப முடியும்? நடவாத நினைப்பு! அவர்தான் மன்னித்துவிட்டாரே!"

ரகுபதிக்கு முதல் நாள் இரவு இருந்த உற்சாகம் இல்லை. "அவள் ஏன் அழுதாள்? எதற்காக அழ வேண்டும்? பாட்டுப் பாட இஷ்டமில்லை என்று மறுத்தாள்; போனாற் போகட்டும். குலுங்கக் குலுங்க அழுதாளாமே, ஏன்? 'ஐயோ!' என்று அழும்படி அத்தனை துக்கமா? ஏன்? இஷ்டமில்லையா இந்த சம்பந்தம்? பவானியின் கலியாணம் நடந்ததே, பவானி எத்தனைக் களிப்புடன் விளங்கினாளே! பவானி விரும்பிய கணவன் சத்யம்!"

திருமணம் முடிந்துவிட்டது. "ஊர்வலத்தின் பொழுது ராஜேசுவரி பதுமை மாதிரி உட்கார்ந்தாள்; நலங்கின் பொழுது அசட்டுத்தனம் செய்த மாதிரி ஒன்றும் செய்துவிடவில்லை. பார்க்க வெகு ரம்மியமாக இருந்தது ஜோடி. புருஷனோடு பேசுவது, சிரிப்பது ஒன்றும் இல்லை; ரொம்ப நேர்த்தியான ஊர்வலம்!" என்று புக்ககத்து உறவினர்கள் ஓரிருவர் சொன்னதை ராஜேசுவரி பெரும் பாக்கியமாகக் கருதினாள். தந்தை நடராஜன் மட்டும், "இப்படி உணர்ச்சியற்ற பெண்ணாக விளங்குகிறாளே, நலங்கு தினத்திற்குப் பிறகு," என்று வருத்தப்பட்டார். ரகுபதி கூட "ஏன் அவள் ஊர்வலச் சாரட்டில் உட்கார்ந்திருந்த குழந்தைகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்? தப்பித் தவறிக் கூட வலப்புறம் திரும்பவில்லையே!" என்று எண்ணினான்.

திருமணம் முடிந்து நான்கு நாட்கள் கழித்து புகைப்படம் எடுக்கும் ஸ்டுடியோவிற்கு ராஜேசுவரியையும் ரகுபதியையும் அழைத்துப் போனார்கள். போகும் வழியெல்லாம் நேருக்கு நேர் பார்த்துக் கொள்ளாமல் சென்ற தம்பதிகள், திரும்பி வரும் வழியில், நேருக்கு நேர் பேசிக் கொள்ளாமல் வந்தார்கள். அவர்களுடைய நோக்கிலே மலர்ச்சி இருந்தது. இதழ்களிலே முறுவல் பொலிந்தது. ஆதரவின் முத்திரையை ராஜம் கணவனின் பார்வையில் கண்டாள். நன்றியுடன் மீண்டும் ஓரிரண்டு தடவைகள் பார்த்தாள். அந்தச் சமயத்தில், வேற்றுமை உணர்ச்சி ஒழிந்தது. சம்பிரதாயம், சடங்கு என்ற சூழ்நிலையிலே தோன்றியிருந்த திரை அகன்றது. 'நாம் இருவரும் ஒருவரே' எனப் பண்ணிசைத்தது புது உறவு.

ஜகத்பதி அய்யரின் வீட்டினின்றும் முகாமைக் கிளப்பிக் கொண்டு நடராஜனின் குடும்பம் கிளம்ப நான்கு நாட்கள் தான் இருந்தன. தம்பிப் பாப்பாவை வைத்துக் கொண்டு, வாசலில் பூத்திருக்கும் பல புஷ்பங்களையும் செடிகளையும் பார்த்தவாறே, நின்றிருந்தாள் ராஜேசுவரி. சில செடிகளில் விதைகளையும், சிறு கன்றுகளையும் கேட்டு பெற்றுக் கொண்டு ஊருக்குப் போய்ப் பயிராக்க வேண்டும் என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்.

"பாருடி பாரு, நலங்கிட மாட்டேன்னு சொன்ன பெண் நிற்கிறாள் பாரு!"

குரல் கேட்டு, ராஜேசுவரி திடுக்குற்றுத் திரும்பினாள். வெளி வாசற் கதவின் கம்பிகளுக்கு அப்பால் தெருவில், ராஜேசுவரியைக் கூர்ந்து பார்த்த இரண்டு பெண்ணுருவங்கள், ஒரு தினுசாக சிரித்துக் கொண்டு தொடர்ந்தன.

யாரோ, தனக்கு அறிமுகமில்லாத யாரோ, தன்னைப் பற்றி ஏளனமாகப் பேசிக் கொண்டு சென்றார்கள் என்பதை ராஜேசுவரி உணர நேரமாகவில்லை.

"நான் புக்ககத்தில் நல்ல பெயர் எடுக்கணுமே என்று கவலைப்பட்டாயே அம்மா! புக்ககத்தில் மட்டும்தானா? புகுந்த ஊர் முழுதுமே என்னிடம் குறை காண்கிறது; நான் சமாளிக்க வேண்டும்!" என்று ராஜேசுவரி கண்ணீருடன் சிறிது நேரம் நின்றாள், வெளி வாசற் கதவருகு, கம்பிகளுக்கு வெளியே ரகுபதி வந்து நின்றான்.

'உள்ளே ஓடிவிடலாமா? சே, கதவைத் திறந்து விடாமல் ஓடக் கூடாது!'

அவள் கதவைத் திறந்து கொண்டிருந்தபோது ரகுபதி, "மாமா இருக்கிறாரா? என்று கேட்டான்.

"குளிக்கிறார்" என்று சொல்லிவிட்டு விரைந்து திரும்பி வீட்டுள் மறைந்து விட்ட மனைவியைக் கண்டு "அழுதாளா, என்ன?" என்று ரகுபதி யோசனையும், வருத்தமும் அடைந்தான்.

ஜகத்பதி அய்யரும், நடராஜனும் ரகுபதியை வரவேற்றுப் பேசிக் கொண்டிருந்தபோது ராஜேசுவரி அரையுங் குறையுமாக சில விஷயங்களை கிரகித்தாள் ஒரே இடத்தில் உட்கார்ந்து கவனிக்க அவளுடைய சங்கோசம் இடமளிக்கவில்லையே!

"உடுப்புகளுக்காகக் கொடுத்த தொகையில் மீதி இது; திரும்பித் தர வந்தேன்; வேண்டியது பெற்றுக் கொள்கிறேன்." என்று ரகுபதி, பல ஆட்சேபணைகளை ஒடுக்கிவிட்டு வற்புறுத்திக் கூறுவதைக் கண்டு உடர் பூரித்தாள்.

விசாலமும் மாப்பிள்ளைக்குக் காப்பி கொடுத்துவிட்டு நிற்கிறாள் என்பதை ராஜேசுவரி கவனித்துக் கொண்டே அந்த வழி போனாள்.

"எங்கள் அப்பாவின் பெருந்தன்மையைச் சொல்கிறீர்களே! அவருடைய பெருந்தன்மை எங்கள் அம்மாவின் பெருந்தன்மையில் பத்தில் ஒரு பங்குதான் மாமி! பத்து துரைசாமிகளை அழித்துப் பண்ணினால் தான் ஒரு சாரதாம்பாள் ஆகமுடியும். எங்கள் அம்மாவைப் போல் சாந்தமாக யாரும் இருக்க முடியாது."

"ஆமாம். நானும் அதைத்தான் சதா நினைத்துக் கொள்வேன். ஆச்சரியப்படுவேன். எங்கள் பெண் அதிர்ஷ்டசாலி!" விசாலம் இன்னும் என்ன பேசினாளே தெரியாது ராஜேசுவரிக்கு.

'அழிக்கிறதாமே! ஏன் இப்படி பேசுகிறார்! நல்லவார்த்தையாகப் போடக் கூடாது? இவருடைய அம்மா பக்தியில் நல்லது கெட்டது கூட தெரியவில்லை போலிருக்கு!' என்று யோசித்துக் கொண்டிருந்தாள் அவள்.

ஆனால், மனதில் ஆறுதல் உண்டாகியிருந்தது. 'மாமனாரைவிட மாமியார் நல்லவர் என்றால், என் அசட்டுத் தனத்தை மாமியாரும் மன்னித்துவிடுவார்.' அன்பும், உறுதியும் ஏற்பட்டது.

"அன்னையின் பாலே இத்தனை பக்தி உள்ளவர் இவர் கணவராக வாய்த்ததனால் நான் நிச்சயம் நல்ல நாட்டுப் பெண்ணாக விளங்குவேன். நடுநிலைமை வகிக்காத கணவனால் தான் குடும்பத்தில் சிக்கலும், மனைவிக்கும் தாய்க்கும் புரைசலும் ஏற்படும் என்று சொல்லுவார்கள். என் வாழ்க்கைத் துணைவர், என் நல்வாழ்வுக்கு சிறந்த துணைவர், நான் பிழைத்தேன்!" என்று ராஜேசுவரி கணவனைப் போற்றி மகிழ்ந்தாள்.

"ராஜேசுவரியுடன் ஏதாவது பேச வேண்டுமானால் பேசுங்கள். ஏதாவது சொல்லணுமென்றால் சொல்லுங்கள்!" என்று தந்தை கேட்டதையும், அதற்கு மறுமொழியாக, ரகுபதி, "நோ, நோ, நான் என்ன சொல்ல இருக்கிறது? நீங்கள் தான் ஊருக்குப் போகுமுன் அங்கே அகத்திற்கு வரப் போகிறீர்களே! என் பெற்றோர் சொல்லுவார்கள்" என்று உரைத்ததையும் ராஜேசுவரி செவியுற்று, "உள்ளத்துப் பண்பு எங்கே போகும்? ஊர்வலத்தன்று சூட்டும் பூட்டுமாகக் காட்சியளித்தவர், எத்தனைப் பணிவுடன் விளங்குகிறார்! புகைப்படம் எடுத்துக் கொள்ளப் போனபோதும் சூட்டும் பூட்சுமாக வந்தாரே, எத்தனைக் கனிவுடன் பார்த்தார்! உத்தம புருஷர் இவரன்றோ?" என்று இறுமாத்தாள்.

இதே இறுமாப்பும் ஆனந்தமும், மீண்டும் உண்டாயின புக்கத்தாரிடம் விடைபெற்றுப் புறப்படும் வேளையிலே.

நடராஜன் தம் குடும்பத்துடன் சம்மந்தி வீடு சென்றார்.

"பவானியின் பிரசவ சமயம் அனுப்பட்டுமா ராஜேசுவரியை?" என்று விசாலம் கேட்டதற்கு, சாரதாம்பாள், 'வேண்டாம், வேண்டாம். அப்படியெல்லாம் வழக்கமில்லை எங்களுக்கு," என்று சொன்னா_ள்.

துரைசாமி, நடராஜனைப் பார்த்து, "படிக்க வையுங்கள் மேலே. வெறுமனே இருப்பானேன் ஒரு வருஷம்?" என்று சொன்னபோது, நடராஜன் ரகுபதியைப் பார்க்க, சாரதாம்பாள் மெல்ல, "புருஷர்கள் அப்படித்தான் சொல்வார்கள்; நீங்கள் காரியம் பழக்கி வையுங்கள். சமையல்

தெரியாமல் புருஷனுக்குச் சமைத்துப் போட்டால் என்னமாயிருக்கும்? எங்கே வேலையாகுமோ என்னமோ?" என்று விசாலத்தினிடம் சொல்வது போல, பலரும் அறியச் சொன்னாள்.

நடராஜன், நன்றியுடன் சாரதாம்பாளைப் பார்த்து, "நானும் அதைத்தான் நினைத்தேன். வெறும் படிப்பு எதற்கு? வீட்டிலேயே கற்க வேண்டியதைக் கற்கட்டுமே, சமையல், தையல் வேலை, டைப்ரைட்டிங்க் எல்லாம் கற்றால், நல்ல இல்லாளாகத் தயாராகலாமே என்று தான் எண்ணினேன். இப்பொழுது கலியாணம் நடந்திராமல் அடுத்த வருஷம் நடப்பதாயிருந்தால் கூட, கல்லூரிப் படிப்பு படிக்க ராஜேசுவரியை அனுப்பும் எண்ணமில்லை எனக்கு. நான்தான் பார்க்கிறேனே தினமும்? காலேஜில் பெண்கள் கூசி கூசி நடக்கிறதையும், வெளியிலே வராமல் பயந்து உள்ளே புகுந்து நாலு சுவர்களுக்கு நடுவில் ஓய்வு வேளைகளை நரகமாக நினைப்பதையும் பார்க்கிறேனே? படித்தால் பெண்களுக்கான கல்லூரியில் படிப்பது நல்லது. சுதந்திரமாக பேசிச் சிரித்து, பயப்படாமல் டென்னிசும், பாட்மிண்டனும் ஆடி, பலவிதமாக வெளியுலகில் பழகலாம். அங்கேயோ, தனிக் காலேஜ் இல்லை. ராஜேசுவரியை காலேஜ்க்கு அனுப்பாமலேயே அவளுக்கு அறிவு வளர்ச்சியைக் கொடுப்பது தான் என் நோக்கம்" என்று நடராஜன் சொன்னபோது, அங்கே நிலவிய அமைதியும், அவருடைய பேச்சின் தோரணையும் அவர் ஒரு நல்லாசிரியர் என்று பறை சாற்றின.

துரைசாமி அய்யர் மெள்ளச் சிரித்து, "என் பிள்ளையின் இஷ்டம் எப்படியோ?" என்றார்.

ரகுபதி இப்பொழுது தான் குரல் எழுப்பினான். "அம்மா சொன்னதும், மாமா சொன்னதும் சரி என்று நினைக்கிறேன். இண்டர்மீடியெட் படிப்பு பெயருக்குத் தகுந்தாற் போல இரண்டுங்கெட்டான் படிப்புத்தான். பீ.ஏ.முடிக்காமல் இண்டர் படிப்பு அவசியமில்லை. வீட்டிலேயே இலக்கியப் புத்தகங்களைப் படித்தால் இங்கிலீஷ் அறிவு வளரும்" என்று ரகுபதி ராஜேசுவரியின் பக்கம் பாராமலேயே சொன்னபோது, ராஜேசுவரி மட்டும் கணவனையே தான் பார்த்தாள்.

"ஆங்கிலம் போல் அழகுமொழி உண்டா? தமிழை வேண்டுமானால் ஈடாக்கலாம், ஆனால் ஆங்கில மொழியின் சுவையை உயர்த்திக் காட்டும் இலக்கியப் புத்தகங்களைப் போல தமிழில் இல்லையே!" என்று தந்தை சொல்லக் கேட்டிருக்கிறாள் ராஜேசுவரி. கணவனும் ஆங்கில மொழிப் பற்றுடையவன் என்றுணர்ந்த ராஜேசுவரி, "ஆங்கில ஆட்சி முறையைத்தான் காந்திஜியும் அவர் பக்தர்களும் வெறுக்கிறார்கள்!" என்று ஒரு முறை நினைவு கூர்ந்தாள்.

## 10

ராஜேசுவரியின் கற்பனையிலே உலகம் இன்ப வேதனைகளின் உறைவிடமாகியது. காதற் கணவனின் ஆசைக் கடிதங்களைப் பெற்ற பொழுதெல்லாம் காதல் உலகிலே உலவும் ராஜேசுவரி, அவற்றுக்கு மறுமொழி விடுக்கும் பொழுதெல்லாம் கடமையுலகிலே உலாவினாள். தோழிகளுக்கும், கலியாணம் விசாரிக்க வரும் மற்றவர்களுக்கும் பட்டுப்புடவைகளையும், புகைப்படத்தையும் காட்ட அலுப்புச் சலிப்பில்லாமல் நடையாக நடந்தாள். "இங்கே கலியாணம் செய்யாமல் உங்கள் ஊருக்கு ஓடிப் போனீர்களே!" என்று அவர்கள் கேட்ட பொழுது ராஜேசுவரியின் இதயம் வேதனையினால் விம்மும். "இங்கேயே நடந்திருந்தால் எனக்கு ஒரு பொல்லாப்பும் வந்திராது!" என்று சொல்லத் துடிப்பாள். பாட்டு வாத்தியார் சர்மா கூட என்ன சொன்னார்? "ஏனம்மா, உங்கள் ஊரில் நீ பாட்டு விஷயமாகப் பெயரும் புகழும் அடைய வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேனே? வீணடித்துவிட்டாயே! என்று கேட்டாரே!

"ரொம்ப ரொம்ப சுருதியைக் குறைத்துக் கூட, பாட்டுப் பாட முடியாமல் கட்டிவிட்டது சார், தொண்டை சரியில்லை!" என்று ராஜேசுவரி கண்ணீர் மல்கச் சொன்னபோது, "ஐயோ, பெண்ணே! பாடி வழக்கமுள்ள சுருதியிலேயே நீ பாடியிருந்தால் தொண்டை சரியாகவேயிருந்திருக்கும்! திடீர் என்று இரண்டு கட்டையைக் குறைத்துவிட்டால் மட்டும் பாடி விடமுடியுமா? உனக்கு தொண்டைக் கோளாறு வந்தாலும், பாடும்போது கொஞ்சங் கூட தடங்கலில்லாமல் குரல் எழும்புமே! இத்தனை வருஷம், இத்தனை இடங்களில் பாடினாயே! இதை நீ தெரிந்து கொள்ளவில்லையா? நீ சுருதியைக் குறைப்பாய் என்று நான் கண்டேனா?" என்று வாத்தியார் கேட்டபொழுது ராஜேசுவரி திகைத்துப் போனாள்.

"அப்படியா சமாசாரம்! ஐயோ, அசட்டுத் தனம் செய்துவிட்டேன். புக்ககம் போனால்,

புக்கத்தூரில் யார் எப்பொழுது பாடச் சொன்னாலும், உடனே பாட வேண்டும். பிசுக்காரம், பிகு, விம்பு, ராங்கி என்று பிறர் கூறும்படி வைத்துக் கொள்ளக் கூடாது. எனக்குள்ள வீண் கூச்சமும், பீதியும், இந்தப் பாட்டுப் பீதியினால் தான்; பாட்டுப் பீதி போனால் மற்ற விஷயங்களிலே எனக்கு அனாவசியக் கவலைகள் எழா; சகஜபாவம் ஏற்படும்" என்று மனம் தெளிந்தாள் அவள்.

சுருதிப் பெட்டி வேண்டும் என்று நச்சரித்து, இரண்டு முக்கியமான சுருதிகளடங்கிய சிறு பெட்டி ஒன்று வாங்கிக் கொண்டாள் ராஜேசுவரி. வாத்தியாரின் பக்கபலமின்றி, சுருதிப் பெட்டியின் ஆதரவுடன் சுதந்திரமாகப் பாடப் பழகினாள்.

ராஜேசுவரியின் நினைவிலே குடிகொண்ட ரகுபதி, பலவிதத் தோற்றங்களில் அவளை ஆட்கொண்டான். சிரிப்பான், சிரிக்க வைப்பான், கொஞ்சிப் பேசுவான், அதட்டி மிரட்டுவான், புகழ்வான், குறும்புத்தனமாக ஏளனம் செய்வான், அன்பு வழங்குவான், அன்பு ஏற்பான்; எல்லா இன்பங்களும் அள்ளி வீசுவான்.

ஆனால், ராஜேசுவரி பேராசைப்படவில்லை; இன்முகமும், மென் சொல்லும் உருவான மனைவியாகவே அவள் தன்னையும் உருவாக்கினாள். புடவைப் பித்தும், நகைப் பற்றுமுள்ள மனைவியாக இருக்கக் கூடாது; தேவைக்குத் தகுந்த ஆடைகளுடனும், அவசியமான சில அணிகலன்களுடனும், எளிமையும் ஆத்ம திருப்தியும் கொண்டு, புருஷனைப் பெருமைப்படுத்தும் இல்லாளாக விளங்க வேண்டும்; கதைகளில் எழுதியிருப்பது போல நடந்து கொள்ளக் கூடாது; அற்ப விஷயங்களுக்காக கணவனை நோக வைக்கக்கூடாது. மாமியார் மறுமகள் வேற்றுமைகள் எழக் கூடாது. பொல்லாத நாட்டுப் பெண் என்று பொல்லாப்புக்கு இலக்காகக் கூடாது.

ராஜேசுவரியின் உள்ளத்திலே உருவாகியிருந்த வருங்காலத் திட்டம், "நல்ல பெயர் எடுத்து, பிறந்தகமும் புக்ககமும் பெருமை கொள்ளும்படி வாழ வேண்டும்" என்னும் உறுதி. அவளுடைய இதயத்திலே ஆழப் பதிந்திருந்த வருத்தம், "பொல்லாப்புக்கு இலக்காகும்படி அமைந்துவிட்டதே கூச்சம்?" என்னும் திகைப்பு. அந்த இளம் பெண்ணின் மனதிலே ஓங்கியிருந்த உவகை, "கணவரும் கணவரின் உறவினரும் உத்தமர்கள்!" என்னும் ஆறுதல்.

சிறுசிறு விஷயங்கள் தாம் பெரிய பெரிய விளைவுகளுக்கு அடித்தளம். அவளுடைய சிறு பிழை, பெரிய புரளியை எழுப்பியது! அது போலவே, அவளுடைய இங்கிதமான சிறு செயல்களும் முயற்சிகளும் அவளுக்கு மாபெரும் வெற்றியளிக்கலாமே! ராஜேசுவரிக்கும் அந்த நம்பிக்கைதான் இருந்தது. உடம்பு வணங்க வேண்டும், மனசு தழைய வேண்டும். மாமியார் 'ராஜேசுவரி' என்று அழைத்தால், 'வந்து விட்டேன், வருகிறேன்!" என்று சொல்லும்படி இருக்கக் கூடாது. 'வந்தேன், வந்து கொண்டிருக்கறேனம்மா!" என்று சொல்ல வேண்டும், செய்ய வேண்டும். கணவனுக்கும், மனைவிக்குமிடையே அலுப்பு ஏற்படுகிறதெல்லாம், புடவை, நகை போன்ற அற்ப விஷயங்களிலே தான்! அதனால் புடவைப் பித்தும், நகை வெறியும் வளரும்படி சபலத்திற்கு இடங் கொடுக்கக் கூடாது. அம்மாவைப் போல் இருக்க வேண்டும். அப்பா, அம்மாவை ஒரு நாளாவது "எதற்கு வாங்க வேண்டும்?" என்று கேட்டாரா? அம்மா அனாவசியமாக வாங்க மாட்டாளே!

ராஜேசுவரி புன்னகைத்தாள்; ஒரு சுவையான சம்பவம் நினைவில் எழுந்தது.

ராஜேசுவரி சிற்றாடைக் கட்டத் தொடங்கிய புதுமை அது. மேலாக்குகள் அணிவதைத் குறைத்துக் கொண்டு, புடவைகளை உடுத்த விரும்பினாள் ராஜேசுவரி. விசாலம், இருபத்து நான்கு ரூபாய்க்கு அரை டஜன் புடவைகள் வாங்கி விட்டாள். 'பேஷ், பேஷ்' என்றார் தந்தை. ஒரு மாதத்திற்குள் மீண்டும் இரண்டு புடவைகள் ஆறு ரூபாய்க்கு வாங்கினாள் விசாலம்.

வசந்த புஷ்பம் போன்று புதுச் சேலை உடுத்தி ராஜம் தந்தையை வணங்க வந்தாள். இதற்கு முன்பு பல நமஸ்காரங்களை ஏற்றிருந்த அலுப்புப் போலும் அவருக்கு; அல்லது 'புடவை மோகம் வளர்ந்துவிடும்,' என்ற அச்சமோ? "எத்தனாவது புடவை இது?" என்று கேட்டார் சிரித்து. "எட்டாவது" என்றாள் ராஜேசுவரி, காலடியில் தலை வைத்து வணங்கினாள்.

"புடவை மோகம் ஒழிக!" என்று ஆசி கூறினார் நடராஜன்.

ஓடியே போனாள் ராஜேசுவரி. "புடவையிலும், நகையிலும் செலுத்தும் நேரம் வீண்!" என்று நினைப்பவர் தந்தை என்று தெரியும் அவளுக்கு. 'எட்டுப் புடவை என்றால் அதிகம்தான்' என்று குன்றினாள் அவள்.

"அப்பா சொன்னது சரி" என்று வருத்தமுடன் ஏற்ற அவள், தன் தாயின் குரலைச் செவியுற்றாள். "இப்படியா ஆசீர்வாதம் செய்வார்கள்? புதுசாய்ப் புடவை கட்டுகிறாள், என்னமோ ஆசைப்படுகிறாளே என்று வாங்கினேன். புதுசு கட்டிக் கொண்டு, நமஸ்காரம் பண்ண வந்தாளே, அது தான் தப்பாகிவிட்டது! நமஸ்காரம் பண்ண அவள் வராவிட்டால், இப்படி ஆசீர்வாதமும் செய்ய வேண்டியிராது. நல்லதுக்குத்தான் காலமில்லையே!" என்று அன்னை கேட்டதற்கு, தந்தை, கொஞ்சம் சிரித்துவிட்டு, பிறகு குரலில் தளர்ச்சியுடன், "புடவை மோகம் ஒழிக! என்று நான் சொன்னதில் தவறு என்ன? புடவை ஆசையே இல்லாமல், ஆசையெல்லாம் தீர்ந்து விடும்படி, அலுக்க அலுக்கப் புடவைகள் கிடைக்கட்டும் என்றுதான் நா_ன் சொன்னேன்!" என்றார்.

விசாலத்தின் முகமலர்ச்சியைப் பார்க்க வேண்டுமே! "அசட்டுப் பிசட்டு என்று சொல்லிவிட்டாலும், கெட்டிக்காரத் தனமாகச் சமாளிக்கத் தெரிகிறது. நல்லவேளை, இப்படி ஒரு நல்ல அர்த்தம் இருக்கிற வார்த்தையாக வாயில் வந்ததே!" என்று சொன்னாள். ராஜேசுவரியும் சிரித்துக் கொண்டே வந்ததைப் பார்த்து, "பார்த்தாயா, அப்பா சாமர்த்தியம்?" என்று சந்தோஷமுடன் கேட்டாள்.

"வர வர ஔவையார் சொன்ன மாதிரி பேசுகிறார் அப்பா!" என்று ராஜேசுவரி பதிலளித்தாள்.

நன்றிப் பார்வை பார்த்தார் நடராஜன்!

இந்தச் சம்பவம் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு நடந்தது. ஆனால், இப்பொழுது நினைத்தாலும் ராஜேசுவரிக்குப் புதுமையாகவே தோன்றியது. "ஆம், பெண் குலத்திற்கே இழுக்கு செய்யும் வெறிகள் நகை வெறியும், புடவை வெறியும் தான். கூடாது, கணவரின் மதிப்பை என்றுமே இழக்கக்கூடாது. இதோ, ஒன்பது பட்டுப் புடவைகள் இருக்கின்றன. பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு மேல் உடுத்தலாம். நூற்புடவைகள் அவசியமான போது வாங்கினால் போதும். நகைகள் இவையே போதும். இசையறிவும், கல்வியறிவும், அடக்கமும் அன்பும் வளரவே பாடு படவேண்டும்" என்று ராஜேசுவரி ஆர்வத்தை வளர்ந்து வந்தாள். இளம் உள்ளங்களிலே எழும் நல்லெண்ணங்களுக்கு ஈடு உண்டோ?

நடராஜன் ரகுபதியை ஆடிப் பண்டிகைக்கு அழைக்கவில்லை. "அசட்டுத் தனமாக அழைக்க மாட்டேன். தீபாவளிக்கு வரப் பார்க்கிறேன் என்று மாப்பிள்ளை சொன்னார். அதனால் தீபாவளிக்குத் தான் வருவார், வற்புறுத்திக் கூப்பிட்டாலும்!" என்று அவர் சொல்லிவிட்டார். ரகுபதிக்கு வேலை விஷயமாக பேட்டி அழைப்புகள் வரவில்லை. அதனால் வடக்கே கிளம்ப சந்தர்ப்பமும் ஏற்படவில்லை.

## 11

பவானி மகப்பேறு பெற்றாள். பெண் குழந்தை பிறந்த சங்கதியைக் கேட்டு ராஜேசுவரி ஆசையாக வாழ்த்துக் கடிதம் எழுதினாள். "மகவைப் பார்க்க வெகு ஆவலாக இருக்கிறது!" என்று அவள் எழுதியபோது மேலுக்கு எழுதவில்லை. குழந்தைகள் என்றாலே அவளுக்கு ஆசை அதிகம்.

தீபாவளி நெருங்கிய சமயம், ராஜேசுவரியின் உற்சாகம் பெருகியது.

தீபாவளியின் பொழுது பவானியும் தன் கணவனுடன் இருக்க விரும்பினாள். அவளும் இளம் பெண்ணல்லவா? இளம் பெண், இளம் தாய், கையிலே இள மகவு. தொலை தூரம் வர லீவு கிடைக்காது கணவருக்கு. லீவு எடுத்துக் கொண்டு வந்தாலும் பிரயோசனமில்லை என்று தோன்றவே ஒரு யோசனை சொன்னாள்.

"ஆம், சத்யமூர்த்தி வந்தால் எனக்கு நல்ல பேச்சுத் துணையாவார்! அந்தத் தெலுங்கு தேசத்தில் எனக்குப் பொழுது போக வேண்டாமா?" என்று ரகுபதியும் உற்சாகமாக ஆமோதித்தான்.

"ஏன் அண்ணா, மன்னி இல்லையாக்கும்! ரொம்பத்தான் வேஷம் போடாதே!"

"ஏண்டியம்மா, உன் புருஷனை உன்னோடு பேசிக் கொண்டிருக்க விடமாட்டேனே என்று

கவலையாக்கும்! அதெல்லாம் கல்கத்தா போய் நீ வேணது பேசலாம்! தீபாவளியின்போது நீயும், மன்னியும் தான் பேசு பேசு என்று பேச வேண்டும், நான் சொல்லிவிட்டேன்!

அண்ணனும் தங்கையும் பேசிக் கொள்வதை ரசித்த துரைசாமி மனைவியைப் பார்த்துச் சிரித்து, "உம், இந்தத் தீபாவளி நமக்குத் தனித் தீபாவளி!" என்றார். "கவலைப் பட வேண்டாம், நம்மகத்திற்கு யாராவது உறவினர்கள் வந்துவிடுவார்கள்! எப்பொழுதாவது நீங்களும் நானும் தனியாக இருந்ததுண்டா என்ன?" என்று கேட்டு அவருடைய சிரிப்பை ஒடுக்கிவிட்டாள் தர்மாம்பாள்!

சம்மந்திகளின் வீட்டில் பெண்ணும் பிள்ளையும் தீபாவளிக் கொண்டாடும் விமரிசையைக் கடிதமூலம் சாரதாம்பாள் கேட்கத் தயாரானாள்.

"பவானியும் வரப் போகிறாள்! ஜோர்! ஜோடியாக ஒரே தினுசுப் புடவையுடுத்தி, நண்பர் வீடுகளுக்குப் போய் வர வேண்டும். இருவரும் சேர்ந்து பாட்டுப் பாடி ஜமாய்க்க வேண்டும். பயந்து கூசாமல் கலகலப்பாகப் பழக வேண்டும் . . . " இப்படியெல்லாம் சந்தோஷபட்ட ராஜேசுவரிக்கு ஒரே ஒரு கவலைதான் இருந்தது.

ராஜேசுவரியின் திருமணம் நடந்த மறுநாளே, உறவினர்கள் பலர் இருக்கும் பொழுதே, பவானிக்குப் பூச்சூட்டல் நடந்தது; வளையெடுக்கும் வைபவம் நிகழ்ந்தது. அப்போதும் ராஜேசுவரி பவானியை 'மாமி, மாமி' என்று தான் அழைத்தாள். பவானி சற்று கண்டிப்பு தொனிக்க "நேற்று கூரைப் புடவை உடுத்தும் போதே, 'மாமி' 'வாமி' எல்லாம் விட்டுவிடு, 'அக்கா' என்று கூப்பிடு என்று சொன்னேனே! எத்தனை தடவை சொல்லவேண்டும் என்று எதிர்பார்க்கிறாய்?" என்று கேட்டுவிட்டு, சிரமப்பட்டு ஒரு புன்னகை செய்தாள்.

"இத்தனை நாளும் கடிதங்களில் 'அக்கா' என்று எழுதிவிட்டேன். ஆனால் எதிரில் அப்படிக் கூப்பிட நா எழுமா எனக்கு?" என்று ராஜம் கவலைப் பட்டாள்.

"மாமி என்று கூப்பிட்டால் அயலார் போலத் தோன்றும். 'அக்கா' என்று தான் கூப்பிடவேண்டும்" என்று நிச்சயம் செய்து கொண்ட ராஜேசுவரி, தன் நா பழக வேண்டுமென்ற எண்ணமுடன், சீதம்மாளிடம் பேசும் பொழுது, 'அக்காவும் குழந்தையும் வரப்போகிறார்கள்' என்று குறிப்பிட்டாள். அடுத்தகத்து சீதம்மா, திகைப்புடன் "அது யார் அக்கா?" என்று கேட்டாள்.

"என் நாத்தனார். நாங்கள் அப்படித்தான் கூப்பிடுவோம்."

"மாமியாரை என்னவென்று கூப்பிடுவீர்கள்?"

"அம்மா என்று அழைக்கிறது வழக்கம்!"

"என்ன அம்மாவா? புருஷனும் பெண்டாட்டியும் அண்ணா, தங்கை முறையென்ற அர்த்தமா? இதென்ன அசட்டுத் தனம்?"

ராஜேசுவரிக்கும் குழப்பமாகத்தான் இருந்தது. வீட்டிற்கு வந்த பிறகு "எப்படியோ தான் இருக்கு! இதென்னம்மா இப்படி ஒரு வழக்கம் நமக்கு?" என்று கேட்டாள். இன்னும் பலரும் கேட்டால் எப்படிச் சமாளிப்பது என்ற அச்சம் அவளுக்கு!

விசாலம் தாமதிக்காமல் விடை பகர்ந்தாள். "கணவனும் மனைவியும் ஒருவரேதான், வேற்றுமை இல்லை என்று அர்த்தம். புருஷனுடைய அம்மா, மனைவிக்கும் அம்மா! கணவனோடு ஐக்கியப்பட்டுவிடுகிறாள் மனைவி என்று அழகான அர்த்தம்! பவானி, நம் மாப்பிள்ளைக்குத் தங்கைதான். ஆனால் நீ பெயர் சொல்லி அழைத்தால் நன்றாயிராது பார்! வயதில் சின்னவள் நீ. அதனால் அக்கா என்று அழைக்கிறது தான் சரி" என்று அன்னை இள முறுவலுடன் விளக்கியதும் ராஜேசுவரி "ஆஹா, அழகே அழகு இந்த விளக்கம்! எத்தனை உயர்ந்த கருத்து! 'கணவனும் மனைவியும் வேறு வேறு என்ற எண்ணமே எழாதவாறு அமைந்த அழைப்பு'! கிடைத்தது எனக்கு எதிர்ப் பதில்! தமிழ் மரபு எத்தகையது என்பதை விளக்குவேன், இனிமேல் யாராவது கேலியாகக் கேட்டால்!" என்று நினைத்தாள்.

"வஸ்தாடே, மா பாவ!" என்று பாடினான், பெரிய தம்பி. ராதை, "அத்திம்பேர் அக்கா கழுத்தில் மாலை போடுவாரே!" என்று சொல்லிச் சொல்லி ஆரவாரித்தாள்.

"வஸ்தாடே என்ன? வஸ்தாரே என்று மரியாதையாகப் பாடு" என்று அதட்டணுமென்று ராஜேசுவரி எண்ணினாள்.

"ஏம்பா, அத்திம்பேர் என்று பெரிய பெயரா இருக்கே? 'பாவ' என்று தெலுங்கில் சின்னப் பெயராக இருக்கே! தம்பிப் பாப்பா 'பாப' என்று சொல்லுகிறது! அதுக்கு அத்திம்பேர் என்று சொல்லத் தெரியல்லைப்பா!" என்று வருத்தப்பட்டான் பெரிய தம்பி மணி.

ராஜேசுவரி தந்தையின் மறுமொழிக்காக எட்டி நின்றாள்.

"நீயும் 'பாவ' என்று கூப்பிடேன்! பாப்பாவும் அப்படியே கூப்பிடட்டுமே!" என சிரித்தார் நடராஜன்.

"அத்தான் என்று கூப்பிடலாம் அப்பா! பாப்பா, 'அத்தா, அத்தா' என்று சொல்கிறது! தெலுங்கிலே அத்திம்பேருக்கும், அத்தானுக்கும் 'பாவா' தான்!"

"உம், கூப்பிடு! எல்லாம் சரிதான். முந்தியெல்லாம் சாதாரணமாக அத்தான் தான் அம்மங்காளைக் கலியாணம் செய்து கொள்கிறது வழக்கம். அம்மாஞ்சிகள் அத்தான், என்று கூப்பிடும், அக்கா புருஷனும், தங்கை புருஷனும் கூட அத்தானாகவேதான் இருப்பார்கள்! அத்திம்பேர் என்று கூப்பிட கஷ்டமானால் அத்தான் என்றே கூப்பிடுங்களேன்!" என்றார் நடராஜன்.

ராஜேசுவரிக்கும் இந்தப் பேச்சில் கலந்து கொள்ள ஆசையாயிருந்தது.

"ஏனப்பா! அத்தை-அத்திம்பேர் என்று சொல்கிறோமே! அத்தைபிள்ளை அத்தான்! அப்பொழுது அத்தானுடைய அப்பா அத்திம்பேர் கூட 'பாவா' தானா? இது தப்பில்லையா?" என்று கேட்டாள்.

"ஓ, ஆமாம், சரிதான். மணி, நம் தமிழ்ப் பெயர் தான் சரி, மாற்ற வேண்டாம்!"

"மணிக்குப் பிடிக்காத மாதிரிதான் எனக்கும் பிடிக்கவில்லை அப்பா! அத்திம்பேர் . . . "

"ஏன், நல்ல வார்த்தையே அது! 'அத்தி' என்றால் அக்காள். அத்தி இன்பர், அத்திம்பேர். அத்தை இன்பர் அத்திம்பேர்! சரியாயிருக்கே!"

"இன்பர் என்றால் என்னப்பா?" மணியின் இந்தக் கேள்விக்குப் பயந்து ராஜேசுவரி அப்பாலே போய்விட்டாள்.

அதைக் கவனிக்காதவர் போல நடராஜன், "தமிழில் எத்தனை நல்ல அர்த்தங்கள், அழகான வார்த்தைகள்? கணவர் என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? விசாலம், நீயும் கேட்டுவிட்டுப் போ!"

"ஆம்படையான்!" என்று மணி கூவினான்.

"கண்-அவன், கணவன். கண்-அவர், கணவர். தெரிந்ததா? கணவன் கண்ணாம்! கண்ணில்லாமல் எத்தனை துன்பங்களுண்டாகும்! கண் இருப்பதனால் நாம் எத்தனை சந்தோஷங்கள் அனுபவிக்கிறோம்!"

விசாலம் சொன்னாள். "எங்கம்மா கண் பார்வை மங்கி, நடக்கத் தடுமாறுவதைப் பார்த்தால், நமக்கு ஏன் கண் இருக்கிறது என்று தோன்றுகிறது! கண்றாவிக் காட்சியாயிருக்கு!" என்றாள். அவள் கண்கள் கலங்கத் தொடங்கின.

"உங்கம்மா சொல்வாளே, விசாலம்! 'தீமா' யிருக்கு என்று. அதன் அர்த்தம் 'திவ்வியமாக இருக்கிறது!' தெரியுமா? மணி, கேள். பாட்டி, 'தேமேன்னு இருக்கேன்' என்பாளே, அதற்கு என்ன அர்த்தம்?"

"தெரியாது அப்பா, சொல்லேன்!"

"தெய்வமே என்று கடவுளை நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்று அர்த்தம்!"

"அப்பா, அப்பா, இன்னும் சொல்லு அப்பா!"

"இருக்கட்டும், சில வார்த்தைகளை யோசித்து நினைவுபடுத்திக் கொண்டு, அப்புறம் சாப்பிடுகிறபோது சொல்கிறேன்!"

மணி நச்சரிக்கவில்லை. நடராஜன் சொற்படி நடப்பவராயிற்றே? சாப்பிடும் சமயம் தான்,

குடும்பத்தினர் அனைவரும் ஒன்று கூடும் சமயம் என்பது அவர் கருத்து. அர்த்த சந்திர வடிவமாக இலைகளைப் போட்டு, எல்லோரையும் அமர்த்தி, தயாரான உண்டிகளுடன் விசாலம் அருகே அமர்ந்து, அன்னம் பரிமாறச் செய்வார் அவர். நடைகள் நடக்காமல், சௌகரியமாகவும், சந்தோஷமாகவும் மனைவி, அன்னம் படைக்க, சந்தோஷமுடன் மக்களுடன் பேசியவாறு உணவருந்துவார் அவர்.

"பேச்சு சுவாரஸ்யத்திலே எனக்கும் பரிமாறத் தடுமாறுகிறது! நீங்களும், எது உப்பு, எது சப்பு என்று பார்க்காமல் விழுங்குகிறீர்கள். குழந்தைகளும் இலையில் கவனமில்லாமல் சாப்பிடுகிறார்கள். கொஞ்சம் ருசிப் பார்த்துச் சாப்பிடக் கூடாதா? பேச்சு அப்புறம் ஆகட்டுமே!" என்று விசாலம் சில சமயம் சொல்லுவாள். அவர் கூறும் பதில் என்ன? "இதுதான் சாப்பிடும் முறை. கலத்திலேயே கவனமாயிருப்பது பெருமையா? சந்தோஷமாகச் சாப்பிட்டால், எது சாப்பிட்டாலும் உடம்பில் ஒட்டும். நான் தினமும் காலையில் பேப்பர் படிக்கும்போதும், மாலையில் காலேஜிலிருந்து வரும்பொழுதும் என்ன யோசிப்பேன் தெரியுமா? சாப்பிடும் சமயம் குழந்தைகளுக்குச் சொல்லக் கூடிய சுவையான விஷயங்கள் என்ன அகப்பட்டன என்று யோசித்து வைத்துக் கொள்ளுவேன். நான் ' சாப்பாட்டுராமன்' என்று யாராவது சொன்னால் சொல்லட்டும்! இந்தச் சாப்பாட்டு நேரம் தான், நான் ஆவலோடு எதிர் பார்க்கும் நேரம் தெரியுமா?" என்றார் அவர்.

## 12

தொலைவில் ரயிலின் ஊதலொலியைச் செவி கொடுத்துக் கேட்டு, பிறகு பெட்டி படுக்கைகளை ஏற்றச் சாரிசாரியாகச் செல்லும் வண்டிகளையும் கண்ணுற்று, இரண்டு வண்டிகள் வாசலில் வந்து நின்ற சமயத்திலே, உள்ளே பதுங்கி நின்றாள் ராஜேசுவரி.

முதலில் உள்ளே ரகுபதி வந்தான், தோற்பையுடன். பிறகு கையிலே குழந்தை ஏந்திய வண்ணம் பவானி வந்தாள். வரவேற்ற விசாலத்துடன் பவானி பின் கட்டில் நுழைந்ததும் ராஜேசுவரி, "அக்கா, வாங்கோ!" என்றழைத்து, தன்னுடைய உறுதியின் வெற்றியைக் கண்டுவிட்டாள்.

அந்த அழைப்பின் சக்தி, பவானியை ஒரு கூர்ந்த பார்வை பார்க்கத் தூண்டியது.

"பாப்பாவைத் தாங்கோ, அக்கா! பேர் சித்ரா இல்லை? 'சித்ரு'ன்னு கூப்பிடட்டுமா?" என்று கேட்டுக் கொண்டே, பவானியிடமிருந்த மகவை சுவாதீனமாக எடுத்துக் கொண்டாள்.

"மெள்ள, மெள்ள, தலை சுளுக்கப் போகிறது. எனக்குப் பயமம்மா!"

"இல்லை அக்கா, ஜாக்கிரதையாய் எடுத்துக் கொள்வேன்."

விசாலமும், பவானியுடன், "குழந்தைகளை எடுத்து நல்ல பழக்கம் தான் அவளுக்கு!" என்று சிரித்தாள்.

அத்திம்பேரிடம் உரிமை கொண்டாடிக் கொண்டு, அவரைச் சூழ்ந்து கொண்டனர் மணியும், கணியும், ராதையும்.

"டேடே, வாட்ச் உடையும்!" என்று கணவன் தன் தம்பிகளில் யாரையோ அதட்டுவதைக் கண்டு சற்று அறைப்பக்கம் நின்று, "கணி, மணி, வாங்கோ இந்தண்ண . . . நன்னாருக்கு விஷமம்!" என்று அதட்டி அழைத்தாள். அத்திம்பேரின் அதட்டலினால் மிரண்டிருந்த சிறுவர்கள், அக்காவின் அழைப்பிற்கு அடி பணிந்துவிட்டனர்.

பவானியுடன் வெகு நெருங்கிப் பழகி, தோழமையை அன்புடன் பிணைத்துச் சந்தோஷமாகப் பொழுது போக்க எண்ணியிருந்த ராஜேசுவரிக்கு, பவானியைக் கண்ட பின், ஏனோ தயக்கமும் பீதியும் உண்டாயின. பவானியின் தோற்றத்திலே ஒருவித வேற்றுமையும், ஒரு வித உரிமையும், நீரும் எண்ணெயும் கலந்தாற் போல் மிளிர்ந்தது. நலங்கு சம்பவம் பற்றி கணவன் மன்னித்துவிட்டது போல பவானி மன்னிக்கவில்லையோ என்று அஞ்சினாள் அவள். பவானி, ஆதரவு காட்டுகிறவளாகத் தோன்றவில்லை என்று ராஜேசுவரி சஞ்சலப்பட்டா_ள்.

பவானியின் நன்மதிப்பிற்கும், கணவனின் அன்பிற்கும் தான் மட்டுமல்லாமல், தன்னைச்

சார்ந்தவர்கள் எல்லோருமே ஆளாக வேண்டுமென்பது ராஜேசுவரியின் அவா. தன் தங்கையையும் தம்பிகளையும் அழைத்துக் குளிக்கச் செய்து உடை எடுத்துத் தந்து தலை வாரினாள். குளிருக்கு வறண்டிருந்த அவர்களுடைய கால், கைகளை எண்ணெய் பூசி பதப்படுத்தினாள். தன்னையும் கவனித்துக் கொண்டாள், பவானியையே ஒண்டிக் கொண்டாள். பவானியிட்ட சிறு சிறு பணிகளை உற்சாகமுடன் செய்தாள். பவானி, "சீப்பும், சோப்புப் பெட்டியும் எடுத்து வா" என கட்டளையிட்டபொழுது, ராஜேசுவரி சிறிது தயங்கினாள். "இப்படிக் கூச்சப்பட்டால் எங்கண்ணாவிற்குப் பிடிக்காது" என்று பவானி சொன்னதும் அசட்டுச் சிரிப்புச் சிரித்தபடி, விருந்தினர் அறைக்குள் சென்றாள். இரண்டு சோப்பு பெட்டி, இரண்டு சீப்பு, இரண்டு தைலப் புட்டிகள் இருந்ததைக் கண்டு விழித்தாள். ஒரே சீப்பு, ஒரே சோப்புப் பெட்டி, ஒரே தைலப்புட்டி தான் நடராஜனின் குடும்பத்திற்கு.

தன்னுடையவைகளை எடுத்துக் கொண்டு மற்றவைகளைக் கொண்டு வைக்கும்படி பவானி சொன்னபோது, ராஜேசுவரி "நீங்கள் பின்னிக் கொண்டப்புறம் இரண்டையும் வைத்து விடுகிறேனே!" என்றாள். ஹாலில் 'ஹிந்து' பத்திரிக்கை படிக்கும் கணவன், 'அடிக்கடி ஏன் போகிறாள் அறைக்குள்?' என்று சிரிப்பானோ என்ற வெட்கம்! எத்தனைதான் கடிதங்கள் மூலம் பேசிக் கொண்டாலும், அவளுக்கு ரகுபதியிடம் சகஜபாவம் தோன்றவில்லை. "இவருக்கா நான் அத்தனை கடிதங்கள் எழுதினேன்? இவரா எனக்கு அத்தனை எழுதினார்?" என்ற ஒரு வியப்பும், மலைப்பும் தோன்றிக் கொண்டே இருந்தன. ஆனால் ராஜேசுவரியின் தயக்கம் பவானிக்குப் புரியவில்லை.

"அப்புறம் வைக்கிறதா? அண்ணாவிற்குக் கோபம் வந்துவிடும்! தன் சீப்பு ஏன் இங்கே வந்தது என்று என்னைத்தான் அவன் மிரட்டுவான். எல்லாம் ஒழுங்காக, 'நீட்'டாக அந்தந்த இடத்தில் இருக்கணும் அவனுக்கு! நானே போய் வைத்துவிடுகிறேன்," என்று விரிந்த கூந்தலுடன் பவானி எழ முயற்சித்ததும், ராஜேசுவரி பரபரப்புடன், "நானே கொண்டு போய் வைக்கிறேன் அக்கா," என்று எழுந்துவிட்டாள். 'பவானியை எழும்படி செய்வதா' என்று தான் அந்தப் பதட்டம்! 'பின்னிக் கொண்டே நடக்க மாட்டேன், வாரிக்கொண்டே அலைய மாட்டேன், மயிர்விழும், சாப்பாட்டில் அகப்படும். அகப்பட்டால் அப்படியே எழுந்துவிடுவேன்," என்று சொல்லிவிட்டு தானே, சீப்பு, தைலமும் எடுத்து வர ராஜேசுவரியை ஏவினாள், பவானி? சாப்பிடாமல், எழுந்துவிட்டால், அதைவிட வருத்தந்தரும் விஷயம் வேறு உண்டா என்று தான் ராஜேசுவரிக்கு எண்ணம்! "உண்ணா விரதம் இருக்கப் போகிறேன், இப்படிச் சண்டை பிடித்துக் கொள்வார்களா அக்காளும், தம்பியும்? நீங்கள் சமர்த்தா இல்லா விட்டாள், சாப்பிடப் போகிறதில்லை நான்!" என்று எத்தனை தடவை ஆணித்தரமாக புத்தி புகட்டியிருக்கிறார் நடராஜன்!

தொலைவில் திசைரியுடன் நிற்கும் கணவன் தன்னைக் கவனிக்கிறான் என்பதைக் கண்டதும் ராஜேசுவரி கூசிக் கூசி அறைக்குள் சென்று அவசரவசரமாக வெளியேறினாள். 'அத்திம்பேர் கோவிச்சுண்டாரம்மா! நான் அவருடைய மேஜை கிட்டவே போகக் கூடாதாம்! ஏன் வரணும் அத்திம்பேர்!" என்று ராதை கேட்டதும், அருகில் பவானியில்லையே என்று ஆறுதல் பெற்று, ராதையை பார்த்து, "நானும் அடிப்பேன், மேஜை கிட்டப் போனால்!" என்று தான் மிரட்டியதையும் எண்ணியவாறே, ராஜேசுவரி வந்தாள். ஒரு தடவை திரும்பிப் பார்த்தாள். ரகுபதி கொட்ட கொட்டப் பார்க்கிறான் அவளை இன்னும்!

கோபமா? தாபமா?

பொன்னிற மேனியிலே வெண்ணெய் பூசிப் புழுதியில் அலைந்தாடி வந்தக் கண்ணனை மார்புறத் தழுவி மகிழும் ஆற்றல் யசோதைக்கு இருந்தது. கண்ணனைச் சூழ்ந்திருந்த பலருக்கு அந்த ஆசை இருந்தது. கண்ணனின் அம்சம் குழந்தைகள் என்ற எண்ணமுடையவர்களுக்கு அன்றும், இன்றும், என்றும் அந்த ஆர்வம் உண்டு. புழுதியில் விளையாடும் குழந்தையிடமும், கந்தலுடுத்த குழந்தையிடமும் கூட அழகும் கவர்ச்சியும் காணும் கண்கள் படைத்தவர்கள் எந்தக் காலத்திலும் உண்டு. விசாலமும், நடராஜனும், ராஜேசுவரியும், மணியும், கணியும், ராதையும் குழந்தைகளைக் கண்டால் மகிழ்ந்து போவார்கள். அவர்களுடைய ஆசைகளையும், அன்பூற்றினையும் வற்றாமல் செய்ய இப்பொழுது கண்ணன் இருக்கிறான். சித்ரா வந்ததும் கண்ணன் கூட பெரியவனாகிவிட்டான். சித்ராவை அவள் ஆசையாகப் பார்த்தான்! ஆனால்

ரகுபதியும் பவானியும் குழந்தைகளைப் பார்த்த பார்வை வேறு.

"மாமி, பாப்பாவை என் மடியிலே வை!" என்று கணி பவானியிடம் போய்விட்டான். பவானி அதைக் கவனிக்கவே இல்லை. ராதை பாப்பாவின் கை விரல்ளை நெருடினாள். தத்தி நடக்கும் கண்ணன் கிட்டே வந்து, 'அத்தா' என்று கை வீசி, சித்ராவை நெடிது நோக்கினான். பவானி அந்தக் குழந்தைகளைக் கவனிக்கவில்லை. தன் கணவன் அங்கு வந்து சேர எந்த ரயில் சரியாக இருக்கும் என்று கேட்டுக் கொண்டு, பல சந்தேக நிர்த்திகள் செய்து கெண்டிருந்தாள்.

"குழந்தைக்கு மையிடட்டுமா மாமி? மையிட்டால் அவருக்குப் பிடிக்குமா, மையிடாவிட்டால் பிடிக்குமா என்று தெரியவில்லை. புண்ணியாவசனத்திற்கு வந்த போது, என்ன சொன்னார் என்று நினைவில்லை! எங்கே வந்தார், ஒரு வார லீவில்! ஒரு நாள் தான் இருந்தார். இந்த விசை தீபாவளிக்கு நான் அவரை அங்கே வரச் சொல்லாத காரணமே அதான். மெனக்கெட வருவார், இரண்டு நாள் இருப்பார், மற்ற நாளெல்லாம் அவாத்தில் தான் இருக்கும்படியாகும். எனக்கு என்ன ஆசையென்றால், அப்பா, அம்மா, அகத்துக்காரர் எல்லோருடனும் சேர்ந்து பத்து நாளாவது இருக்கணும் என்பது. நடக்கிறதா?" என்று கணவனிடமிருக்கும் பற்றுதலைப் பற்றி விளக்கும் பவானியை ராஜேசுவரி, வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

அன்றிரவு சத்தியமூர்த்தி வந்து சேர்ந்தார். வரும் பொழுதே, புன்னகை தவழும் வதனமுடன், வெகு நாள் பழகியவர் வீட்டிற்கு வருவது போல ஒருசகஜ பாவமுடன் "வந்தேன், மாப்பிள்ளையின், மாப்பிள்ளை!" என்று சொல்லிக்கொண்டே வாசற்படி ஏறினார். இவர் வரும் பொழுதும் ஆர_த்தி எடுக்கணுமோ என்று விசாலம் ஐயமுன்றுக் கூசியவாறே வரவேற்றாள்.

பவானி முக மலர்ச்சியுடன் கணவனைப் பார்த்து முறுவலித்து, கணவனைத் தொடர்ந்து செல்வதையும், பயணச் சாமான்கள் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் போய், குழந்தைக்கு மையிடும் விஷயமாக தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தைச் சொல்லிச் சிரிப்பதையும், அவர் "நான் எட்டு வயது வரைக்கும் மையிட்டுக் கொண்டே குடுமியைப் பின்னல் போட்டுக் கொண்டேனாம்!" என்று சொல்லுவதையும், 'போதுமே, ஹாஸ்யம்" என்று பவானி அவரைக் கண்டிப்பதையும், ராஜேசுவரி கவனித்தாள். அந்த இளந்தம்பதிகள் கூச்சமில்லாமல் சிரித்து பேசுவது போல, தன் வாழ்விலும் நடக்குமா என்று ஆச்சரியமாயிருந்தது. கணவன் வந்து அரைநாளுக்கு மேலே ஆகியும், ராஜேசுவரி நேருக்கு நேர் ஒரு தடவைகூட, ஒரு கணங்கூட இன்னும் சந்திக்கவில்லையே!

ராஜேசுவரி, பவானியின் கண்களில் மட்டும் தென்படும்படி போய் நின்று, "அக்கா, டிபன் சாப்பிட வரச் சொன்னாள் அம்மா!" என்றாள்.

இந்தக் குரலைக் கேட்டு, பவானியின் மேல் லேசாக உராய்ந்தவாறே, கதவின் பக்கம் வந்து, சத்யமூர்த்தி, "ஓகோ, உன் மதனியா? யாருடாப்பா, குழந்தை மாதிரி பேசுகிறார்களே என்று பார்த்தேன்! ஏனம்மா, உன் அம்மா மட்டும்தான் கூப்பிடுகிறாரா? அப்பாவும் கூப்பிடணும், உன் அகத்துக்காரரும் கூப்பிடணும், நீயும் கூப்பிடணும்! போய்ச் சொல்லும்மா! அடடே, குழந்தை என்று சொல்லி விட்டு நானே 'அம்மா' போடுகிறேனே!"

ராஜேசுவரி பவானியைப் பார்த்து புன்னகைத்தாள். இதற்குள் நடராஜன் சிரித்தவாறே தோன்றினார்.

"பசிக்குமே என்று கூப்பிடத்தான் வந்தேன். பசி தெரியவில்லை போலிருக்கு என்று இரண்டு தடவையும் போய்விட்டேன். பேசுவதைக் கெடுக்க இஷ்டமில்லை எனக்கு!" என்றார்.

சத்யமூர்த்தி, "சரிதான் சார். எங்களையும் இன்னும் ரகு-ராஜம் மாதிரி எண்ணிவிட்டீர்களா? கொள்ளையாய்ப் பேசித் தீர்த்துவிடுவோம். எல்லோருக்கும் நடுவில்! பயப்படாமல் டிபனுக்கு இழுத்துக் கொண்டு போங்கள் சார்! பசி பசி என்று பசிக்கிறது! வாருமையா ரகுபதி! வாடியம்மா பவானி, உன் கையாலே நெய்யை ஊற்று!" என்று குதூகலமாகப் பேசிக் கொண்டே சமையலறையை நாடிக் கிளம்பினார்.

ரகுபதியைப் பார்த்து, "நீங்கள் நாலு இட்டிலியும், நாலு கரண்டி வெங்காய கொத்சும் போதும் என்றால், மாப்பிள்ளையின் மாப்பிள்ளையான நான் இரண்டு இட்டிலியும் இரண்டே கரண்டி

கொத்சும் போதும் என்று பொய் சொல்ல வேண்டியிருக்குமே ரகுபதி! என் பெயரைக் பொய்த்துப் போகும்படி செய்யணுமே!" என்று சத்யமூர்த்தி சொல்ல, ரகுபதி, "மாப்பிள்ளைக்கு மாப்பிள்ளை நீர், எட்டு இட்டிலி சாப்பிடலாமே ஐயா, சாப்பிடுங்கள்" என்று சொல்லிவிட்டு எழுந்து விட, பவானி, "கைக்குழந்தைக் காரி நான் வெங்காயம் சாப்பிடலாமோ, மாமி! நன்றாய் இருந்தது என்று சாப்பிட்டுவிட்டேனே?" என்று சந்தேகம் கேட்க, விசாலம் தைரியம் கூற, டிபன் அமர்க்களம் ஓய்ந்தது. ராஜேசுவரிக்குப் பசியே இல்லை. உள்ளம் நிறைந்திருந்தது. பவானி தன் கணவரிடம், "மன்னிக்குத் தீபாவளிப் புடவை" என்று ஒரு நீலச் சேலை எடுத்துக் காட்டியதையும், அதை மறுநாள் தீபாவளியன்று தான் உடுத்தப் போவதையும், கணவன் "பொருத்தம் தானா?" என்று உற்றுப் பார்ப்பான் என்பதையும் கற்பனை செய்த ராஜேசுவரியின் காதல் உள்ளத்திலே கவலைகள் எல்லாம் குறைந்துவிட்டன.

பெற்றோரும், மற்றவர்களும், ராஜேசுவரியும், ரகுபதியும் சந்திப்பதற்கு தடை கூறவில்லை. அதுமட்டுமல்ல; சத்யமூர்த்தி, வெகு உரிமையுடன், "வெந்நீர் இறைத்துத் தாம்மா, உன் புருஷனுக்கு," "வெற்றிலை மடித்துக் கொடேன் அகத்துக்காரருக்கு!" என்று அடிக்கடி சொன்னார். நடராஜன் கூட பெண்ணின் பிடிவாதம் கண்டு சினந்து, "மாப்பிள்ளைக்கு இந்தப் பட்சணமும், கங்காஸ்னாமும் கிடைக்காதா ஊரில்? மனைவியுடன் மெள்ள மெள்ளப் பழக்கம் ஏற்பட வேண்டும் என்று வந்தவருக்கு, நல்ல மரியாதை!" என்று சொல்லிவிட்டார்.

பவானியோ, சிறிது மனத்தாங்கலுடன், "இத்தனை பேர் சொல்லித்தான் அகத்துக்காரரிடம் போய்ப் பேசணும் என்று நான் இருக்கவில்லையம்மா! போனேன், கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்னேன், வந்தேன். எங்ககத்துக்காரர் சுபாவம் தனி, மாமி! இத்தனை பேர் சொல்லித்தான் வரணுமா என்று துர்வாசமுனியாய்க் கேள்விகள் கேட்பார். கோபம் வந்தால் தலைகால் தெரியாது!" என்று பவானி சொன்னபோது, ராஜேசுவரி, "பிடிவாதம் கூடாது!" என்று நினைவு கூர்ந்தாள்.

அவளுக்கு மட்டும் ஆசையில்லையா, கணவனுடன் பேச? கூச்சமல்லவா குறுக்கே நிற்கிறது?

எப்படியோ சமாளித்துக் கொண்டு, போனாள். அறைக்குள் நுழைந்ததும், ஏறிட்டுப் பார்த்தாள். அவனும் கண்களாலேயே வரவேற்றான்.

அவளும் ஒரு நாற்காலியில் அமர்ந்தாள். உடனே ரகுபதி எழுந்தான். தனக்கு எதிராக இருந்த கதவுகளில் ஒன்றை ஒருக்களித்துச் சாத்திவிட்டு வந்தாள்.

"டைப்ரைட்டிங்க் கற்றுக் கொள்கிறாயாமே, நல்லது தான்!" என்று சம்பாஷணையைத் துவக்கினான் ரகுபதி. ஆனால் பேசும்பொழுது அவன் அவளை நிமிர்ந்து பார்த்தது ஒரு கணம் தான்.

ராஜேசுவரி மெள்ளச் சிரித்தாள். முகத்திலே வியர்த்துவிட்டதோ என்று அஞ்சி, புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டான்.

"உன் கடிதங்களை ஏன் டைப் செய்யவில்லை?"

"ஏன், கையெழுத்து நன்றாயில்லையா?" என்று ராஜேசுவரி கேட்க விரும்பினாள். அவள் கேள்வியை ஊகித்தவனாக ரகுபதி தொடர்ந்தான் பேச்சு. "கையெழுத்தே ஜோராகத்தான் இருந்தது. என் எழுத்து உனக்குப் புரிந்ததோன்னோ?"

"புரிந்ததனால் தான் பதில் எழுத முடிந்தது!" என்று சொல்ல அஞ்சி, தலையை பலமாக அசைத்தாள் அவள். கணவனின் கடிதங்களிலே வார்த்தை புரியாத இடங்களை புரிந்து கொள்ள, அகராதிகள் உதவின என்று சொல்லவில்லை. தம்பி, விளையாட்டுச் சினிமா போட வைத்திருந்த எட்டணா பூதக் கண்ணாடிதான், எழுத்துப் புரியாத சில இடங்களை புரிந்து கொள்ள உதவின என்றும் அவள் சொல்லவில்லை!

"நேற்று காலை இங்கே வந்து உட்கார்ந்தேன். நீ வருவாய், என்று உன் அப்பா சொல்லியிருந்தார்." ரகுபதி முறுவலித்தான் சொல்லும்பொழுது.

"ஏமாற்ற மேற்பட்டதோ" என்று நாவினால் வினவாமல், நோக்கினாலே வினவினாள் அவள்.

"'பிம்பிள்ஸ் முகத்திலே இருக்கு,' என்று கூசுகிறாள் போலிருக்கு என்று உன் அப்பா அப்புறம் வந்து சொன்னார்."

"ஆமாம்" என்று கூறும் பாவனையில் முகத்தை நன்றாகக் கவிழ்த்துக் கொண்டு விரல்களால் இடது கன்னத்தை ராஜேசுவரி தடவிக் கொண்டாள்.

"கொஞ்ச நாளில் போய்விடும். எனக்கும் கொள்ளையாய் முந்தி."

ராஜேசுவரிக்கு நா எழும்பியது, "சில பேருக்கு முகம் பளிச்சன்னு மாசு மருவில்லாமல் இருக்கும். எனக்கும் முன்னே அப்படியிருந்தது; திடீர்னு...."

"அதற்கெல்லாம் கவலைப்பட்டால் முடியுமா?"

"பேப்பர்களிலே 'அட்வர்டைஸ்' பண்ணுகிற மருந்துகள் எல்லாம் வாங்கலாமோன்னு சந்தேகமாயிருக்கு."

"வாங்கக் கூடாது தான்; நான் இன்னும் கொஞ்சம் உயரலாம் என்று தான் பார்க்கிறேன். அட்வர்டைஸ்மெண்டைப் பார்த்தால் நம்பிக்கையாகத்தான் இருக்கும், ஆனால் அதெல்லாம் சுத்த பாஷ்!"

"மோசமா?"

"ஆமாம்!

சிறிது நேரம் மோனம் நிலவியது.

"போட்டோ அழுக்காகிவிட்டது போலிருக்கே, பாத்தேன் மாட்டியிருக்கிறதை. எங்களிடமிருக்கிற காப்பியைப் பார்த்தால், ஸ்டுடியோவிலிருந்து இப்போ வந்த காப்பி மாதிரி இருக்கும். குழந்தைகள் கிட்டக் கொடுத்தால் வீணாகிவிடுகிறது!" என்று ரகுபதி சொன்னதைக் கேட்டு ராஜேசுவரி, வெட்கிப் போனாள். "குழந்தைகளுக்குத்தான் 'அத்திம்பேர்' என்று எத்தனை ஆசை! கேட்டால் எப்படி எடுத்து தர மறுக்க முடியும்?" என்று யோசித்தபொழுது, வருத்தமும் ஏற்பட்டது. ஆனால் போட்டோ அழுக்கான விவரம் வேறு என்பது அவளுக்குத் தெரியும். திருமணம் முடிந்து வந்ததும், நண்பர்கள் கொள்ளைப் பேர் வந்து போனார்கள். அவர்களுக்கெல்லாம் போட்டோவை காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நண்பர்கள் வந்தால் காட்ட வேண்டும் என்பதற்காகவே, நடராஜன் சட்டம் போடக் கடைக்கு அனுப்பாமல் அதை வைத்திருந்தார். பல கைகள் பட்டுப்பட்டு போட்டோ புதுக்குருக்கு அழிந்து காணப்பட்டது. பிறகு தான் ஒரு நாள் ராஜேசுவரி, வீட்டிலே இருந்த ஒரு பழைய போட்டோவை எடுத்துவிட்டு, அந்தச் சட்டத்தில் அதைப் பொருத்தினாள். சட்டமும் கண்ணாடியும், சற்று பெரிதாயிருந்ததனால், காந்திஜியின் புன்னகை தவழும் முகம், தங்கள் இருவரையும் பார்ப்பது போலவும் அமைத்துவிட்டாள்!

கணவன் அதை ரசிக்காமல், அழுக்காகிவிட்டது என்று கூறியதும், வெட்கமுன்று, பிறகு அதைச் சுவையுள்ள பேச்சாக மாற்ற விரும்பி, "நான் அந்தப் போட்டோ பிரேமைப் போட்டேன்!" என்றாள்.

ரகுபதிக்கு எப்படிப் புரியும் அவள் எண்ணம்?

"போடலாமே, கஷ்டமில்லையே!" என்றான்.

"காந்திஜி நம்மிருவரையும் பார்த்து முறுவலிக்கிறார் என்றும் விதத்தில் அமைத்தேன் நான்" என்று கூற நா எழவில்லை அவளுக்கு. அசட்டுத்தனமான அமைப்பு என்று தோன்றிவிடலாமல்லவா?

கடிதங்களை எழுதும் வண்ணக் காகிதங்களைக் கொண்ட நோட்டுப் புத்தகத்தை இத்தனை நேரமும் கையில் வைத்திருந்த ரகுபதி, அதை அவளிடம் கொடுத்தாள். "லெட்டர் ஹெட் போட்டுக் கொண்டு வரப்பார்த்தேன். என்ன வேலையாகுமோ, என்னமோ, போடவேண்டாம் என்று சும்மாயிருந்துவிட்டேன், " என்று சொன்னான். ராஜேசுவரி, அந்தப் புத்தகத்தின் மஞ்சள் வண்ணத் தாள்களைப் புரட்டியபடியே, "நான் கடிதங்களை இரண்டு தடவை எழுதுவேன், 'ரப்' ஒரு தடவை

'பேர்' ஒரு தடவை. இதிலே 'ரப்' எழுதக்கூடாது என்றாள்.

"இரண்டு பக்கங்களிலும் எழுதலாம். இங்க் பரவாது. நீ, உங்கப்பா டைப் அடிக்க வைத்திருக்கிற காகிதத்தில் எழுதினால் தான் ஒரு பக்கம் எழுதவேண்டும்" என்று சிரித்தான் ரகுபதி.

அப்பா வாங்கிக் கொடுத்த நல்ல காகிதங்கள் 'ரப்' பும் 'பேரு' ம் எழுதி சீக்கிரம் தீர்ந்துவிட்டதனால், மீண்டும் கேட்கக் கூசி, அப்பா வைத்திருந்த காகிதங்களை உருவி எடுத்து இரண்டு மூன்று தடவைகள் உபயோகித்திருந்தாள் ராஜேசுவரி.

பேசிக் கொண்டிருக்கும் பொழுது அடிக்கடி, கதவுப் பக்கம் கலவரத்துடன் பார்த்தாள் ராஜேசுவரி. ஒரு தடவை, அப்படிப் பார்த்தபடி, திடீரென்று கையை ஓங்கி, முகத்தை சுளித்தாள். ரகுபதி, "என்ன சேஷ்டை?" என்று புருவத்தை உயர்த்திப் பார்த்தால், ராஜேசுவரி, கதவின் வெளிப்புறம் மெல்ல வந்து நிற்கும் தம்பியைப் பார்த்து சைகையால் மிரட்டுகிறாள் என்பது புரிந்தது.

"பாட்டு வாத்தியார் வந்துவிட்டார்" என்று செய்தி சொல்ல வந்திருந்தான் தம்பி.

சடாரென எழுந்து, "போறேன்" என்று கிளம்பிவிட்டாள் ராஜேசுவரி. வாத்தியார் கூடத்திற்குள் வந்து விடுமுன் பாயையும் சுருதி பெட்டி, பிடில்கள் எல்லாம் எடுத்து வைத்துவிட்டாள்.

"அக்கா வருகிறீர்களா?" என்று பவானியை அழைத்தாள். "நீ இஷ்டப்பட மாட்டாயோ என்று தான் நான் உள்ளே வந்துவிட்டேன். வாத்தியார் வந்ததைப் பார்த்துவிட்டுத்தான் வந்தேன்" என்றாள் பவானி.

"வாத்தியார் இருக்கும்பொழுது எனக்கு பயம் இல்லை அக்கா!" என்று விழிகளைத் தாழ்த்திக் கொண்டு பதிலளித்தாள் ராஜேசுவரி.

"புக்கத்துக்குக் கூட வாத்தியார் வரணும் என்பாயோ?" என்று பவானி கேட்டபொழுது, ராஜேசுவரி ஆச்சரியப்படவில்லை. உள்ளூரிலேயே இந்தக் கேள்வியை எத்தனை பேர் கேட்டதில்லை? "சுருதி பெட்டி கூடக் கூட எடுத்துப் போக முடியுமா? வாத்தியார்தான் கூடக் கூட தொடர முடியுமா?" என்று பலபேர் கேட்டதுண்டு. அதனால் ராஜேசுவரி, கலங்காமல், வாத்தியாரைக் கண்டதும் போய் உட்கார்ந்தாள்.

ஆனால் விசாலத்திற்கு மட்டும், பவானியின் கேள்வியில் ஒரு மாறுபட்ட அபஸ்வரத் தொனி புலனாகவே, அவள் குழந்தை ஏதோ பயத்தில் மணப்பந்தலில் அசட்டுத் தனம் செய்து விட்டதை, சின்னப் பெண்ணாகிய பவானி இத்தனை பாராட்ட வேண்டாமே!" என்று கலங்கினாள். பவானியைப் பார்த்து, "நாமும் கேட்போம், பவானி. பயப்படாமல் சுருதியோடு பாடவேண்டும் என்று தினமும் ராஜேசுவரி பாடிப் பழகுகிறாள். முன்பு, மஞ்சள் குங்குமத்திற்குப் போனால் கூட பயப்படுவாள். இப்பொழுது அப்படியில்லை" என்று கூறினாள்.

பவானி, சுமுகமாக வந்தாள். ரகுபதியும், சத்யமூர்த்தியும், நடராஜனும் சற்று தொலைவில் உட்கார்ந்திருக்க, பவானி குழந்தையைக் தாங்கி அமர்ந்திருக்க, ராஜேசுவரி கூச்சம் குறைத்து, துணிவை வளர்த்துத் தென்புடன் பாடினாள். பிடிலையும் வாசித்தாள்.

சரஸ்வதி ராக கீர்த்தனையொன்றை ராஜேசுவரிப் பாடியதை மிகவும் ரசித்தார் சத்யமூர்த்தி. "நான் இதுவரை கேட்டதில்லை இந்தத் கீர்த்தனம்; வெகு சுகமாயிருந்தது," என்று சொல்லிவிட்டு, அதன் சரணத்தைப் பாடிப் பார்க்கத் தொடங்கிவிட்டார்.

சர்மா வாத்தியார் வாசித்தார். சத்யமூர்த்தி சரஸ்வதி ராகம் பாடத் துவங்கி, ராகமாலிகை ஒன்றை சிருஷ்டி செய்து பாடிவிட்டார். ராஜேசுவரி, சத்யமூர்த்தியைப் பார்த்து, "கஸ்தூரி திலகம்" என்ற சுலோகம் பாடச் சொன்னாள். "சியாமளா தண்டகம் பாடுங்கள்!" என்றாள் பவானி.

இருவர் பக்கமும் பார்த்துத் தலையசைத்த சத்யமூர்த்தி, தாம் பாடிக் கொண்டிருந்த தமிழ் விருத்தத்தை முடித்துவிட்டு "கஸ்தூரி திலகம்" என்று பேகடாவில் துவங்கிவிட்டார். அதை உன்னிப்பாக கவனித்துக் கொண்டு, ராகங்களை கண்டு பிடிக்க முயன்று கொண்டிருந்த ராஜேசுவரி, பவானியின் முகத்தை கூர்ந்து பார்க்கவில்லை. பார்த்திருந்தால், கலங்கியிருப்பாள்.

மணங்கமழ், "கஸ்தூரி திலகம்" சர்மாவின் உள்ளத்தை புல்லரிக்கச் செய்தது. "ஆஹா என்ன ராகவிந்நியாசம்! அழகே அழகு, நீங்கள் பாடிய தன்யாசி!" என்று புகழ்ந்துரைக்கும் சமயம், பவானி, "சியாமளா தண்டகம் பாடப் போகிறீர்களா என்ன?" என்று கேட்டபோது தான் ராஜேசுவரி பவானியைப் பார்த்தாள். பவானியின் குரலில் ஒலித்த அதிகார உரிமை கண்டு ஒரு கணம் திகைத்தாள். மறுகணம், "மாணிக்ய வீணாம்" என்று பைரவியில் சத்யமூர்த்தி பாடத் தொடங்கியதும் இசையில் ஈடுபட்டுவிட்டாள். சத்யமூர்த்தியின் குரல், சாதகமின்மையாலும், இயற்கையான இயல்பாலும் சிறிது கட்டை பாய்ந்து இனிமைக் குறைவாகத்தான் இருந்தது. "இப்படி எல்லோரும் ரசிக்கக் கூடிய அம்சம் என்ன?" என்று நடராஜன் யோசித்தபடி உட்கார்ந்திருந்தார். ரகுபதி, தலையசைத்து ரசித்தான். ராஜேசுவரி, ராகங்கள் கண்டுபிடிக்கும் கவனமாக இருந்தாள். பவானி, மெள்ள ராஜேசுவரியைத் தொட்டு "அவரை இன்னும் பாடச் சொல்ல வேண்டாம்; அவர் பாட்டுக்கு கேட்டதெல்லாம் பாடிக் கொண்டே போவார். தொண்டை கட்டிவிடும், இன்னும் ரயிலில் போயாகணும் ஊருக்கு" என்றாள்.

"சரி, அக்கா" என்று ஒப்பினாள் ராஜேசுவரி. "சாயங்காலே வனாந்தே" என்ற _லோகம் பாடச் சொல்ல எண்ணியிருந்தாள். அதைக் கைவிட்டாள்.

சர்மா, சத்யமூர்த்தியைப் பாராட்டிவிட்டு, "நீங்கள் கீர்த்தனைகளை உங்கள் மனைவியிடமிருந்து கற்றுக் கொண்டு விடலாமே!" என்று யோசனை கூறினார். பவானியைப் பார்த்து, "பாடுகிறாயாம்மா, இரண்டு பாட்டு! பாடு!" என்றார். ராஜேசுவரியும் சொன்னாள். ஆனால் பவானி, பாட மறுத்தாள். "தொண்டையெல்லாம் புண்" என்று காரணம் சொன்னாள். பாட மறுக்காதவள் மறுக்கிறாள் என்பதனால் அவளை யாரும் அதிகம் வற்புறுத்த முடியவில்லை.

**********